# களத்தில்

இப்போது நாங்கள் விழிப்புடன் செயற்படத்தவறினால், இத்தனை ஆண்டு காலமாக நாம் செய்த தியாகங்கள், நாம் புரிந்த சாதனைகள், நாம் அடைந்த வெற்றிகள், நாம் அனுபவித்த துன்ப துயரங்கள், நாம் கொடுத்த உயிர் விலைகள், பொருள் இழப்புக்கள் எல்லாமே அர்த்த மற்றவையாகப் போவதுடன், நாம் மீண்டும் அடிமை வாழ்வுக்குள் தள்ளப்பட நேரிடும்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (12.02.1997) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (128) அன்பளிப்பு: 60 p


# மன்னார் திசை நோக்கிய ஆக்கிரமிப்பில் 20,000 சிங்களப் படையினர்

## ✳ உதட்டளவில் சமாதானம் செயலளவில் இனஅழிப்பு
## ✳ இராணுவ நலனுக்கு தமிழ்ப் பகுதிகள் இலக்கு

**சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா, சிறிலங்காவின் 49வது சுதந்திர தினமன்று "சமாதானத்தை ஏற்படுத்தும் தனது அரசின் முயற்சிகளில் இளைஞர் சமூகம் இணைய முன்வர வேண்டும்" என அழைப்பொன்றை விடுத்தார். அழைப்பு விடுத்த சிலமணி நேரத்தில் 20,000 க்கும் மேற்பட்ட சிறிலங்காப் படையினர் நூற்றுக்கணக்கான இராணுவ வாகனங்களுடன் வவுனியாவில் இருந்து மன்னார் திசை நோக்கி பெரும் ஆக்கிரமிப்புப் போர் ஒன்றைத் தொடங்கியுள்ளனர்.**

இதன்மூலம் தமிழ்ப் பிர தேசங்களின் உட்கட்டு மானங்களை அழிப்பதும் தமிழ் மக்களை இயலுமான அளவு இனப்படுகொலை, இனத் துன்புறுத்தல், இன அழிப்பு களுக்கு உள்ளாக்குவதன் மூலம் தமிழ் மக்கள் மீதான நிரந்தரமான ஆக்கிரமிப்பு ஒன்றை நிறுவ முற்படுவதே சமாதானத்துக்கான தனது அரசின் திட்டம் என்பதைச் சந்திரிகா தெட்டத் தெளிவாக உலகுக்கு விளக்கியுள்ளார்.

மேலும் நூற்றுக்கணக்கான இராணுவ வாகனங்களின் நகர்வுடன் தொடங்கப்பட்ட இந்த 'மக்கள்' மீதான - சர்வதேசச் சட்டங்களுக்கு எதிரான - இம் முற்றுகையில், இதன் இலக்கு மர்மமாக வைக்கப்பட்டிருப்பினும் - இப் படையெடுப்பானது இராணுவத் தினருக்கான தரைவழி விநியோகப் பாதையை

தொடர்ச்சி 2ம் பக்கம்...

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தேசிய இனப் போராட்டமாக அங்கீகரிக்குக!

**- பல்லாயிரக்கணக்கான தமிழக மக்கள் இந்திய அரசிடம் கோரிக்கை**

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தேசிய இனப் போராட்டமாக அங்கீகரிக்கக் கோரியும், சிறிலங்காப் படைகள் அனைத்தையும் பாரம்பரியத் தமிழீழ மாகாணங்களிலிருந்து விலக்கிக் கொள்ளுமாறும் - போர் நிறுத்தத்தைச் செய்யு மாறும் சிறிலங்காவை வற்புறுத்தக் கோரியும் தமிழக மக்கள் இந்திய மத்திய அரசிடம் பலமான கோரிக்கைகளை விடுத்துள்ளனர். இக் கோரிக்கைகள், ஏழு இலட்சத்திற்கும் அதிகமான தமிழக மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்ட "ஈழத்தமிழர் பாது காப்பு மாநாட்டின்" இறுதியில் சென்னைக் கடற்கரைச் சீரணி அரங்கில் மாசி மாதம் 1ஆம் திகதி மாலை நிறை வேற்றப்பட்டன.

### பிரமாண்டமான பேரணி

மாசி மாதம் 1ஆம் திகதி சென்னை சைதாப்பேட்டை மறைமலை அடிகள் பாலத் திலிருந்து 914 ஊர்வல வாகனங்களுடன் 7 இலட்சத் திற்கும் அதிகமான தமிழ் மக்கள், சென்னை கடற்கரைச் சீரணியை நோக்கி, பாட்டாளி மக்கள் கட்சியினரின் தலைமையில் பேரணியாகப் புறப்பட்டனர். பாட்டாளி மக்கள் கட்சியின் வட சென்னை மாவட்டச் செயலாளர்

தொடர்ச்சி 2ம் பக்கம்...

# கொலைகாரனுக்குப் பிரார்த்தனையா லண்டனில் தமிழர்கள் கண்டனக்குரல்

**04-02-97** அன்று பிரித்தானியா வாழ் சிங்கள மக்களால், சிறிலங்காவின் 49 வது சுதந்திர தினத்தை கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. தமிழீழ மக்களின் அமைதியைக் கெடுத்து, "போர் என்றால் போர், சமாதானம்




யொட்டியும் 'கிழட்டு நரி' என அழைக்கப்பட்ட தமிழினப் படுகொலைஞனான ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் ஞாப கார்த்தத்தை முன்னிட்டும் London westminster cathedral தேவாலயத்தில் அமைதிப் பிரார்த்தனைக் கூட்டமொன்று நடாத்தப்பட்டது. இதில் ஏறத்தாழ 30 பேர் மட்டுமே என்றால் சமாதானம்" என்று கோசமிட்டபடியே, பல்லாயிரக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்களின் உயிரைக் குடித்த இனவெறியனின் பெயரால் நடாத்தப்பட்ட இவ் அமைதிப் பிரார்த்தனையை எதிர்த்து, அதே தேவாலய முன்றலில் தமிழ்

தொடர்ச்சி 2ம் பக்கம்...

## உள்ளே... ☞


- தாயகம் நோக்கிய ...
- நீண்ட நெருப்பாற்றில்.. நெஞ்சம் மறப்பதில்லை ... (நடுப்பக்கம்).
- விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுப் பரப்புரையும்...
- கனடா (நீதிமன்ற) வழக்கு....
- கவிதைக்களம் ...
- சர்வதேசக்களம்.....
- தமிழீழச் செய்திகள்...
- மக்கள் பணியில் த.பு.க.(TRO)
- போரும் பொருண்மியமும்...
- இன்னும் உள்ளே இருட்டு... (சிறுகதை)




# வன்னி விவசாயிக்கு ஐ. நா விருது

ஐக்கிய நாடுகள் உணவு விவசாய நிறுவனம் (FAO) தனது 50வது ஆண்டு நிறைவையொட்டிய "சிறந்த நெல் விவசாயி" க்கான விருதை தமிழீழத்தின் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த நெடுங்கேணி விவசாயியான திரு. கந்தையா முத்துக்கு மாருக்கு வழங்கியுள்ளது.

நெல் விதைப்பில் திரு. கந்தையா முத்துக்குமாரு நவீன - புராதன முறைகளின் தொகுப்புக்களை வெற்றிகரமாகக் கையாண்டு அதிக விளைச்சலைப் பெற்றமைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

சிறந்த மீன் பிடிப்பாளருக்குரிய விருது பிலிப்பைன்ஸ் தேசத்தவர் ஒருவருக்கும், சிறந்த கால்நடை

தொடர்ச்சி 2ம் பக்கம்...

# மாவடி வேம்பு இராணுவ முகாம் தகர்ப்பு 30 இராணுவத்தினர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவடி வேம்பு இராணுவ முகாம் தாக்கியழிக்கப்பட்டு 30 இராணுவத்தினர் பலியாகியுள்ளனர். இம் மாதம் 2ஆம் திகதி அதிகாலை ஒரு மணியளவில் புலி வீரர்களால் நடாத்தப்பட்ட சொற்ப நேரத் தாக்குதலில் முகாம் கைப்பற்றப்பட்டு அங்கிருந்த சகல ஆயுத தளபாடங்களும் அள்ளப்பட்டன.

இத் தாக்கியழிப்பின்போது, மற்றைய சிறிலங்கா முகாம்களில் இருந்து உதவி கிடைக்காதவாறு சித்தாண்டி, ஏறாவூர், வாழைச்சேனை முகாம்கள் ஏக காலத்தில் விடுதலைப் புலிகளின் மோட்டார் தாக்குதலுக்கு இலக்காகின. இந்த மோட்டார் தாக்குதல்களினாலும் ஒரு இராணுவ அதிகாரி உட்பட 3

தொடர்ச்சி 2ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

# நாளொன்றுக்கு 1.6 கோடி ரூபா இழப்பு 609 படையினர் 3 வாரத்தில் பலி

இவ்வாண்டு பிறந்த முதல் மூன்று வாரத்தில் சிறிலங்காப் படையினர் 33.64 கோடி ரூபாவுக்கும் மேலான இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். மேலும் 609 படையினரை இம் மூன்று வாரத்துள் சிறிலங்கா பறிகொடுத்துள்ளது. 3250 படையினர் காயமடைந்துள்ளனர்.

இத் தகவல்களை கொழும்பில் இருந்து வெளிவரும் 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை வெளியிட்டுள்ளது.

இவ் இழப்புக்களில் சிறிலங்கா விமானப் படையே மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள அப் பத்திரிகை, சிறிலங்கா விமானப்படைக்கு மூன்று வாரத்தில் 29.64 கோடி ரூபாக்களுக்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளது எனக் கூறுகிறது. சிறிலங்காவின் இழப்பு நாளொன்றுக்கு 1.6 கோடி ரூபாவாக கணிக்கப்பட்டுள்ளதென்றும் அப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. ✷

# கொலைகாரனுக்குப் பிரார்த்தனையா ...

மக்கள் காலை 10.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரை சுலோக அட்டைகள் தாங்கியவண்ணம், 'விழிப்புப் போராட்டம்' ஒன்றை நடாத்தியு ள்ளனர். சுலோக அட்டைகளில் ஜே.ஆர் ஜெயவர்த்தன தமிழ் மக்களுக்குச் செய்த அரசியல் துரோகங்களை, செய்த சூழ்ச்சிகளை, தமிழினப் படுகொலைகளை வெளிப்படுத்தும் வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவற்றுள்:

"ஜெயவர்த்தனவே 11 ஆண்டுகள் தமிழர்கள் மேல் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டவர்", "ஜெயவர்த்தனவே யூலை 83 இன் தமிழர்கள் மீதான காடைத்தனத்தின் சூத்திரதாரி", "பெப்ரவரி 4 என்பது தமிழர்களுக்கு எவ்வித அர்த்தத்தையும் கொடுக்கவில்லை", "சிங்களவருக்குச் சுதந்திரம்–தமிழர்கள் நசுக்கல்", "சமாதானத்திற்காகப் பிரார்த்திப்போம் – கொலைகாரனுக்கு பிரார்த்தனை செய்யத்தேவையில்லை" என்பன முக்கியமானவை.

சில சர்வதேசப் பத்திரிகையாளரும் பொது மக்களும் இவ்விழிப்புப் போராட்டத்தின் நோக்கம் பற்றியும் சுலோகங்களில் எழுதப்பட்ட வாசகங்கள் பற்றியும் விளக்கமாகக் கேட்டு அறிந்து கொண்டனர். ✷

# மாவடி வேம்பு இராணுவ முகாம்...

படையினர் படுகாயமடைந்ததாக சிறிலங்கா இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சில மணி முன்னதாக வெல்லாவெளி காவலரண்கள் அழிப்பு

மாவடி வேம்பு முகாம் தாக்கியழிக்கப்படுவதற்கு முன்னதாக, நள்ளிரவு 11 மணியளவில் வெல்லாவெளியில் அமைந்திருந்த இராணுவக் காவலரண்கள் மீதான விடுதலைப் புலிகளின் அதிரடிப் படையணியின் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. பத்து நிமிடத்திற்குள் நடாத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் ஆறு இராணுவக் காவலரண்கள் முற்றாகத் தகர்த்தெறியப்பட்டு பதினைந்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பல இராணுவத்தினர் காயங்களுடன் ஓடித் தப்பித்ததாகவும் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன. எல்.எம்.ஜி. உட்பட பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்ட இவ் வெற்றிகரமான தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் லெப். இனியவன் வீரச்சாவடைந்துள்ளார். கடந்த 30ஆம் திகதி இதேபகுதியில் எதிரிப் படைகளுடன் எதிர்பாராமல் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த லெப். பிரகலாதன், 2ஆம் லெப். கலைச்செல்வன் ஆகிய இரு மாவீரர்களின் நினைவாகவே இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. ✷

# மன்னார் திசை நோக்கிய ...

உருவாக்குவதற்கான நோக்கினைக் கொண்டுள்ளதாக வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு முறையும் சிறிலங்காவின் இராணுவ நலன்களுக்காக – அப்பாவித் தமிழ் மக்களின் பிரதேசங்களும், உடமைகளும், உயிர்களும் இராணுவ இலக்காக்கப்படும் சிறிலங்காவின் இச் செயல்முறைகளினால் சிறிலங்கா அரசு – தமிழ் மக்களின் அந்நிய அரசு என்பது உலகுக்கு ஐயந்திரிபின்றி நிரூபிக்கப்பட்டு வருகிறது.

அத்துடன் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல்களை தொடர்ச்சியான இராணுவத் தோல்விகளுக்கு மத்தியில் தன்து கட்சி எதிர்கொள்ளுமானால், அது பாதகமாக அமையும் எனும் கட்சி நலனின் மேலுள்ள அக்கறையினாலேயே, எப்படியாவது தமிழ்ப் பகுதிகள் மீது தனது ஆக்கிரமிப்பு ஒன்றைப் புதிதாக நிறுவிக் கொள்வதன் மூலம் உள்ளூராட்சித் தேர்தல்களில் சாதக நிலையை உருவாக்கலாம் எனும் நப்பாசையே சந்திரிகா அரசின் இப் புதிய ஆக்கிரமிப்பு முயற்சியின் நோக்கு என கொழும்பு அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இதன்மூலம் தமிழ் மக்களுக்கு அமைதியும் – பாதுகாப்பும் வழங்கும் நோக்கு தனக்கில்லை என்பதை சிறிலங்கா அரசு மீண்டும் மீண்டும் நிரூபிப்பதினால் சிறிலங்கா அரசு – ஐக்கிய நாடுகள் சபையின் சட்டங்களுக்கு ஏற்ப – தமிழ் மக்கள் மீதான சட்டவிரோத அரசாக இயங்குகிறது என சர்வதேசத்திலும் வாழும் புலம்பெயர் தமிழர்கள் சர்வதேச உலகுக்கு எடுத்துரைக்கின்றனர்.

### செட்டிக்குளம் பகுதியில் கடுங் குண்டுவீச்சுத் தாக்குதல்

செட்டிக்குளம் பகுதிகளில் உள்ள தமிழ் மக்களின் குடியிருப்புக்கள் மீது கடுமையான குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதையடுத்து அப்பகுதி எரிந்து கொண்டிருப்பதாகவும், அப் பிரதேசம் முழுவதும் ஒரே புகை மண்டலமாகக் காட்சி அளிப்பதாகவும் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கிளிநொச்சியிலும் குண்டுவீச்சு

கிளிநொச்சி மீது பெரும் சத்தத்துடன் பறந்த புக்காரா விமானம் மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டுகளை கண்மூடித்தனமாக வீசியுள்ளது. இக் கொடிய தாக்குதலில் 28 வயதான சடாச்சரம் பேரின்பராஜன், 11 வயதான சிறுவன் கருப்பையா சிறிஸ்குமார் ஆகிய தமிழீழ மக்கள் உயிரிழந்ததுடன் மேலும் 9 தமிழீழக் குடிமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் 5ஆம் திகதி அதிகாலை நித்திரையில் இருந்த தமிழ்ப் பொதுமக்கள் மீது ஆனையிறவு இராணுவ முகாமில் இருந்து அகோர எறிகணைத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதேவேளை 5ஆம் திகதியன்று விடுதலைப் புலிகள் ஆனையிறவு முன்னரங்க காவல்நிலைகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் மீது பலத்த மோட்டார் தாக்குதல்களை நடாத்தியுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### முல்லைத்தீவில் எறிகணைத் தாக்குதல்

இதற்கிடையில் 3ஆம் திகதியன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் செறிவுமிகு பகுதிகள் மீது மணலாற்றில் நிலைகொண்டுள்ள சிறிலங்காப் படையினர் காலை 9.30 மணியளவில் நடாத்திய எறிகணைத் தாக்குதல்களினால் பள்ளிக்கூடங்கள், பொதுச் சந்தைகள் மற்றும் பொது அலுவலகங்கள் ஆகியவற்றில் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொதுமக்களும் பள்ளிச் சிறுவர்களும் நாலாபுறங்களும் சிதறி ஓடி பாதுகாப்புத் தேடிக் கொண்டமையால் அதிஸ்டவசமாக உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. ஓர் கட்டிடம் முழுமையாகச் சேதமடைந்தது.

### முன் நடவடிக்கையா?

இதற்கிடையில் வவுனியாவில் சில நாட்களாக பெருமளவிலான கவச வாகனங்கள், டாங்கிகள், புல்டோசர்கள், அம்புலன்ஸ் வண்டிகள் என்பன குவிக்கப்படுவதாகவும் பெரும் இராணுவ நடவடிக்கை ஒன்றுக்கான ஆயுத்தங்கள் பெருமளவில் மேற்கொள்ளப்படுவதாகவும் சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இந்தப் பாரிய நடவடிக்கையை இலகுவாக்குவதற்கான முன் நடவடிக்கையாகவே மன்னார் நோக்கிய இந்தப் புதிய தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன எனவும் எதிர்வு கூறப்பட்டு வருகிறது.

உணவு ஆயுதமாக்கப்படுகிறது

இது இவ்வாறிருக்க, வழமை போல் இம்முறையும் சிறிலங்கா அரசு, உணவை ஆயுதமாக்கும் தனது சர்வதேச சட்டங்களுக்கு எதிரான செயற்பாடுகளை எவ்விதத் தயக்கமுமின்றி ஆரம்பித்துள்ளது.

உணவு ஏற்றிவந்த 30 வாகனங்கள் பயணத்தைத் தொடர முடியாதவாறு தாண்டிக்குளத்தில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. வாகனச் சாரதிகள், உதவியாளர்கள் வேப்பங்குளத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

### விடுதலைப் புலிகளைச் சண்டைக்கு இழுக்கும் முயற்சியா?

வன்னிப் பிரதேசத்திலும் தென் தமிழீழத்திலும் பெரும் பலத்துடன் காணப்படும் விடுதலைப் புலிகளை சண்டைக்கு இழுத்து இராணுவ வளங்களைத் திசைதிருப்புவதற்கான முயற்சியாக இந்தப் படையெடுப்பு தொடங்கப்பட்டுள்ளதா என்ற ஊகமும் கொழும்புப் பத்திரிகைகளினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

### பாரிய போரிற்கான

### கொழும்பிலும் நகராதவாறு தடை

இதேவேளை சிறிலங்காவின் சுதந்திர தினமான இம் மாதம் 4ஆம் திகதி முதல் ஏராளமான தமிழ் இளைஞர்களும் தமிழீழப் பெண்களும் காரணம் ஏதுமின்றிக் கைதாக்கப்பட்டு வெலிக்கடைச் சிறையில் தொடர்ந்து சிறை வைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய அச்சுறுத்தல்களால் தமிழ் மக்கள் கொழும்பிலும் அதனைச் சுற்றிய பகுதிகளிலும் நடமாடும் சுதந்திரம் கூட அற்றவர்களாகத் தவிக்கின்றனர். ✷

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ...

வி. ஞானம் பேரணியைத் தொடக்கி வைத்தார். தென் சென்னைச் செயலாளர் ஏ.கே. மூர்த்தி பேரணிக்குத் தலைமை தாங்கினார். மத்திய சென்னைச் செயலாளர் என். வாசுதேவன் பேரணியை வழிநடாத்திச் சென்றார்.

இசைக் கருவிகளின் வாத்திய அணி முன்னே செல்ல, தமிழக மக்களுடைய இவ் எழுச்சி ஊர்வலம் ஆரம்பமாகியது. தலைவர்கள் ஊர்வலத்தைப் பார்வையிடவென, அமைக்கப்பட்ட மேடை படகு வடிவில் அமைக்கப்பட்டிருந்தது.

தேனாம்பேட்டையில் அமைக்கப்பட்டிருந்த பிரமாண்ட மான இந்த அலங்கார மேடையிலிருந்து பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் கலாநிதி ராமதாஸ், அதன் தலைவர் பேராசிரியர் தீரன், பொதுச் செயலாளர் தலித் எழில்மலை, கட்சித் தலைமை நிலையச் செயலாளர் முத்துக்குமார், முன்னாள் மத்திய அமைச்சரும் சமதா கட்சித் தலைவருமான ஜார்ஜ் பெர்னான்டஸ், ஆபிரிக்க ஈழத் தமிழர்கள் தலைவர் கோ. மு. வீரபத்திரன், மார்க்சிச பெரியாரின்

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

### வன்னி விவசாயிக்கு...

வளர்ப்பாளருக்குரிய விருது தாய்லாந்து நாட்டவர் ஒருவருவக்கும் வழங்கப்பட்டுள்ளது.

1994ஆம் ஆண்டில் திரு. கந்தையா முத்துக்குமாருவின் விவசாய சாதனைகளுக்காக, தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள், திரு. முத்துக்குமாருக்கு தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. ✷

# வரலாற்றை மாற்றுவோம்

வவுனியாவிலிருந்து மன்னார் திசை நோக்கிய சிறிலங்காவின் புதிய ஆக்கிரமிப்புச் செய்திகள், மாசி மாதத்து முதற் செய்தியாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. சிறிலங்காவின் 49வது சுதந்திர தினமாகிய மாசி 4ஆம் திகதியன்று, "சமாதானத்தை ஏற்படுத்தும் தமது அரசின் முயற்சிகளில், இளைஞர் சமூகம் இணைய முன்வர வேண்டும்" என சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா, அழைப்பு விடுத்த சில மணி நேரத்தில் சிறிலங்காப் படையினர் ஆக்கிரமிப்புப் படையெடுப்பைத் தொடங்கியுள்ளனர். தமிழ் மக்களை ஆயுத படைபலம் கொண்டு அச்சத்துக்குள்ளாக்கி அவர்களைப் பணிய வைத்து, அடக்குமுறை ஆட்சிக்குட்படுத்துவதே தனது அரசின் சமாதானத்தை ஏற்படுத்தும் வழி என்பதைச் சந்திரிகா, வவுனியாப் படையெடுப்பு மூலம் தெளிவாக்கியுள்ளார். போரின் விளைவுகளால் ஆக்கிரமிப்புப் போரை வெறுக்கத் தொடங்கியுள்ள சிங்கள இளைஞர்களிடையே, உற்சாகமும் விருப்பும் ஏற்படுத்தும் முயற்சியாகவே சந்திரிகா அம்மையார், இளைஞர் சமூகத்தைத் தம் பணியில் இணைய அழைப்பு விடுத்துள்ளார். "போர் வழியே சந்திரிகாவின் சமாதான வழி" என்பதும், அப் பணியில் சிங்கள இளைஞர்கள் இணைந்து போர் மூலமான தீர்வுக்கு உறுதுணை புரிய வேண்டும் என்பதுமே சந்திரிகாவின் சுதந்திர தின அழைப்பாக அமைகிறது.

இது வெறும் அழைப்பு மட்டுமல்ல. இதுவே இலங்கைத் தீவின் காலனித்துவத்தின் பின்னுள்ள உள்நாட்டுக் கொள்கையாகவும் உள்ளது. அதாவது, காலனித்துவம் உருவாக்கிய ஒற்றையாட்சி முறையில், சனத்தொகை ரீதியாகத் தனக்குக் கிடைத்த பெரும்பான்மை அமைப்பினைக் கொண்டு சிங்கள அரசுகள், தமிழ் மக்களை அவர்களது சொந்த தாயகத்திலேயே அரசியல் – பொருண்மிய – சமூக வழிமுறைகளூடாக ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கியும், ஆயுதபடைபலம் மூலம் அடக்குமுறைக்கு உள்ளாக்கியும் வருவதே தமிழர் பிரச்சினைக்கான (Tamils question) மூல காரணியாக உள்ளது.

இதனை, இம் மாதம் 1ஆம் திகதி சென்னைக் கடற்கரை சீரணி அரங்கில், தமிழக மக்களின் ஈழத்தமிழர் நிலைகுறித்த மாபெரும் எழுச்சி ஊர்வலத்தின் பின் உரையாற்றிய முன்னாள் இந்திய மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டசும் மிகத் தெளிவாக எடுத்து விளக்கியுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றமே, தமிழ் மக்களுக்கு அமைதியையும் பாதுகாப்பான வாழ்வையும் ஏற்படுத்துவதையே நோக்காகவும் இலக்காகவும் கொண்டது. தொடர்ச்சியாகச் சிங்களப் பெரும்பான்மை அரசுகள், தமிழ் மக்களைப் பொறுத்தவரை கைக்கொண்ட – கைக்கொள்ளும் நடைமுறைகளும் வழிமுறைகளுமே இலங்கைத் தீவில் அமைதியை ஏற்படுத்துவதற்குத் தடைக்காரணியாக உள்ளனவே தவிர, விடுதலைப் புலிகள் அல்ல என்பதை அவர் தெளிவாக விளக்கியுள்ளார்.

தந்தை செல்வநாயகம் அவர்கள், 1975ஆம் ஆண்டு காங்கேசன்துறைத் தொகுதிப் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை இராஜினாமாச் செய்தபின் நடைபெற்ற இடைத்தேர்தலை, தமிழ் மக்கள் புதிய குடியரசுத் திணிப்பையும் சிறிலங்கா எனும் அரசையும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பதற்கான விருப்பை வெளிப்படுத்தும் தேர்தலாகப் பகிரங்கப்படுத்தியுடன், அத்தேர்தலில் அமோக வாக்குகளினால் வெற்றியும் பெற்றார். அதன் பின், சிறிலங்காப் பாராளுமன்றத்தில் சிறிலங்காவின் ஆட்சியை நிராகரித்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் பிரகடனத்தை விடுத்தபோது, "தமிழ் மக்களதும் சிங்கள மக்களதும் இறைமைகள் (காலனித்துவத்தால்) பொதுவானதாக மாற்றப்பட்டமையே தமிழர் பிரச்சினைக்கான மூலகாரணி என்பதை உலகிற்கும் சிங்கள மக்களிற்கும் தெளிவாக எடுத்து விளக்கினார்.

தமிழ் மக்களின் இறைமையை ஏற்க மறுத்து, சிறிலங்கா அரசு தமிழ் மக்கள் மேல் தொடுத்த ஆக்கிரமிப்புப் போரே, இன்றுவரை தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்கள் தங்களது உயிரையும் உடைமையையும் தாயகத்தையும் பாதுகாப்பதற்கான முயற்சியினைத் தொடர வைத்து வருகிறது.

ஆனால், சிறிலங்கா அரசினது நோக்கு – அன்றும், இன்றும், என்றும் எப்படியாவது – எவ்வழியிலாவது தமிழீழத் தேசத்தின் இறைமையை ஆக்கிரமித்து, தமிழீழ மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவோ அல்லது நாடற்றவர்களாகவோ மாற்ற வேண்டும் என்பதாகவேயுள்ளது. அதனாலேயே, சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்பு உணர்வும் அதன் விளைவான ஒடுக்கு முறைகளும் இங்கு முதன்மை பெற்று வருகிறது.

இந்நிலையில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தின் நியாயத்தையும் தேவையையும் சர்வதேச நாடுகளுக்கு உணரவைத்து, தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை, "தேசிய இன விடுதலைப் போராட்டமாக" அங்கீகரிக்க வைப்பதன் மூலமே, சிறிலங்காவின் ஆக்கிரமிப்பு உணர்வுக்கு அரசியல் ரீதியாக முற்றுப் புள்ளி வைக்கலாம்.

இதையே சென்னையில் கூடிய தமிழக மக்களின் எழுச்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களும் வெளிப்படுத்தியுள்ளன. வெளிநாடுகளில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை, தேசிய இன விடுதலைப் போராட்டமாக அங்கீகரிக்க வேண்டுமென நாம் கோருகின்ற அதேவேளை, இலங்கைத் தீவில் குறிப்பாகத் தமிழரின் பாரம்பரிய தமிழ் மாகாணங்களில் சிறிலங்கா ஆக்கிரமித்துள்ள எல்லா நிலைகளில் இருந்தும் அது தன் படைகளை விலக்கி, போர் நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுக்களை உடன் தொடங்க, அதன் மேல் நெருக்கத்தை ஏற்படுத்தும்படி உலக நாடுகளையும் சர்வதேச மக்களையும் நாம் பலமாகக் கோரவேண்டிய நேரமிது. ஏனென்றால், ஆக்கிரமிப்பே இனப் பிரச்சினைக்கான தீர்வு எனக் கூறும் சந்திரிகா, சர்வதேசச் சட்டங்களுக்கு எதிராகச் செயற்படுவதன் மூலம், அவர் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல – உலகின் அமைதிக்கும் சமாதானத்திற்கும் கூடத் தீங்கு விளைவிப்பவராகவே வளர்ந்து வருகிறார்.

இதனை எதிர்த்துப் போராடும் எமது மக்கள் வாழ்வதற்கான நிதியும் மதியும் அளிப்பதும், அவர்களது மன உறுதியையும் நியாயத்தையும் சர்வதேசப்படுத்துவதும் ஒவ்வொரு புலம் பெயர்வாழ் தமிழனின் இன்றைய காலக்கடமையாக உள்ளது. தமிழீழ மக்களை ஆக்கிரமித்து, அவர்களை அடக்குதல் என்ற சிறிலங்கா அரசின் வரலாற்றை மாற்றி – தமிழ் மக்களின் தன்மான உணர்வாகத் திகழும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து நாம் எம் வரலாற்றை மாற்ற உதவுவோம். வரலாற்றை மாற்றுகின்ற வரலாற்றை, முல்லைத்தீவு முதல் பரந்தன் வரை கண்டும் இன்னும் அரசியல் யதார்த்தத்தைக் கற்க மறுக்கும் சிறிலங்காவின் ஆக்கிரமிப்பாளர், தமிழீழ மண்ணின் ஒவ்வொரு அங்குலத்திலும் இதே பாடத்தையே படிப்பர் என்பதை, வரலாறு உணர்த்தும் காலம் வெகு தூரத்திலில்லை. ✷

# பிரித்துவிட முடியாத உறவு

சென்னையில் இடம்பெற்ற ஈழத்தமிழர் மாநாட்டில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கலந்து கொண்டுள்ளனர். இம் மாநாட்டின் ஓர் அங்கமாக நடைபெற்ற பேரணியில் பெருந்திரளாகக் கலந்துகொண்ட மக்கள் ஈழத்தமிழருக்கு ஆதரவாகவும் பெருங்குரல் எழுப்பினர். தமிழக அரசு விதித்த பல கட்டுப்பாடுகளுக்கு இடையில் பாட்டாளி மக்கள் கட்சியினர் ஏற்பாடு செய்த இம் மாநாடானது, இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பாகவும், விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்பாகவும் தமிழகத்தில் காணப்படும் உணர்வுகளுக்குச் சிறப்பான எடுத்துக்காட்டாகும்.

இம் மாநாட்டிலும் பேரணியிலும் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டமை, அவர்களில் பெரும் பான்மையானோர் பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்தவர்களாக இருப்பினும் கூட, ஈழத்தமிழ் மக்கள் விவகாரம் குறித்து அவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டையும் அக்கறையையும் வெளிக்காட்டுபவையாகவுள்ளன. அவ்வாறு இல்லாவிட்டால் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலும் தமிழகத்தின் தென்பகுதிகளில் இருந்து சென்னைக்குச் சென்று அவர்கள் இந் மாநாட்டிலோ அன்றிப் பேரணியிலோ கலந்து கொண்டிருக்கமாட்டார்கள். மறுபக்கமாக, இவர்கள் தமது கட்சி நடாத்திய நடவடிக்கை என்ற ரீதியில் கலந்து கொண்டார்கள் எனக் கருதப்படினும் கூட, தமிழகத்தில் இன்றும் தமிழ் மக்களுக்காக அக் கட்சியின் தலைமையினால் பல்லாயிரக்கணக்கானோரை ஈழத்தமிழருக்கு ஆதரவாக அணி திரட்ட முடிந்துள்ளதென்பதை எவரும் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும். இந்தவகையில், தமிழகத்தில் ஈழத்தமிழருக்கு ஆதரவு என்பது மக்கள் மத்தியில் இழக்கப்படவில்லை. அரசியல் தலைவர்களே தீர்மானம் செய்பவர்களாகும் என்பதும் உண்மை யாகும். அத்தோடு விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகவும் அங்கு கொடுக்கப்பட்ட குரலானது, இன்று தமிழகத்தில், தமிழீழத்திற்காகப் போராடுபவர்களுக்கு ஆதரவாகக் கொடுக்கப்பட்ட குரலேயாகும். இந்தவகையில் அது நேரடியாக இல்லாதுவிடினும், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகக் கொடுக்கப்பட்டுள்ள குரலேயாகும். தமிழக அரசு விடுத்துள்ள பலத்த கட்டுப்பாடுகள் அல்லது மிரட்டல்கள் ஜனநாயக ரீதியில் நோட்டம் நடத்தப்படுவதனை முறிவு செய்யும் வகையினிலேயே புலிகளுக்கான ஆதரவு மாநாடு என நேரடியாக வெளிக்காட்டப்படவில்லை என்பதே நிதர்சனமாகும்.

இந்தவகையில், இன்னலுறும் ஈழத்தமிழ் மக்கள் மீதான அனுதாபமும், அவர்களின் விடுதலைக்காகப் போராடும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான உணர்வும், தமிழக மக்கள் மத்தியில் இருந்துகொண்டே இருக்கின்றது என்பதே யதார்த்தமாகும். இவ் அனுதாபமும் – ஆதரவும் – இன ரீதியான சகோதரத்துவ உணர்வுகளும், இதனைப் பிரித்துவிடப் பார்ப்பதென்பது தாயையும் – பிள்ளையையும் பிரிப்பதுபோல் என்பதாகும். ஏனெனில், இந்த இன உணர்வானது அந்தளவிற்கு உணர்ச்சிபூர்வமானது. ஆனால் இன்று தமிழகத்தில் உள்ள பல ஆயிரம் தலைவர்கள் இந்த உறவுக்குத் தடைபோட்டு விடலாம் என முயல்கின்றனர். இதன் காரணமாக, இந்த உறவில் பகை உணர்வை ஏற்படுத்தவும் வெறுப்பேற்றவும் முனைகின்றனர். இதன் காரணமாக, மக்களே இவ் உறவை வெறுப்பதாகவும் இவ் விடயத்தில் கரிசனை காட்டவில்லை என்பது போன்றதொரு போலியான நிலையை உருவாக்க முயல்கின்றனர்.

ஈழத்தமிழ் மக்கள் விவகாரமானது, இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரையில் ஓர் பிராந்தியப் பிரச்சினையாகும். ஆகையினால் இந்திய அரசு அதன் நலன் என்பதுடன் மட்டுமே, விவகாரம் சம்பந்தப்பட்டது. இதனால், அவற்றின் அடிப்படையில் தனது கொள்கையை வகுத்துக் கொண்டால், போதும் என இந்திய அரசு கருதலாம். ஆனால், தமிழக அரசியல் தலைவர்கள் அவ்வாறு தமது கொள்கையை வகுத்துக் கொள்ளுதல், தமது சுயநலத்திற்கு பிற்பட்டதாக இருக்க முடியுமே ஒழிய, தமது இனத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்கமுடியாது. அவ்வாறு இல்லாவிடின், இவர்கள் இனம், மொழி மேல் பற்றில்லாதவர்களாக இருக்கவேண்டும். ஆனால் தலைவர்களது விருப்பு – வெறுப்புக்கள் மக்களது தீர்மானங்களை, மாற்றுவதில் ஓரளவு பங்கை வகிக்கக் கூடியவையாக இருக்கலாம். ஆனால் அவர்களது உணர்வுகளை மாற்றக்கூடியவையாக அவை ஒருபோதும் இருக்கப்போவதில்லை. அவ்வாறு இருக்குமானால், இனஉணர்வு, என்பது உலகில் எப்பொழுதோ ஒழிந்திருக்க வேண்டும். ✷

# நெஞ்சம் மறப்பதில்லை...

மண்டபத்தில் இருந்த ஒலி-ஒளிப்பதிவுக் கருவிகள், புகைப்படக் கருவிகளெல்லாம் அவர்களை விழுங்கிக் கொண்டிருந்தன.

கலகலப்பை மீறி, இடைமிடையே வாசலைப் பார்ப்பதும் பின்னர் கதைப்பதும் சிரிப்பதுமாக இருந்தனர்.

அவர்கள் கரும்புலிகள். தமக்கு எல்லாமுமாக இருந்து நெறிப்படுத்தி அன்பு காட்டி அரவணைத்த அந்தப் பெரும் தலைவனை இறுதியாகச் சந்திப்பதற்குக் காத்திருந்தார்கள்.

கலகலத்த மண்டபமும் 'சட்' டென அமைதியானது. கண்களில் பெருமிதமும் வேதனையும் போட்டியிட கம்பீரமான சின்னப் புன்னகையுடன் தலைவர் வந்தார். விழிகளில் ஒளியோடு நின்ற அந்த நெருப்புகளை நோக்கி வணக்கம் என்றார்.

மீண்டும் கலகலப்பு. மகிழ்ச்சிப் பெருக்கு. கதைக்கிடையில் யாரோ பாரதியை 'சாண்டோ' என்று கூப்பிட, தலைவர் ஏன்என்று வினவினார்.

பாரதியின் மேல் படகுகளை ஏற்றிப் பயன்படுத்தும் பாரவண்டி படகுடன் தவறுதலாக ஏறியதை எல்லோரும் கதைகதையாக அவருக்குச் சொல்ல, அவர் சிரித்தவாறு பாரதியை 'சாண்டோ' என்று தானும் கூப்பிட்டார்.

பாரதி புன்னகைத்தாள்.

வீட்டில் கடைக்குட்டி. செல்லப்பிள்ளை. கதையும் செல்லக்கதைதான். இயக்கத்திலும் அவள் அப்படியே கதைப்பதால், தோழிகள் அவளை 'நயினா' என்றுதான் கூப்பிடுவார்கள்.

தாயும் மகளும் சரியான நெருக்கம். வெளியே போன பாரதி வரக் கொஞ்சம் தாமதமானாலும் தேடிப் போய்விடுவார் அம்மா. ஒருநாள் பாரதி வீட்டுக்கு வரவேயில்லை. தேடித்தேடி கடைசியாக முகாமிற்குப் போய் அழுத அம்மாவிடம்,

"நீங்க அழவே கூடாது அம்மா. நான் உங்களிடம் வரவேணுமெண்டால் நீங்க அழக்கூடாது"

என்று ஆறுதல் சொல்லி அனுப்பிவிட்டாள்.

பயிற்சி எடுக்கமுன், சிலகாலம் அவள் இடம்பெயர்ந்த தீவக மக்களிடையே அரசியல் வேலை செய்தாள். இடப்பெயர்வு வாழ்வின் அவலங்களை அங்கே அவள் கண்டாள். அந்த மக்களின் கண்ணீர்தான் அவளைக் கரும்புலி ஆக்கியிருக்க வேண்டும்.

பயிற்சி ஆசிரியர் ஒருமுறை, இவளின் அணியினரை 'சோம்போறிகள்' என்று சொல்லிவிட்டார். அவ்வளவுதான் அன்றிலிருந்து எதிலுமே பாரதியின் அணிதான் முன்னின்றது.

"பாரதியக்கா இல்லாவிட்டால் நாங்கள் இப்பவும் சோம்பேறியாத்தான் இருந்திருப்பம்."

என்று நினைவுகூர்ந்தார், அந்தநேரத்தில் பாரதியின் அணியிலிருந்த ஆரணி.

ஆரம்பப் பயிற்சி முடிந்ததும் வெடிமருந்துப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு அதற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள். அதுமுடிய நீச்சல், படகோட்டம் என்பவற்றில் ஈடுபட்ட பாரதி ஒரு கலைஞராகவும் இருந்தார். நிகழ்ச்சிகளைத் தயாரிப்பாள். கவிதை எழுவதிலும் பெரும் ஆர்வம் இருந்தது.

"நாங்க ஒரு சண்டை செய்ய வேணும். அதுக்கு 'அலை வேகத் தாக்குதல்' எண்டு பெயர் வைக்க வேணும்"

என்று அடிக்கடி சொல்வாள்.

கிளாலியில் மக்கள் பாதுகாப்புச் சேவையில் ஈடுபட்ட போது, பாரதியின் A.K.L.M.G பல தடவைகள் முழங்கியிருக்கின்றது. சுகன்யா படையணியின் பொறுப்பாளராக இருந்து மண்டைதீவுச் சண்டைக்கு ஓட்டியாகச் செயற்பட்டாள். பூநகரி மீதான தவளைத் தாக்குதலின் போது, இவளது படகையும் அருகில் வந்த இன்னொரு படகையும் உலங்கு வானூர்தி தாக்க, எல்லோருமே கடலுக்குள் குதித்து நீந்தத் தொடங்கினார்கள். ஒரு போராளி நீரில் மூழ்கித் தத்தளித்தபடி,

"என்னைக் காப்பாற்றக்கா"

என்று கத்த, திரும்பி நீந்திய பாரதி அவனின் தலையில் ஒரு குத்துவிட்டு, மயங்கியதும் கரைக்கு இழுத்தவாறு நீந்தினாள். பின்னர், கடலில் ஐந்து கடல் மைல் நீச்சல் முடிந்ததும் அவனின் செய்தி பாரதியை வந்தடைந்தது.

"அக்கா உன்னாலதான் நான் இண்டைக்கு இப்பிடியொரு நிலைக்கு வந்திருக்கிறன்."

பின்னர் அவன் முல்லைத்தீவில், 'ஓயாத அலைகள்' தாக்குதலில் வீரச்சாவடைந்தது பாரதியை உலுக்கிவிட்டது.

1996 இல் நளாயினி படையணியின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட பாரதி 'ஓயாத அலைகளுக்கு ஓட்டியாகச் செயற்பட்டாள்.

படகு ஏற்றும் பாரவண்டி படகுடன் ஏறி உடல் பலவீனமாக இருந்தபோதும், தனக்குரிய வெடிமருந்துப் படகை பிடிவாதமாகக் கேட்டு வாங்கினாள்.

"படகை நான்தான் ஓட்டுவன். என்னோட ஒரு பெண்போராளி வரட்டும்"

என்று பொறுப்பாளரைக் கேட்டாள்.

அவளின் விருப்பப்படியே, மேஜர் மங்கைக்கு அடுத்தாக, வெடிமருந்துப் படகை ஓட்டிய பாரதி, 1996-11-11 அன்று அதிகாலை காரைநகர் கடற்படைத்தளமருகே அதிவேக டோரா பீரங்கிப் படகு மீது மோதினாள். கூடவே இன்னிசையும். ✷

# வெளிநாட்டு ராஜதந்திரிகள் வவுனியா, யாழ் விஜயம்

தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் ரொபின் ராபெல், வவுனியாவுக்குச் சென்று தமிழ் அகதிகளுக்கு உதவும் சர்வதேச அமைப்புக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். ரொபின் ராபெல் வவுனியாவில் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலக அதிகாரிகள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்ததாக ஐக்கிய அமெரிக்க தூதரக அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். ஆயினும், பேச்சுவார்த்தை விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இதற்கிடையில் அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் டேவிட் ரிச்சி, அமெரிக்கத் தூதுவர் பீட்டர் பேர்கீ, அமெரிக்க தூதரகத்தின் வர்த்தக, பொருண்மிய ஆலோசகர் மைக்கல் ஓவன், கனேடிய உயர் ஸ்தானிக அதிகாரிகள் ஆகியோரும் வவுனியாவுக்குச் சென்று நிலைமைகளை நேரில் அவதானித்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், பிரித்தானியப் பிரதித் தூதுவர் கிரகரி கீட் தலைமையிலான குழுவொன்று, யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து, சிறிலங்காப் படைகளின் அதிகாரி பி.ஏ. கருணாதிலக, சிறிலங்காவின் அரச அதிபர் சி. பத்மநாதன், யாழ்ப்பாண ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆகியோரையும் மற்றும் யாழ். பல்கலைக்கழகம் - யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரிகள், செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளையும் சந்தித்துள்ளனர். இவருடன் வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலக ஆராய்ச்சித் திணைக்களத்தைச் சேர்ந்த கலாநிதி அன்ட்ரு கோலும் யாழ்ப்பாணத்துக்குச் சென்றுள்ளார். இவர் ஒரு வாரகாலம் சிறிலங்காவில் தங்கியிருந்துவிட்டு, திரும்பவும் பிரித்தானியாவுக்கு வர உள்ளார் எனத் தெரிகிறது. ✷

# நீண்ட நெருப்பாற்றில் ...

ஆண் போராளிகளுடன் இணைந்து செயற்பட்டது.

சண்டை ஆரம்பமான நாளிலும் 'ரணவிரு' வை அழித்து தளத்துக்கான விநியோகத்தைத் துண்டிப்பதிலும் கடற்புலிகளின் மகளிர் படையணி வகித்தபங்கு, எமது பெருவெற்றிக்கான காரணங்களில் ஒன்றாக அமைந்தது. 'ரணவிரு' என்ற தரையிறக்கும் கப்பல் மீதான தாக்குதலில் கடற்கரும்புலி மேஜர் சுடரொளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

மகளிர் படையணியின் தளபதி விதுஷா அவர்களைப் பொறுத்தவரை, இச்சண்டைக் களமானது அவரது அணிக்குக் குறிப்பிடத்தக்க உயிரிழப்பை ஏற்படுத்திக் கொடுத்த சண்டையாக இருப்பினும், தனித்துவமானதும் சிறப்பான அனுபவத்தைக் கொடுத்ததுமான களமாக அமைந்ததில் அவருக்கும், அவரணிக்கும் பெருமைதான்.

முல்லைத்தீவுச் சண்டையில் 1996-07-18 அன்று நாற்பத்தெட்டுத் தோழிகளையும் 1996-07-19 அன்று இருபத்துநான்கு தோழிகளையும் அதன் பின்னரான நாட்களில் எட்டுத் தோழிகளையும் நாம் இழந்தோம். இவர்களின் நினைவுகள் இன்னுமொரு சண்டைக்கான வலிமையை எங்களுக்குத் தரும்.

கடினமானதும் நீண்டதுமான எமது போராட்டக்களங்களில் 'ஓயாத அலைகள்' தனித்த முத்திரை பதித்த சண்டைக் களமாகும். எண்ணிறைந்த மாவீரர்களின் ஒப்புயர்வற்ற ஈகங்களுக்குப்பின்னே, முல்லை மண் பகையின்றி விரிந்து கிடக்கின்றது. ஒருகாலம் தமிழர் தலைகள் நிமிர முடியாத வற்றாப்பளை கண்ணகை அம்மனைக் காண இன்னும் மக்கள் வீதியால் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஊற்றங்கரைப் பிள்ளையாரின் உற்சாகச் சிரிப்பு நந்திக் கடல்வரை எதிரொலிக்கின்றது. நீண்ட இடைவெளிக்குப்பின் உலக வான்அலைகளில் புலிகளின் பலம் பற்றிப் பேசப்பட்ட, சந்திரிகாவையும் ரத்வத்தையையும் நாடுநாடாக மடிப்பிச்சை கேட்கவைத்த வரலாறு இது.

முல்லைத்தீவின் ஆழ்கடல் பகையின்றி அழகாக அலையடித்துக்கொண்டிருக்க, இப்போது மீனவர்கள் தொழிலுக்குப் போகத் தொடங்கிவிட்டனர். வீதியோரத்தில் சிறுவர்கள் 'முல்லை மண் எங்களின் வசமாச்சு' என்று பாடித்திரிகின்றனர்.

இருள் படிந்த எமது சரித்திரத்தில் 'நாம் வெற்றி பெறுவோம்" என்ற நம்பிக்கையை எம்மக்களுக்கு இத்தாக்குதற்களம் மீண்டுமொரு முறை ஏற்படுத்தித் தந்திருக்கின்றது, உயிர்களை விலையாகக் கொடுத்து நாம் பெற்ற ஆயுதங்களும் நேற்று மீட்டெடுத்த உயிர்ப்பான எமது ஊரும்......

இனி பகைவனது ஆட்லறிகளே அவனோடு கதைபேசும். ஒருபோதும் புலிகள் ஓயப்போவதில்லை அந்த ஓயாத அலைகளைப் போல.

- சுதாமதி -

# சிறிலங்காவின் இராணுவத் தந்திரோபாயம் ...

மாதத்திற்கு முன்னர் விடுதலைப் புலிகளை தாழ்நிலை போரினையே நடாத்தக் கூடியவர்களாக மாற்றிவிட வேண்டும் என சந்திரிகா, இராணுவ தரப்பிற்குக் கூறியுள்ளதாகத் தெரிகின்றது. விடுதலைப் புலிகளின் வெளிநாட்டு வலைப்பின்னலைப் பலவீனப்படுத்துவதில் தான் தீவிர கவனம் செலுத்துவதாகவும் அவர் தெரிவித்திருப்பதாக உணர முடிகின்றது. 1997 டிசம்பர் மாதம் அளவில், சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தினை தமிழ் மக்கள் மத்தியில் நிலைநிறுத்தக்கூடிய தீர்வுத்திட்டத்தினைத் திணித்து வருவதற்கும் சந்திரிகா திட்டமிடுவதாக அறிய முடிகின்றது. அண்மையில் இந்திய அரசியல் சஞ்சிகையான Front line க்கு சந்திரிகா வழங்கியுள்ள செவ்வியில், "போரின் பெரும்பகுதி 1997 ஆண்டு இறுதிக்குள், முடிவுக்கு வந்துவிடும்" என்று அவர் கூறியிருக்கும் விடயங்களை அவதானிக்கும் போது இவற்றை உய்த்துணர முடிகிறது.

எனவே, சிங்கள--பௌத்த இனவாதம், தனது மேலாதிக்கத்தினை நிலை நிறுத்தக்கூடிய ஒரு தீர்வினை, விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதன் மூலம் 1997ம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் தமிழ் மக்கள் மீது திணித்து விடுவதற்கு திட்டமிடுகின்றது என்பதனை நாம் கவனத்தில் கொள்ளலாம்.

ஆனால், சிங்கள-பௌத்தத்தின் இந்தத் திட்டம் வெற்றியளிக்கப் போவதில்லை என்பதனை நிறுவுவதற்கு பெரிய ஆய்வு எதுவும் தேவைப்படப் போவதில்லை. சிறிலங்கா அரசால் இலகுவாகக் கையாளக்கூடிய நிலையினைத் தாண்டிய நிலையிலேயே தமிழீழ விடுதலைப் போராட்டம் வளர்ச்சியடைந்துள்ளது. இந்த வளர்ச்சி, சிறிலங்கா அரசின் அரசியல் - இராணுவ - பொருண்மிய முனைகளைத் தாக்கி வருகின்றது. இராணுவ

தொடர்ச்சி 6 ம் பக்கம்...

# விடுதலைப்புலிகளின் வெளிநாட்டுப் பரப்புரையும்

இன்று, விடுதலைப் புலிகளின் பரப்புரையானது, வெளியுலகில் எவ்வளவு தாக்கமாக நடைபெறுகிறது என்பதை, சிறிலங்காவின் தகவல் தொடர்பு சாதனங்களுக்கூடாகவே தமிழீழ மக்கள் அறிந்துகொள்ள முடியுமாக உள்ளது. விடுதலைப் புலிகளின் பரந்துரைக்குப் பதிலாக, அரசு தனது சகல தகவல் தொடர்பு சாதனங்களையும், பிரச்சார ஊடகங்களையும் பயன்படுத்துவதில் இருந்து, சிறிலங்கா அரசை அது எவ்வளவு தூரம் பாதிப்புக்குள்ளாக்கியுள்ளது என்பதை அவ

விசேட கவனத்திற்கும் உள்ளாவதால் அவர்களால் முற்றுமுழுதாகப் புறக்கணிக்கப்பட்ட கருத்தொன்றை ஏற்றுக்கொள்ள முடியாதுள்ளனர். மேலும், இச்செய்தி நிறுவனங்கள் பலவற்றில் சிங்களவர்களே கடமையாற்றுவதும், அவர்கள் தம் இனத்தையும், யுத்தத்தையும் சார்ந்துள்ள செல்வாக்கைக் கொண்டிருப்பதும் தமிழரின் நியாயமான போராட்டத்தின் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளமுடியாமல் இருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. தமிழ் மக்களுக்குப் பிரச்சனையுள்ளது

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது, தமிழர்களின் தேசிய விடுதலை இயக்கமாகும். தமிழ் மக்களுக்கான விடுதலைப் போரில் 24 வருட காலமாகப் போராடிக் கொண்டிருக்கின்ற நீண்ட வரலாற்றைக் கொண்ட இயக்கமாகும். இந்த இயக்கமானது இராணுவம், அரசியல், சமூக, பொருண்மிய, சட்டாட்சிக் கட்டமைப்புக்களைக் கொண்ட ஒரு தேசிய விடுதலை இயக்கமாகும். தமிழ் மக்களது அகிம்சைப் போராட்டம் நசுக்கப்பட்ட நிலையில், விடுதலைப் புலிகள் இயக்கமானது ஆயுதப்போராட்டத்தை, போராட்ட வடிவமாக வரித்துக்கொண்டு போராடி வருகின்றது.

தானிக்கக்கூடியதாக உள்ளது. இந்தப் பரப்புரைப் போரில் விடுதலைப் புலிகளைவிட, சிறிலங்கா அரசிற்குச் சாதகமான அம்சங்கள் உள்ளன. பெருமளவிலான நிதிவளமும், நிபுணர்களது சேவையும், தகவல் தொடர்பு சாதனங்களின் கட்டுப்பாடும், உள்நாட்டு வெளிநாட்டு அறிஞர்களின் ஆலோசனைகளும் என, சிறிலங்கா அரசு எவ்வாறு இராணுவ ரீதியாக படைக்கல வளங்களில் மேலோங்கி நிற்கிறதோ அதேபோன்று, பரப்புரை ரீதியாகவும் வளங்களில் உயர்வாகவே இருக்கின்றது. இருந்தபோதிலும், விடுதலைப் புலிகளின் போராட்டத்திலுள்ள தர்மமும், தமிழர்களின் ஆண்மீகப் பலமும் எந்தவொரு பொய்ப்பிரச்சார வளங்களையும் விட, பலமாகவும் உறுதியாகவும் உயர்வாகவும் இருக்கின்றது.

சிறிலங்கா அரசைப் பொறுத்தவரையில் ரூபவாஹினி தொலைக்காட்சி நிலையம், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ஏரிக்கரைப் பத்திரிகைகள் இவையாவும் சிங்களத்தின் ஒரு மூலையில் இருக்கும் வாசகர் தொடக்கம், 'இன்டர்நெற்' (Internet) மூலம் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் கருத்துக்களைப் பரப்பும் பீரங்கிகளாகச் செயற்படுகின்றன. இவற்றின் உண்மை, பொய், நம்பகத்தன்மையை விடுவோம். மேலும் கொழும்பில் இருந்து வெளியாகும் அனைத்துப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், இலத்திரனியல் ஊடகங்களும் அரசின் தணிக்கைகளுக்கு உட்படுத்தப்படுவதுடன், கருத்தியல் செல்வாக்கும் உள்ளதால் அரச சார்பாக அல்லது அதனைப் பிரதிபலிக்கக் கூடியதாக அல்லது ஒரு பகுதியை உயர்த்திச் சொல்வதாகவே வெளிவருகின்றது.

கொழும்பில் இருக்கும் அனைத்துலகச் செய்தி நிறுவனங்களுக்கு வேலைசெய்யும் செய்தியாளர்களும் கூட, சிறிலங்கா அரசின் கலந்துரை ஆதிக்கத்திலே செயற்பட்டு வருவதற்கான சூழலை அரசு உருவாக்கியுள்ளது. இவர்களால் தமிழீழப் பகுதிகளுக்குச் சுதந்திரமாகச் சென்று, போரின் யதார்த்த நிலையையும் தமிழ் மக்களின் உணர்வுகளையும் அறிய முடியாதுள்ளது. மேலும் அரசின் திட்டமிட்ட கருத்துத்திணிப்பிற்கும்

என்று, தங்களை நடுநிலைமையாளர்களாகக் காட்டிக்கொள்ளும் பல சிங்களப் புத்தி ஜீவிகள், பத்திரிகையாளர்கள் கூட விடுதலைப்புலிகளைப் பயங்கரவாதிகளாகப் பிரதிபலிக்க முயல்கின்றனர். இதிலிருந்து இவர்கள், நேர்மையான முறையில் தமிழர்களின் போராட்டத்தைப் பார்ப்பதில்லை என்று தெளிவாகின்றது.

கொழும்பிலுள்ள தூதரகங்களையும் அவற்றிலுள்ள மற்றைய அரசுப் பிரதிநிதிகளையும் கூட, சிறிலங்கா அரசு தனது திட்டமிட்ட அனைத்துலகச்

பயன்படுத்தி வருகின்றது. இதற்கு, அண்மையில் தமிழர்கள் குறித்து சந்திரிகா கூறிய செய்தியை, கூட்டணியினர் மறுக்காது வக்காலத்து வாங்கியது ஒரு உதாரணமாகும். அத்துடன், தங்களைத் தாங்களே

வி. மணிவண்ணன்
(தமிழீழம்)

புத்திஜீவிகள் என்று கொழும்பு வாழ் தமிழ் கல்வியியலாளர்கள் சிலரையும், விடுதலைப்புலிகள் மீது சேற்றை வாரி இறைக்கும் நோக்கத்துடன் யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்குத் தெரியாமல் அவர்கள் பெயர்களில் இயங்குகின்ற, "மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழு" என்ற அமைப்பினரையும் பதவி, சலுகை, தரகுப்பணம் என்ற அடிப்படையில் சிறிலங்கா அரசு பயன்படுத்தி வருகின்றது. மேலும், தமிழ் முஸ்லிம் சகோதரத்துவத்தைச் சீர்குலைப்பதற்காகவும் அரபு நாடுகளைக் கவர்வதற்காகவும் முஸ்லிம் காங்கிரசையும் அரசு பயன்படுத்தத் தவறவில்லை. இவை எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற்போல், தமிழினத்திற்குத் தெரியாத – புரியாத லக்ஸ்மன் கதிர்காமர் என்பவரை வைத்து, தமிழினத்தை அழித்தொழிக்கும் யுத்தத்திற்கான பரப்புரையையும் சந்திரிகா செய்கின்றார்.

வெளிநாட்டமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் தலைமையில் சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சானது, பல்வேறுபட்ட நாடுகளில் உள்ள தமது தூதரகங்களின் மூலம் அந்தந்த அரசுகளுடன் இராஜதந்திர வர்த்தக உறவுகளைப் பேணுவதற்காக

உன்னிப்பாகக் கவனிப்பதையும் முக்கிய கடமையாகக் கொண்டுள்ளனர். திருவாளர் லக்ஸ்மன் கதிர்காமர் இவற்றைவிட, தமிழர்களுக்கு ஆதரவாக யாராவது குரல் கொடுத்தால் பாய்ந்து விழுந்து கண்டனம் தெரிவித்து, இது உள்நாட்டுப் பிரச்சனை என்று கூறுவது அவருக்குக் கைவந்த கலையாகும்.

இவ்வாறாக, பல்வேறுபட்ட ஆளும் செல்வாக்குகள், அதிகார வசதிகளினால் மேலோங்கி நிற்கும் சிறிலங்கா அரசின் வெளிநாட்டுப் பரப்புரையானது, தர்மம் என்ற பதம் இல்லாததினால் விடுதலைப் புலிகளின் உண்மையான யதார்த்தமான பரப்புரைக்கு ஈடுகொடுக்க முடியாமல், விசமத்தனமான பொய்ப் பரப்புரை செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. உண்மைக்கு முகம் கொடுக்க முடியாத பின்வாங்கலினால், தாறுமாறாகப்போய் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென்றும், விடுதலைப் புலிகளின் அலுவலகங்களை மூடிவிடவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்து வருகின்றார். இதற்காக, அவர் தமிழர்களது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி, விடுதலைப் புலிகள் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதற்கு எள்ளளவும் தயங்கவில்லை. சந்திரிகா அரசும், கதிர்காமரும் நாடுநாடாகப் பரப்புரை செய்யும் குற்றச்சாட்டுக்களைப் பற்றி ஆழமாக நோக்குவோமாக இருந்தால், சிறிலங்கா அரசு செய்யும் மோசமான இனப்படுகொலைகளையும் சிங்கள இனவாதச் செயல்களையும் மூடி மறைப்பதற்காகவே, இவர்கள் உரத்துக்கத்தி வருகின்றனர் எனலாம். சிறிலங்கா அரசின் குற்றச்சாட்டுக்களையும் அதன் யதார்த்த நிலையையும் சற்று விரிவாக ஆராய்வோம்.

## சிறிலங்கா அரசும்

செல்வாக்கிற்குள்ளேயே வைத்திருக்கப் பெருமுயற்சி எடுக்கின்றது. அடிக்கடி சந்திப்புக்களை ஏற்படுத்துவதிலும் விருந்துகளை ஒழுங்கு செய்வதிலும், முக்கியமான பிரச்சினைகளின் போது அவர்களுக்கு விளக்கங்கொடுப்பதிலும், தமக்குச் சாதகமான இடங்களுக்குக் கொண்டுபோய்க் காட்டுவதிலும் மேலும் தமது தரப்புச் செயல்களிலேயே இவர்களை வளைத்து வைப்பதிலும், அதுதான் உண்மையென்ற மாயைத் தோற்றத்தை ஏற்படுத்தி வைப்பதிலும் சிறிலங்கா அரசு முயன்று வருகின்றது. வடக்கு – கிழக்கு யதார்த்தத்தை நேரில் சென்று பார்த்தோ, தமிழ் மக்களைச் சந்திக்காமலோ கொழும்பில் இவர்களின் பிரதிநிதிகள் இருப்பது அரசிற்குப் பெரும் வாய்ப்பாக இருக்கின்றது. நேரில் பார்க்க விரும்பும் பிரதிநிதிகளையும் பாதுகாப்புக் காரணிகளைக் காரணம் காட்டி தடுத்து விடுகின்றது. இதற்கு மேலும் தீவிரமாக நிற்பவர்கள், வடக்கு – கிழக்கில் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளுக்குக் கூட்டிச்செல்லப்பட்டு, முன்கூட்டியே ஒழுங்கு செய்யப்பட்ட சில சந்திப்புக்களை நடத்திய பின்னர் அனுப்பி வைக்கப்படுகின்றர்.

தமிழர்களது விடுதலைப் போராட்டத்தைச் சிதைப்பதற்குக் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட, கொழும்பு வாழ் தமிழ்க் குழுக்களையும் சிறிலங்கா அரசு தனது தேவைக்கேற்ற விதத்தில்

விடுதலைப் புலிகளுக்கும் தமிழரின் நீதியான போராட்டத்திற்கும் மாசு கற்பிக்கும் வகையில் கீழ்த்தரமான பரப்புரையைச் செய்துகொண்டும் வருகின்றது. வெளிநாடுகளில் வதியும் சிங்களவர்களை – குறிப்பாகப் பௌத்த சிங்களவர்களை முன்வைத்து

### விடுதலைப் புலிகள் ஒரு பயங்கரவாத இயக்கமா?

தமிழ்த் தேசிய – இனத்தின் விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத இயக்கமாகவும்

தமிழர்களது விடுதலைப் போராட்டத்தைச் சிதைப்பதற்குக் தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட, கொழும்பு வாழ் தமிழ்க் குழுக்களையும் சிறிலங்கா அரசு தனது தேவைக்கேற்ற விதத்தில் பயன்படுத்தி வருகின்றது. இதற்கு, அண்மையில் தமிழர்கள் குறித்து சந்திரிகா கூறிய செய்தியை, கூட்டணியினர் மறுக்காது வக்காலத்து வாங்கியது ஒரு உதாரணமாகும். அத்துடன், தங்களைத் தாங்களே புத்திஜீவிகள் என்று கொழும்பு வாழ் தமிழ் கல்வியியலாளர்கள் சிலரையும், விடுதலைப்புலிகள் மீது சேற்றை வாரி இறைக்கும் நோக்கத்துடன் யாழ் பல்கலைக்கழக நிர்வாகத்தினருக்குத் தெரியாமல் அவர்கள் பெயர்களில் இயங்குகின்ற, "மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் குழு" என்ற அமைப்பினரையும் பதவி, சலுகை, தரகுப்பணம் என்ற அடிப்படையில் சிறிலங்கா அரசு பயன்படுத்தி வருகின்றது.

தமிழர்களுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்குகளை நடத்துவதிலும் சிறிலங்கா தூதரகங்கள் ஈடுபட்டுள்ளன. தற்போது சிறிலங்கா தூதுவர்கள் அந்தந்த நாடுகளுடன் ராஜதந்திர உறவுகளை நட்புறவுடன் ஏற்படுத்துவதையடுத்து, தமிழர்களுக்கு ஆதரவாக ஏதாவது அங்கு நடைபெறுகின்றதா என்று மிகவும்

விடுதலைப் புலிகளின் போர் நடவடிக்கைகளைப் பயங்கரவாத நடவடிக்கைகளாகச் சித்தரிப்பதும்தான் சிறிலங்கா அரசின் வெளிநாட்டுப் பரப்புரைகளின் மையக்கருத்தாகும். இதன்மூலம், அனைத்துலக அரங்கில் விடுதலைப் புலிகள் மீது மாசு கற்பித்து,

தொடர்ச்சி 6 ம் பக்கம்...

# விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு...

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துவதும் அனைத்துலக ரீதியாக அதற்குள்ள ஆதரவுத் தளத்தைச் சிதைப்பதும் சிறிலங்கா அரசின் நோக்கமாகும்.

விடுதலைப் புலிகளின் நியாயமான, நீதியான பரப்புரைகளுக்கு முகம்கொடுக்க முடியாத நிலையில் சிறிலங்கா அரசானது வெளிநாடுகளுக்கும் தனது அரச பயங்கரவாதத்தை தற்போது ஏற்றுமதி செய்யத்தொடங்கியுள்ளது. அண்மையில் பிரான்ஸில் நாதன், கஜன் என்ற விடுதலைப் புலிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது, இதனை தெளிவாகக் காட்டுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமானது, தமிழர்களின் தேசிய விடுதலை இயக்கமாகும். தமிழ் மக்களுக்கான விடுதலைப் போரில் 24 வருட காலமாகப் போராடிக் கொண்டிருக்கின்ற நீண்ட வரலாற்றைக் கொண்ட இயக்கமாகும். இந்த இயக்கமானது இராணுவம், அரசியல், சமூக, பொருண்மிய, சட்டாட்சிக் கட்டமைப்புக்களைக் கொண்ட ஒரு தேசிய விடுதலை இயக்கமாகும். தமிழ் மக்களது அகிம்சைப் போராட்டம் நசுக்கப்பட்ட நிலையில், விடுதலைப் புலிகள் இயக்கமானது ஆயுதப்போராட்டத்தை, போராட்ட வடிவமாக வரித்துக்கொண்டு போராடி வருகின்றது. போராட்டத்தின் பல்வேறு கட்டங்களில், இலங்கை அரசாலும் இந்திய அரசாலும் விடுதலைப் புலிகள் அங்கீகரிக்கப் பட்டதுடன், இறுதியாக நடைபெற்ற போர் நிறுத்தக் காலத்தில் நோர்வே, நெதர்லாந்து, கனடா போன்ற அரசுகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஒரு தேசிய விடுதலை இயக்கமாக அங்கீகரித்து, கண்காணிப்புப் பணிக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவற்றிற்கு மாறாக, தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வந்தமை, தரப்படுத்தல் மூலம் தமிழர்களது கல்வியைப் பறித்தமை, வேலைவாய்ப்பை இல்லாமல் செய்தமை, தமிழர்களின் பூர்வீகப் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றியமை போன்ற இன்னோரன்ன தமிழர் விரோத நடவடிக்கைகளைச் சிறிலங்கா அரசு மேற்கொண்டது. மேலும் 1958, 1969, 1974, 1977. 1982, 1983 ஆகிய ஆண்டுகளில் தமிழருக்கெதிரான கலவரங்களை உருவாக்கி, ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்படுவதற்கும் வீடுவாசல், சொத்துக்களை இழந்து அகதிகளாக அலைவதற்கும் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட பயங்ரவாத நடவடிக்கைகளே காரணமாகும்.

இன்னும் தமிழர்களை அடிபணிய வைப்பதற்குப் பொருண்மியத்தடை, மீன்பிடித்தடை, சுதந்திரமாகப் போக்குவரத்து செய்யமுடியாத நிலை, இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் கைது செய்தல் காணாமல்போதல், பாலியல் வல்லுறவு, புதைகுழிப்படுகொலைகள் போன்றவற்றை சந்திரிகா அரசு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தி வருகின்றது. மேலும் விமானக் குண்டுவீச்சு, எறிகணைத் தாக்குதல்கள், கடற்படைத் தாக்குதல்கள், தேடி அழிக்கும் நடவடிக்கைகள் என தமிழ் மக்களைப் பூண்டோடு அழிக்கவும் சந்திரிகா அரசு திடசங்கல்பம் பூண்டுள்ளது.

சிறிலங்கா அரச பயங்கரவாதம் முற்றிய நிலை அடைந்தது, சந்திரிகாவின் ஆட்சியில்தான். மேலும் பொல்கொடவாவிச்சடலங்கள், நவாலித் தேவாலயப் படுகொலை, நாகர்கோவில் பாடசாலைக் குண்டுவீச்சு, குமரபுரம் படுகொலை, நாச்சிக்குடாக் குண்டுவீச்சு, யாழ் குடாநாட்டில் தற்போது தோண்டப்படும் புதைகுழிகள் என அரச பயங்கரவாதத்தின் பல்வேறு வடிவங்கள் அனைத்துலக சமூகமே வெட்கித் தலைகுனியும் வண்ணம் கோரத் தாண்டவம் ஆடுவதும் சந்திரிகா அரசில்தான். விடுதலைப் புலிகளின் நியாயமான, நீதியான பரப்புரைகளுக்கு முகம்கொடுக்க முடியாத நிலையில் சிறிலங்கா அரசானது வெளிநாடுகளுக்கும் தனது அரச பயங்கரவாதத்தை தற்போது ஏற்றுமதி செய்யத்தொடங்கியுள்ளது. அண்மையில் பிரான்ஸில் நாதன், கஜன் என்ற விடுதலைப் புலிகள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமானது, இதனை தெளிவாகக் காட்டுகின்றது. நேடியாகச் சொல்லப்போனால், சிறிலங்காவில் சிங்கள இனவாதம் தாண்டவம் ஆடுவதனையே கதிர்காமரின் கூற்றும் தெளிவு படுத்துகின்றது.

## போதைவஸ்து கடத்தலுடன் விடுதலைப் புலிகளைத் தொடர்பு படுத்துவது

போதைவஸ்து என்பது, மனிதகுலத்திற்கு எதிரானதும் பூண்டோடு அழிக்கப்பட வேண்டும் என்பதும்தான் விடுதலைப் புலிகளின் கொள்கையாகும். கடந்த காலங்களில் போதைவஸ்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடுமையான நடவடிக்கையை எடுத்ததன் விளைவினாலேயே, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் போதைவஸ்து பாவனையோ, விற்பனையோ எங்குமே இல்லாதிருந்தது. வடிசாராயம், பாலியல் வல்லுறவு போன்ற சமூகத்திற்குக் கேடுவிளைவிக்கக் கூடியவற்றை விடுதலைப் புலிகள் தடைசெய்து இருந்தனர். ஆனால், சிறிலங்காவின் தலைநகர் உட்பட தென்னிலங்கையில் போதைவஸ்துப் பாவனை, சிறுவர் பாலியல் விபச்சாரம், வன்முறை போன்றவற்றைச் சர்வசாதாரணமாகப் பார்க்கலாம். அத்துடன், சிறுவர் விபச்சாரம் சிறிலங்கா அரசின் உயர் மட்டங்களின் தொடர்புகளுடனேயே நடைபெற்றும் வருகின்றது.

## பயமுறுத்திக் காசு பறிப்பது என்பது

இனவாத அரசிடமிருந்து தமது மக்களைப் பாதுகாப்பதற்காக, ஒரு தற்காப்பு தர்மயுத்தத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் நடாத்திக் கொண்டிருக்கும் அதே வேளையில், இடம்பெயர்ந்த லட்சக்கணக்கான மக்களது லன்சனைக் கவனிக்கவும், பொருண்மித் தடையால் சீர்குலைந்திருக்கும் தமிழீழப் பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் எமது மக்களிடையே சமூகப் பொருண்மிய மேம்பாட்டைப் பேணுவதோடு சுகாதாரம், மொழி, பண்பாடு, கல்வி போன்றவற்றை அழிவிலிருந்து காப்பாற்றல் போன்ற பாரிய சுமைகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ளது. இவற்றிற்கெல்லாம் மிகப்பெரியளவு நிதி தேவை. விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் வரி அறவிடல், வணிக நிறுவனங்களை நடத்துதல், உற்பத்தி நிறுவனங்களை அமைத்து நிதி திரட்டுவதோடு, இனத்தின்மீது கொண்டுள்ள பற்றுறுதியினால் நிதிஉதவி செய்பவர்களிடமிருந்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நிதி பெற்று வருகின்றார்கள்.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்கும் தேசிய பாதுகாப்பு நிதிதான் புனர்வாழ்வுக்கும், அபிவிருத்திக்கும், மொழி, கல்வி, பண்பாட்டுச் செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது. மறுவளமாக, சிறிலங்கா அரசாங்கம் என்ன செய்கின்றது என்று பார்ப்போமானால் புனர்வாழ்வு, அபிவிருத்தி, கல்வி போன்ற சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கும் வாங்கப்படும் நிதியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ யுத்தத்திற்குத் திருப்பிவிடுவதைக் கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. குறிப்பாக வடக்கு–கிழக்கிற்கு ஒதுக்கப்படும் நிதியானது, அங்குள்ள இராணுவ ஆக்கிரமிப்புக்கு நேரடியாகப் போவது இன்று உலக நாடுகள் முழுவதிற்கும் தெரிந்து விட்டது. இதனால்தான், நிதிவழங்கும் நாடுகள் வேலைத்திட்டங்களைத் தாம் கண்காணிக்கப் போவதாக வலியுறுத்தி வருகின்றன. இவ்வாறாக, சிறிலங்கா அரசானது துஷ்பிரயோகம் செய்யும் வெளிநாட்டு நிதியுதவிகளை மூடி மறைப்பதற்காகவே, "பயமுறுத்திக் காசு பறிப்பது" என்ற திட்டமிட்ட பொய்ப்பரப்புரையைச் செய்து வருகின்றது.

## சர்வதேச பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்புள்ளதா?

விடுதலைப் புலிகள் இயக்கமானது, தமிழ்மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் ஒரு விடுதலை இயக்கமாகும். உலகில் உள்ள சட்டரீதியான சகல அரசுகளுடன் ராஜதந்திர ரீதியான உறவுகளை ஏற்படுத்துவதில் மிகவும் ஆர்வமாக உள்ளதுடன், இதற்காக அரசியல் ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால், விடுதலைப் புலிகளுக்குக் கிடைக்கும் தேசிய பாதுகாப்பு நிதிதான் புனர்வாழ்வுக்கும், அபிவிருத்திக்கும், மொழி, கல்வி, பண்பாட்டுச் செயற்பாட்டிற்கும் பயன்படுத்தப்படுகின்றது. மறுவளமாக, சிறிலங்கா அரசாங்கம் என்ன செய்கின்றது என்று பார்ப்போமானால் புனர்வாழ்வு, அபிவிருத்தி, கல்வி போன்ற சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்கும் வாங்கப்படும் நிதியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ யுத்தத்திற்குத் திருப்பிவிடுவதைக் கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்தநிலையில், மாஃபியா (Mafia) போன்ற பயங்கரவாத அமைப்புக்களுடன் எமக்குத் தொடர்புண்டு எனக்கூறுவது சிறிலங்கா அரசின் பொய்ப்பரப்புரைகளில் ஒன்றே. விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கும் மாஃபியா (Mafia) போன்ற பயங்கரவாத அமைப்புக்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை.

தொடர்ச்சி அடுத்த இதழில்

# சிறிலங்காவின்இராணுவத் தந்திரோபாயம் ...

நடவடிக்கைகள் மூலம் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் சுமூகமான நிர்வாகத்தினை படையினரால் நடாத்த முடியாதுள்ளது. விடுதலைப்புலிகளை தாழ்நிலைப் போரினையே நடாத்தக்கூடிய சிறு குழுவாக மாற்றுவதன் மூலமே, சிங்கள–பௌத்த இனவாதம் தனது திட்டத்தினை நிறைவேற்ற முற்படுகின்றது. அவ்வாறு மாற்றுதல் சாத்தியமில்லை. மாறாக, மேலும் பலமிக்க தேசிய இயக்கமாகவும் – பாரிய தமிழர் படையணியாகவும் – விடுதலைப்புலிகள் இயக்கம் பரிணமித்துள்ளது. இதனை நோக்கும்போது, இனவாதத்திற்குத் தனது திட்டத்தினை நிறைவேற்றிக் கொள்ள உச்சக் கட்டப் போரினை நம்புவதைத்தவிர வேறுவழி எதுவுமில்லை என்பது நிச்சயமாகின்றது. விடுதலைப் புலிகள் இயக்கத்தினை அழிப்பதற்கு சிங்கள–பௌத்த மேலாதிக்கம் எடுத்துவரும் முயற்சிகளில், அது தழுவி வரும் தோல்விகளையே நாளைய வரலாறு சிங்கள தேசத்தின் தோல்விகளாக குறித்துக் கொள்ளப் போவது வரலாற்றின் போக்கில் தவிர்க்க முடியாததே. ✷

# சிறிலங்காவின் இராணுவத் தந்திரோபாயம் அரசியல் வெற்றியை நெருங்குமா?

**விடுதலைப் புலிகள் இயக்கத்தினை அழிப்பதற்கு சிங்கள-பௌத்த மேலாதிக்கம் எடுத்துவரும் முயற்சிகளில், அது தழுவி வரும் தோல்விகளையே நாளைய வரலாறு சிங்கள தேசத்தின் தோல்விகளாக குறித்துக் கொள்ளப்போவது வரலாற்றின் போக்கில் தவிர்க்க முடியாததே.**

சிறிலங்கா அரசபடைகளின் 'சத்ஜெய-3' இராணுவ நடவடிக்கையுடன் கிளிநொச்சி நகரை இராணுவம் ஆக்கிரமித்துவிட்ட அதே ஆரவாரத்தோடு பூநகரி முகாமினை படையினர் மூடிக்கொண்டனர். கிளிநொச்சியில் உள்ள நிலைகளைப் பலப்படுத்துவதற்கு மேலதிகப்படையினர் தேவைப்பட்டதனாலேயே முகாம் மூடப்பட்டதாக ஒரு தகவல் கூறியது. பூநகரி முகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக முகாம் மூடப்பட்டதாக இன்னொரு தகவல் கூறியது. அது என்னவாக இருந்தாலும் முகாம் மூடப்பட்டாயிற்று.

கிளிநொச்சி நோக்கிய படையெடுப்பினைச் செய்து கிளிநொச்சி நகரைத் தனது ஆக்கிரமிப்புக்குள் கொண்டு வருவதில் மூன்று தடவைகள் பகீரத முயற்சி எடுத்துக்கொண்ட சிறீலங்காப் படையினர் - தம்வசம் ஏற்கெனவே இருந்த பூநகரி முகாமினை விட்டுத் தாமாகவே விலகிக்கொண்டனர் என்றால் -சிறீலங்கா ஆயுதப்படையின் இராணுவத் தந்திரோபாயம் எப்படியானது என்ற கேள்வி எழவே செய்யும்.

சிறீலங்கா ஆயுதப்படையினரின் இராணுவத் தந்திரோபாயத்தில் எத்தகைய அம்சங்கள் முக்கியம் பெறுகின்றன? சிங்கள - பௌத்த இனவாதம் தனது அரசியல் இராணுவ இலக்கினை அடைய எவ்வாறு முயற்சிக்கின்றது? அம்முயற்சியில் அது வெற்றியினைத் தழுவிக்கொள்ளுமா? . போன்ற விடயங்களை சற்று சுருக்கமாக நோக்குவோம்.

சிறீலங்கா ஆயுதப்படையினரைப் பொறுத்தவரை அவர்களுக்கு ஒரு இராணுவ இலக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. அவ் இராணுவ இலக்கு என்னவெனில் தமிழ் மக்களின் எதிர்ப்புச் சக்தியினை அடக்குதல் என்பதே அதுவாகும். இன்னும் தெளிவாகக் கூறப்போனால் சிங்கள-பௌத்த இனவாதத்தின் மேலாதிக்கத்திற்கு எதிர்ப்பு எதுவும் வழங்காமல் கீழ்படிவுள்ள குடிமக்களாக தமிழ்மக்கள் வாழும் ஒரு சூழலை ஏற்படுத்தலே இராணுவத் தரப்பிற்கு வழங்கப்பட்டுள்ள இலக்காகும். இவ்விலக்கினை அடைந்து கொள்வதாயின், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடும் தேசிய இயக்கமான விடுதலைப் புலிகளுடன் இராணுவ ரீதியாக மோதவேண்டும். அவ்வாறு மோதுவதன் மூலம் விடுதலைப்புலிகளை சிங்கள-பௌத்த மேலாதிக்கத்தினை ஏற்றுக்கொள்ளும் ஒரு தீர்வுத்திட்டத்திற்குச் சம்மதிக்க வைக்கவேண்டும். அதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இல்லாத பட்சத்தில் தாழ்நிலைப் போரினையே நடாத்தக்கூடிய சிறு குழுவாக மாற்றிவிட வேண்டும். இதுவே சிறீலங்கா ஆயுதப்படையினரின் இராணுவ இலக்காக இருக்கின்றது.



இந்த இராணுவ இலக்கினை அடைந்து கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட 'சூரியக்கதிர்'ல் இருந்து 'சத்ஜெய' நடவடிக்கை வரை சிறீலங்காப் படையினர் தமது இலக்கினை அடைந்து கொள்ள முடியவில்லை. இருப்பினும் சில தந்திரோபாயங்களின் அடிப்படையில் படையினர் தமது நடவடிக்கையினைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். அத் தந்திரோபாயங்களில் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு.

**1) நகர்ப்புறங்களை தமது ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டுவருதல்.**

வடக்கு-கிழக்குப் பகுதியின் முக்கியமான மக்கள் செறிந்து வாழும் நகரங்களையெல்லாம் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதில் இராணுவம் தீவிர கவனம் செலுத்துகிறது. இவ்வாறு நகர்ப் பகுதிகளை ஆக்கிரமிப்பின் கீழ் கொண்டுவருவதன் மூலம் அப்பகுதிகளில் வாழும் மக்களை தனது பிடிக்குள் வைத்திருக்க இராணுவம் முயல்கிறது. அவ்வாறு பிடிக்குள் வைத்திருப்பதன் மூலம், விடுதலைப்புலிகளுக்கு ஆட்பலம் அதிகரிக்கக்கூடிய நிலைமையைக் குறைக்கலாம் - மக்களைப் போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்திவிடலாம் - என்றவாறாக இராணுவம் தப்புக் கணக்குப் போடுகின்றது. மேலும், நகர்ப் பகுதிகளில் விடுதலைப் புலிகள் வர்த்தக முயற்சிகள் மூலமும், வரிவிதிப்பு மூலமும் பெறக்கூடிய பொருண்மிய பலத்தினையும் இல்லாதொழித்து விடலாம் எனவும் திட்டமிடுகின்றது. இவ்வாறு ஆட்பல ரீதியான அதிகரிப்பு ஏற்படாமல் தடுப்பதுவும் - பொருண்மியப் பலத்தினை முடக்குவதும் - விடுதலைப்புலிகள் ஒரு மரபு ரீதியான படையணியாக வளராது தடுப்பதற்கு அவசியம் என இராணுவம் கருதுகிறது போலும்.

**2) யாழ் குடாநாட்டிற்கு தரை வழிப் பாதையினை அமைத்தல்.**

யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்குத் தேவையான விநியோகத்தினைத் தற்போது கடல், ஆகாய வழி மூலமே மேற்கொள்ள வேண்டிய நிலை உள்ளது. இவ்வாறு விநியோகத்தினைத் தொடர்ச்சியாக மேற்கொள்வதில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள், செலவுகள் போன்றவை தரைவழிப்பாதை ஒன்றிற்கான அவசியத்தினை சிங்களப் படையினருக்கு ஏற்படுத்தியுள்ளது. தரைவழிப் பாதையை அமைப்பது மட்டுமன்றி அதனைப் பராமரிப்பது பற்றிய விடயங்கள் இராணுவத் தந்திரோபாயத்திலும் திட்டமிடலிலும் முக்கிய இடம் பெறுகின்றன.



**3) .அழித்தொழிப்புப் போர்.**

பாரிய மரபு ரீதியான சண்டைகளுக்கு விடுதலைப் புலிகளை இழுப்பதன் மூலம், விடுதலைப் புலிகளின் ஆட்பலத்தினையும் - ஆயுத பலத்தினையும் இயன்றளவு அழித்தொழித்து விடவேண்டும் என்பதும் இராணுவத் தந்திரோபாயத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. எனினும் 'சூரியக்கதிர்' 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிரான புலிகளின் போர் நடவடிக்கை, தங்களின் அழித்தொழிப்பு நடவடிக்கையை சாத்தியமாக்கப் போவதில்லை என்பதனை படையினருக்கு உணர்த்தியுள்ளது. இதேவேளை, புலிகள் தம்மீது அழித்தொழிப்பு நடவடிக்கையினை (முல்லைத்தீவுத் தளம் தகர்ப்புப் போன்ற) மேற்கொள்ளாது தடுப்பதற்கு, தொடர் மரபு ரீதியான தாக்குதலை நடாத்துவதையும் இராணுவம் தந்திரோபாயமாகக் கொண்டுள்ளது.

**4) தொடர்ச்சியான வெற்றியினைப் பெறுவதான உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தல்.**

சிங்களப்படையினர் தொடர்ச்சியான வெற்றியினைப் பெற்றுவருகின்றனர் என்ற உளவியல் தாக்கத்தினை சிங்கள, தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் - இராணுவ வெற்றிகளின் அரசியல் பரிமாணத்திற்கு அவசியம் என இராணுவத் திட்ட வகுப்பாளர்கள் கருதுகிறார்கள். உதாரணமாக, விடுதலைப் புலிகளால் மணலாற்றில் 5 முகாம்களை நோக்கி, யூலை 95ல் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கை, சூரியக்கதிர் 1,2,3 இராணுவ நடவடிக்கைகள் போன்றவை சிறீலங்கா இராணுவம் தொடர்ச்சியான வெற்றியினைப் பெற்று வருவதான தோற்றத்தினை ஏற்படுத்தியது. இது விடுதலைப் புலிகளைப் படிப்படியாக இராணுவ ரீதியில் வென்று விடலாம் என்ற உளவியல் நம்பிக்கையினை பலர் மத்தியில் ஏற்படுத்தத் தொடங்கியது. ஆனால் முல்லைத்தீவுத் தளம் மீது விழுந்த அடி, இது படையினருக்குப் பாதகமான உளவியல் தாக்கத்தினை ஏற்படுத்தியது. இதன் ஊடாகப் பெற்றுக் கொண்ட பட்டறிவின் மூலம், விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ள முகாம்களை மூடிவிடலாம் - தாம் புலிகளிடம் பலத்த அடியினை பெற்றதான உளவியல் உணர்வு ஏற்படாது என இராணுவம் கருதலாம். இதன் வெளிப்பாடாகவே பூநகரி முகாம் உட்பட மூன்று முகாம்கள் மூடப்பட்ட நிகழ்வினை நோக்க முடியும்.

இத்தகைய தந்திரோபாயங்கள் இராணுவத் திட்டமிடலில் முக்கியம் பெற்றாலும், இராணுவத்திற்கு மிக முக்கியமான வரையறையாக இருப்பது ஆட்பலமே. போதிய ஆட்பலம் இன்றித் தனது இராணுவ இலக்கினை நிறைவேற்ற முடியாமல் இராணுவம் திணறுகிறது.

இருப்பினும் 1997ம் ஆண்டு டிசம்பர்

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

-திலீபன்

# ஒரு தேசிய விடுதலை இயக்கத்திற்கு சுய நிர்ணய உரிமை பற்றிய ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் உரிமையும் உண்டு அங்கீகாரமும் உண்டு

உலகத்தமிழர் இயக்கப் பொறுப்பாளர் மாணிக்கவாசகம் சுரேஷ் அவர்களுக்கு எதிராக, குடிவரவுச்சட்ட விதி 40.1 இன் கீழ் தொடரப்பட்ட வழக்கு விசாரணை, கடந்த மார்ச் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பமாகியது. பலநாள் விசாரணையின் பின்னர், இவ் வழக்கு செப்டம்பர் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

வழக்க விசாரணையின்போது, அகில உலக சட்ட நிபுணர்களது சாட்சியங்கள் நீதி மன்றத்தில் சுரேஷ் சார்பாக நெறிப்படுத்தப்பட்டன.

மார்ச் மாதம் 20 ஆம் நாள் மாலை நடந்த நீதிமன்ற விசாரணையின்போது Illinois பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம் அளித்தார்.

அவரது சாட்சியத்தின் முக்கிய பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்துக் கீழே தருகிறோம். இது முன்னர் வெளிவந்த சாட்சியத்தின் தொடர்ச்சியாகும்.

## -பேராசிரியர் பிரான்சிஸ் பொயில் சாட்சியம்

சட்டம் என்ற நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். திரும்பவும் கனடாவைப் பொறுத்தளவில் இது பிரச்சனை அல்ல. கனடா இந்த மேலதிக ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. அதனை உள்நாட்டுச் சட்டத்துடனும் சேர்த்துக் கொண்டுள்ளது. அப்படிச் சேர்த்துக் கொண்டுள்ள சட்டத்தை நான் படித்துப் பார்த்திருக்கிறேன்.

**கேள்வி:** ஆயுத பலத்தை உபயோகிக்கலாம் என்ற உங்கள் கருத்தின்படி, நீங்கள் ஒரு தேசிய விடுதலை இயக்கம் ஆயுத பலத்தை உபயோகிக்கலாம் என்பதை ஒத்துக் கொள்கிறீர்களா?

**பதில்:** ஆம். அவர்கள் சாத்வீக வழிகளைப் பின்பற்றுவது இனி முடியாத காரியம். அவர்கள் தாக்கப்படுகிறார்கள். ஆக்கிரமிக்கப்படுகிறார்கள். குடியேற்றப்படுகிறார்கள். கொலை செய்யப்படுகிறார்கள்....

ஒரு விடுதலை இயக்கம் ஆயுதபலத்தை உபயோகிக்கலாம் என்ற கோட்பாடு, தற்காப்புக் காரணமாக எழுந்ததாகும். அவர்களுக்குத் தங்கள் மக்களைப் பாதுகாக்கும் உரிமை உண்டு. இதற்குமுன் சில உதாரணங்களைப் பார்த்தோம். முன்னய யூகோசிலாவியாவைப் பொறுத்தளவில், குரோசியர்கள் Svobodan Milosevie என்ற பூதத்தோடு சேர்ந்துவாழ முடியாது என்ற முடிவுக்கு வந்தபோது, அதே முடிவுக்குச் சுலேனியர்கள் தள்ளப்பட்டபோது, அதே முடிவுக்குச் பொஸ்னியர் வந்தபோது எல்லோரும் பிரிந்து விட்டார்கள்.

முன்னைய யூகோசிலேவியாவைத் தொடர்ந்து வைத்திருப்பதற்குரிய வழிவகைகள் பற்றி ஆராயப்பட்டது. ஆனால், மிலோசவிக் மற்ற இனத்தவர்கள் மீது முழு ஆதிக்கத்தையும், கட்டுப்பாட்டையும் வைத்திருப்பதிலும், அரசியல் யாப்பில் உள்ள பாதுகாப்புக்களை இரத்துச் செய்வதிலுமேயே ஆர்வமுள்ளவராக இருந்தார். எனவே குரோசியர்கள், சுலோவினியர்கள் மற்றும் பொஸ்னிய மக்கள், தங்களது நன்மைகருதி ஒரு முடிவுக்கு வந்தார்கள். தங்களைப் பாதுகாக்க இருக்கும் ஒரேவழி யூகோசிலேவியாவிலிருந்து பிரிந்து சுதந்திரமுடைய மக்களாக வாழவேண்டும் என்பதுதான்.

**கேள்வி:** இந்த முடிவு சுயநிர்ணய உரிமையை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் ஆயுத மோதல் ஒருமுறை ஆரம்பித்ததன்பின்..... அதற்கு ஏதாவது வரம்பு இருக்கிறதா என நான் அறிய விரும்புகிறேன்.

ஒருமுறை ஆயுத மோதலில் ஈடுபட்டபின் அல்லது தற்காப்பு யுத்தத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் போது, ஒரு தேசிய விடுதலை இயக்கம் மற்றவர்கள் தாக்கும்போது திருப்பிச் சுடுவதோடு நில்லாமல், எதிர்த் தாக்குதல் நடவடிக்கையிலும் ஈடுபடமுடியுமா?

**பதில்:** இதன் அர்த்தம் அவர்கள் தங்கள் பிரதேசத்தைப் பாதுகாக்கிறார்கள் என்பதாகும். தாக்குவது அந்நியப்படையாக இருக்கும் பட்சத்தில், அந்தப் படை தங்கள் பிரதேசத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் பட்சத்தில், எதிரிப்படையின் இராணுவ இலக்குகளைத் தாக்கும் உரிமை அவர்களுக்கு உண்டு. ஆனால், பொதுமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

**கேள்வி:** வெளியேறும் உரிமை, வெளியேற்ற முயற்சிக்கும் உரிமை?

**பதில்:** வெளியேற்றுவது. நிட்சயமாக. 1812இல் நடந்த சண்டையை நீங்கள் நினைவில் வைத்திருந்தால், அமெரிக்கா இங்குவந்து கனடாவைப் பிடிக்க எத்தனித்தது. நீங்கள் எங்களை வெளியேற்றினீர்கள். அப்படிச் செய்தது மெத்தவும் சரி.

**கேள்வி:** நான் நினைக்கிறேன் இப்போதும் நீங்கள் முயற்சி செய்கிறீர்கள்.

**பதில்:** அது வேறு பிரச்சனை.

**கேள்வி:** முடிவாக இரண்டு விடயங்களை நான் சுருக்கமாகக் கூறிவிட விரும்புகிறேன். இந்தக் கோட்பாடு பற்றிப் பேசப்பட்டது. உண்மையைச் சொன்னால், எனக்கு இதில் நிபுணத்துவம் கிடையாது. இது எந்த மரபு அல்லது பிரகடனத்தில் இருந்து எழுந்தது என்பது எனக்கு ஞாபகமில்லை. ஆனால், சுய நிர்ணய உரிமையை நிலைநாட்டுவதற்கு உதவிபெறுவது அல்லது கேட்கும் உரிமை (தேசிய விடுதலை இயக்கங்களுக்கு) உண்டு.

**பதில்:** இது நட்பு சம்பந்தமான பிரகடனம். பேராசிரியர் குமிக்லி (Quigley) இது பற்றிச் சொன்னார். அதன் வாசகம் தற்சமயம் என்னிடம் இல்லை.

**கேள்வி:** இது ஆவணம் S-3, "1970ம் ஆண்டு சர்வதேசச் சட்டத்தின் கொள்கைகள் பற்றிய பிரகடனம்"

**பதில்:** அது சரி. இந்தப் பிரகடனம் ஐ.நா. பொதுச்சபையில் மனவொற்றுமையின் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்தப் பிரகடனம் மரபுச்சட்டம் என்பதை எடுத்துக் காட்டுகிறது. சர்வதேச நீதிமன்றம், இந்தப் பிரகடனம் மரபுச்சட்ட அந்தஸ்தை அடைந்துள்ளது எனத் தீர்ப்பளித்துள்ளார்.

**கேள்வி:** இதற்கு ஏதாவது வரம்பு இருக்கிறதா? அது அரசு ஒன்றின் உதவி மட்டுமா? தனிப்பட்ட அல்லது அமைப்பின், அரசு சார்பற்ற அமைப்பின் உதவி மட்டுமா?

**பதில்:** இது பற்றி வரையறை செய்யப்படவில்லை. "கேட்டுப் பெறும் உதவி" என்று மட்டுமே சொல்லப்பட்டது. இதற்கு ஒரு முறையான வரையறை இருக்கிறதென நான் நம்பவில்லை. ஆனால், எனக்கு ஞாபகம், வரைவில் ஆயுதங்கள் பெறுவது பற்றிக் குறிப்பிட்டிருந்தது.

**கேள்வி:** ஒரு தேசிய விடுதலை இயக்கம் என்றால், அதற்கு சுய நிர்ணய உரிமை பற்றிய அங்கீகாரம் உண்டு. ஜெனிவா மரபுகள் மற்றும் மேலதிக ஒப்பந்தங்கள் இவற்றின் அடிப்படையிலும், இவற்றிற்கு உட்பட்டும் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபடும் உரிமை உண்டு.

அப்படியென்றால், ஒருவர் நிதியுதவி அல்லது அதுபோன்ற உதவியை ஒரு தேசிய விடுதலை இயக்கத்திற்கு அளிப்பது, சர்வதேச சட்டத்தை மீறுவதாக இருக்குமா?

**பதில்:** மீண்டும் நான் நீதிபதி Teitelbaum அவர்கட்கு எடுத்துச்சொன்ன Zyklon B பற்றியது. போர்க்குற்றங்களை இழைக்க ஒருவர் உதவி செய்தால், அப்படி உதவி செய்பவர் அக்குற்றங்களுக்கு உதவி செய்பவராகவும் உடந்தையாளராகவும் கருதப்படுவர்.

இது அவர் என்ன உதவி செய்கிறார், அது பற்றிய விளக்கம் என்ன என்பதைப் பொறுத்தது. ஒரு பொதுமகனாக இருந்து, ஒரு தேசிய விடுதலை இயக்கத்தின் உறுப்பினர் ஒருவர், ஒரு பேரூந்து வண்டிக்குக் குண்டு எறிந்து பெண்கள் குழந்தைகளைக் கொல்லப் போகிறான் என்று தெரிந்தால், அவருக்கு அந்தப் பொதுமகன் உதவி செய்தால், அப் பொதுமகன் போர்க்குற்றம் இழைப்பதற்கு உதவி செய்தவர், உடந்தையானவர் என்று கணிக்கப்படுவார்.

**கேள்வி:** தேசிய விடுதலை இயக்கம்........

**நீதிபதி:** ஒரு நிமிடம். ஐயா, இப்போது நீர் சொன்னதைத் திருப்பிச் சொல்லுங்கள்.

**சாட்சி:** ஆம். அவர் கேட்டார்........

**நீதிபதி:** ஒரு பேரூந்து மீது குண்டுவீசும் ஒருவருக்கு உதவி செய்தால், அது போர்க்குற்றம்? **சாட்சி:** தேசிய விடுதலை இயக்க உறுப்பினர்........

**நீதிபதி:** மெத்தச்சரி.

**சாட்சி:** மன்னிக்கவும். அதனை நான் விளக்க விரும்புகிறேன்.

**நீதிபதி:** மெத்தச்சரி, மீண்டும் முதலிலிருந்து ஆரம்பிப்போம். ஒரு பேரூந்து வண்டிக்குக் குண்டையெறிய முடிவு செய்துவிட்டார் என வைத்துக் கொள்வோம். அந்தப் பேரூந்தில் பெண்கள், குழந்தைகள் இருக்கிறார்கள். ஒரு தேசிய விடுதலை இயக்கப் போராட்டப் பின்னணியில், எனது அபிப்பிராயப்படி இது போர்க்குற்றமாகும்.

**நீதிபதி:** இன்னொரு நாட்டில் வசிக்கும் ஒருவர்........ நீங்கள் பாவித்த வார்த்தை எவை?

**சாட்சி:** ஐக்கிய அமெரிக்கா என்று வைத்துக் கொள்வோம்.

**நீதிபதி:** இல்லை. நீர் சொன்ன வார்த்தைகள்........

**சாட்சி:** நான் சொன்னது, "அதற்கு உதவியாக இருப்பவர்."

**நீதிபதி:** அதற்கு உதவியாக இருப்பவர், அது போர்க்குற்றமாகக் கருதப்படுகிறதா?

**சாட்சி:** மற்ற நாட்டில் உள்ளவர், தான் உதவி செய்யும் நபர் போர்க்குற்றம் புரியப்போகிறார் என்பதைத் தெரிந்து வைத்திருந்தால், இது கிரிமினல் சட்டத்தைப் பற்றியது.

அவர் தனது உதவி எதற்காகப் பயன்படப் போகிறதென்பது, அவருக்குத் தெரிந்து இருந்தது. என்பது நிரூபிக்கப்பட வேண்டும்.

**நீதிபதி:** அதாவது, அந்த நபர் குற்றம் இழைத்தார் என்று அவர்மீது வழக்குத் தொடரும் பட்சத்தில்?

**சாட்சி:** ஆம். அதுசரி.

**நீதிபதி:** நான் குற்றம் நிரூபிப்பது பற்றி அதிகம் கவலைப்படவில்லை. நான் அறிய விரும்புவது என்னவென்றால், உமது கண்ணோட்டத்தில் இந்த நபர் போர்க்குற்றவாளியாகக் கருதப்படலாமா? அவருக்கு அதுபற்றிய விபரம் எல்லாம் தெரிந்திருந்தது என்று நாம் எண்ணிக் கொண்டால்........

**சாட்சி:** அவர் ஒரு குறிப்பிட்ட குற்றத்திற்கு உதவியாகவும், உடந்தையாகவும் இருந்தார் என்று கருத முடியும். நான் இது தொடர்பாக Zyklon B வழக்கைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன்.

**நீதிபதி:** மிகவும் நன்றி ஐயா. ஆம் அப்படிச் சொல்லியிருந்தீர்கள்.

**சாட்சி:** கம்பனி நிர்வாகிகள், யூதர்களைக் கொன்றொழிப்பதில் நாசிகட்கு (SS) உதவியாகவும் உடந்தையாகவும் இருந்தார்கள்.

**நீதிபதி:** இல்லை. நான் நினைக்கிறேன், அவர்கள் இதனைத் தங்கள் சொந்த நாட்டுக்குள்ளேயே செய்தார்கள். இந்த வழக்கில் பிரச்சனை சற்று வித்தியாசமானது.

**சாட்சி:** ஜேர்மனிக்குள்ளா அல்லது Auschwitz குள்ளா என்பதை என்னால் ஞாபகப்படுத்த முடியாமல் இருக்கிறது. ✷

# நாமென்ன செய்தோம்?

**"எங்கள் தமிழீழ மக்கள் சுதந்திர வாழ்வுக்கான பிரசவ வேதனையை அனுபவிக்கும் இந்நேரத்தில், அவர்களின் சொந்தங்களான - பந்தங்களான - உடன் பிறப்புக்களான - கிட்டிய குடும்ப உறுப்பினர்களான நாம் அவர்களது துன்பங்கள் தீர, விடுதலை மலர இதுவரை என்ன செய்தோம்" என எண்ணிப் பார்க்க வேண்டிய நேரமிது.**

**"விடுதலைப்புலிகளை அழித்து விட்டோம். தமிழீழ மக்களை அடிமை கொண்டுவிட்டோம்"**

எனக் கொக்கரித்த சந்திரிகாவின் – சிங்கள அரசாங்கத்தின் போலித்தனம் உலகிற்குத் தெளிவாகி வருகிறது. தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் என்பது, தமிழீழ மக்களின் வாழ்வுக்கான தேசிய விடுதலைப் போராட்டம். இதனால் ஒவ்வொரு தமிழீழக் குடிமகனும் தமது உயிரையும் பொருட்படுத்தாது இப்புனித ப்போரில் தமது பங்கினை நல்கத் தயாராக வேண்டும். "எத்தகைய துன்பங்களையும் தாங்கி, விடுதலை வாழ்வைத் தமது வருங்கால சந்ததிக்கு வழங்கியே ஆவோம்" எனும் மனஉறுதியுடன் தமிழீழ மக்கள் துணிந்து போராடுகின்றனர் என்பதற்கு, இதுவரை தமிழீழ மக்கள் தாங்கிய வேதனைகள் – சோதனைகளே சான்றாக நிற்கின்றன. இச்சோதனைகள் எல்லாவற்றையும் முறியடிக்கத்தக்க முறையில், விடுதலைப் போராட்டத்தை வழிநடத்தி, தமிழீழத் தேசத்திற்கு விடுதலையைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய ஆற்றலுள்ள தலைவனாக – தமிழீழ மக்களின் சுதந்திரத்தின் குறியீடாக – தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் விளங்குகிறார். அவரது தலைமைத்துவத்தின் ஆற்றலினால், சிங்களச் சிறிலங்காவின் தமிழீழ மக்களுக்கு எதிரான அரசியல், பொருளாதார, இராணுவச் சதித்திட்டங்கள் எதுவும் நிறைவேற முடியாமல், விடுதலை புலிகளினால் முறியடிக்கப்பட்டு வருவதை, சமீப கால தமிழீழத் தேசவரலாறு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இவ்வியலாமையினால் **உண்மைக்கு மாறான தோற்றத்தினைச் சர்வதேச உலகில், தலைவர் பிரபாகரன் பற்றியும் தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றியும் பரப்புவதில், சிறிலங்கா அரசாங்கம் தனது முழுச் சக்தியையும் பிரயோகித்து அதனையும் தனது இராணுவ தந்திரோபாயங்களில் ஒன்றாகக் கருதிச் செயற்பட்டு வருகிறது. "இது தலைவருக்கோ அல்லது விடுதலைப் புலிகளுக்கோ எதிரான செயற்பாடு அல்ல. முழுத் தமிழீழ மக்களது தன்மானத்திற்கும் சுதந்திர வாழ்வுக்கும் எதிரான திட்டமிட்ட சதிச்செயலாகும்."** அது உலகுக்கு வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளதுடன், தமிழீழ மக்களின் தேசியத்தலைவர் பிரபாகரனே என்பதனையும் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தினர். அது மட்டுமல்லாமல் இருப்பிடங்கள், உணவு, மருந்து போன்ற பல அடிப்படை மனித உரிமைகள் வெட்ட வெளிச்சமாக மறுக்கப்பட்ட நிலையில், அப்பாவித் தமிழ் மக்கள் சிறிலங்காவால் வதைக்கப் படுவதை உலகுக்கு எடுத்துரைத்து, எமது மக்களுக்கான அடிப்படை மனித தேவைகளை அவர்களுக்குக் கிடைக்க ஆவன செய்யுமாறு சர்வதேச உலகை வற்புறுத்தியும் வருகின்றனர்.



மட்டுமல்ல, நியாயமானதும் சர்வதேசச் சட்டங்களுக்கு ஏற்புடையதுமான தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தின் புனிதத்தன்மையைக் கொச்சைப்படுத்துவதுடன், அதனைச் சர்வதேச நாடுகள் அங்கீகரிப்பதைத் தடுக்கும் திட்டமிட்ட அரசியல் சதித்திட்டமாகவுமுள்ளது.

இவ்வாறான புலம்பெயர் வாழ் தமிழீழ மக்களின்

அண்மைக்கால தாயகம் நோக்கிய விழிப்புணர்ச்சிகளால், தனது சதித்திட்டங்கள் எல்லாம் சீர்குலைக்கப்படுவதை உணர்ந்த சிறிலங்கா அரசு, புலம் பெயர் தமிழர்கள் மேல் சீற்றங்கொண்டுள்ளது.



இதனைப் பொடிப்பொடியாக்கும் பொறுப்பு, எம்மிடம்தான் உண்டு.

இதை உணர்ந்த, புலம்பெயர்வாழ் தமிழர்கள் தாம் வாழும் நாடுகளில் எல்லாம், தேசிய விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையையும் சிறிலங்காவின் அந்நிய அரசாகச் செயற்படும் மாற்றான் மனப்பாங்கையும் பல வழிகளிலும் சர்வதேச

அவர்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரிய தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச நிதிப்பொறுப்பாளர் நாதனையும், ஈழமுரசு பத்திரிகையாசிரியர் கஜனையும் தனது பயங்கரவாதக் கொலைக்கரங்களால் அவர்களிடம் இருந்து பறித்தது. சிறிலங்காவின் அரக்கத்தன்த்தினால் பாரிஸில் படுகொலை செய்யப்பட்ட இவ்விருவரையும், தமிழீழத்தேசம் மாவீரர்களாக ஏற்று கேணல் நாதன், கப்டன் கஜன் எனும் அதியுயர் தேசவிருதுகளையும் வழங்கி அவர்களது தேசப்பணியைக் கௌரவித்துள்ளது.

# இனியென்ன செய்வோம்!

இவ்வரலாற்றுச் சம்பவங்கள் தமிழீழ மக்கள் எங்கு வாழ்ந்தாலும், அவர்களுக்கும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் இடையிலுள்ள பிரிக்கப்பட முடியாத உறவைத் தெளிவுபடுத்தி நிற்கின்றன. இதனால் **புலம் பெயர்வாழ் தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும், "நம்நாட்டுக்கு நாமென்ன செய்தோம்" என்பதை எண்ணிப்பார்க்கும் அதேவேளை, "நாமென்ன செய்ய வேண்டும்" என்பதையும் எண்ணிப்பார்த்து, தீவிரமாகச் செயற்படவேண்டிய வரலாற்றுக் கட்மையில் உள்ளோம் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.** தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச அலுவலகங்களுடன் இணைந்து திட்டமிட்டு செயலாற்ற வேண்டிய முகாமைத்துவ ஒழுங்குபடுத்தலின் தேவையும் இன்று அதிகரித்துள்ளது.

இத்தேவையை உலகுக்கு வெளிப்படுத்தும் தகவல் பரிமாற்றப் பணியில் நாமும் இணைந்து எமது பத்திரிகைகள் சஞ்சிகைகள், செய்தி ஒலிபரப்புக்கள் சிறப்புற நேரமும் அறிவும் அனுபவமும் வழங்கிட முன்வருவோம். எமது தமிழீழ பெண்களின் பெருமைமிகு அமைப்புக்களின் செயற்பாட்டாளர்களாகவும் சிறிலங்கா நடாத்தும் மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தும் பணிகளில் பங்கேற்பவர்களாகவும் நாம் இணைந்து செயற்பட்டு எமது தேசமக்களின் உண்மை நிலையினை நேசமுடன் வெளிப்படுத்துவோம்.

இவைகளைவிட, கலையினாலும் வழிபாட்டுத்துறையினாலும் எமது மக்களின் உண்மை நிலைகளை எடுத்துவிளக்கியும் எமது மக்களுக்கு உதவிகள் வழங்கியும் தேசத்திற்கு நேசமுடன் உதவமுற்படும் அனைவருடனும் இணைந்து நாமும் நம் கடமைச் செய்வோமாக.

அறிவார்ந்த நிலையில் எம் தேசத்தின் வரலாற்று உண்மைகளை, தேசிய விடுதலைப் போராட்டத்தின் சர்வதேச சட்டங்களுக்கு அமைவான நிலைப்பாடுகளை, தேவையினை நிறைவேற்றும் பணியில் இணைந்தும் நாம் வாழும் நாடுகளின் மக்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் தலைவர்களுக்கும் ஐக்கியநாடுகள் சபைக்கும் சிறிலங்காவின் தமிழின ஒழிப்பு நடவடிக்கைகளை, எம்மக்கள் எதிர் நோக்கும் அவலங்களையும் எழுத்து மூலம் எடுத் துரைத்து விளக்க வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழ மக்களின் அரசியல் தலைமைத்துவம். சிறிலங்காவின் ஆக்கிரமிப்புக் காரணமாக, தமிழீழத் தேசத்தின் தேசியபாதுகாப்பை மீளப்பெறுவதற்காகத் தமிழீழ விடுதலைப்புலிகள், தமிழீழத்தேசத்தின் இராணுவமாகவும் செயற்படவேண்டிய தேவை தவிர்க்க முடியாதது. இந்த உண்மையை உலகுக்கு தெளிவாக எடுத்துரைத்து, சந்திரிகாவின் "பயங்கரவாத இயக்கம்" எனும் காடைத்தனமான அடைமொழியின் போலித்தனத்தை, அம்பலமாக்க வேண்டிய பொறுப்பு புலம்பெயர்வாழ் தமிழீழ மக்களின் தலையாய பணியாக உள்ளது. இதற்கு எமது மேலான அரசியல் பணிவு (political obligation), என்றும் எம் தலைவன் பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் எமது மக்கள் அமைப்புக்கே என்பதை, நாம் இயலுமான எல்லா வழிகளிலும் தெளிவாக்க வேண்டும்.

அத்துடன், எமது இனத்தின் வாழ்வு, விடுதலைப் புலிகளின் கைகளைப் பலப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது என்பதை உணர்ந்து, நிதியும் மதியும் உழைப்பும் உணர்வும் நல்கி, எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி விரைவுபெற, எங்கு வாழ்ந்தாலும் எப்படி வாழ்ந்தாலும் எம்மால் ஆனதைச் செய்வோம். எமது மக்களின் புனர்வாழ்வு அமைப்பான தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கும் எமது ஆதரவைத் தேடும் செல்வங்களின் அமைப்பான செஞ்சோலைக்கும் எமது தேசத்தின் பொருண்மிய அபிவிருத்தி அமைப்பான தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்திற்கும் நிதியிலும் செயலிலும் பங்காளிகளாகப் பணியாற்றுவோம்.

இறுதியாக நாம் எப்படி எப்படியெல்லாம் எமது தமிழீழ தேசத்திற்கும் மக்களுக்கும் எம் கடமைகளைச் செய்ய முடியுமோ, அவைகளையெல்லாம் நாம் வாழும் நாடுகளில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச அலுவலகங்களுக்கு எடுத்து விளக்கி, தேசப்பணியில் வேகமாக முன்னேறுவோம். எமது வேலைப் பளுக்கள், நேரடிச் செயற்பாட்டுக்குத் தடையாக இருப்பின், இத்தகைய பணிகளைப் பல இன்னல்களுக்கு மத்தியில் தேசப்பற்றுடன், ஆர்வமுடன், முழுநேரமாக மேற்கொள்ளும் செயற்பாட்டாளர்களுக்கு நிதி உதவி அளித்து அவர்களை ஊக்குவிப்பதன் மூலமும் தேசப்பணி செய்வோம். ✳

-பற்றிமாகரன் -

# நீண்ட நெருப்பாற்றில் குறிதவறாத இலக்கு!

**மீ**ண்டும் ஒரு யுத்தத்தின் கதை. இரத்தஆறு பெருகி வித்தாகிப்போன இந்த மண்ணின் மைந்தர்களோடு இது தொடங்குகிறது. எரிக்கப்பட்ட பகை



வீடுகளும் அள்ளப்பட்ட எதிரியின் ஆயுதங்களும் பெரு வரலாறாய் விரிந்து இம்மண்மீது வளர்கிறது.

மழை இருளும் பனிக்குளிரும் மூடிய இரவுகளில் எதிரியின் கண்ணிவயல்களில் ஊர்ந்து, திரும்பி வராமற்போன **வேவுப்புலி** வீரர்களின் சரித்திரங்கள் முகவுரையாக அமைய, அந்தக் களத்தின் கதை எம்முள் வாழ்கிறது.

நீண்ட இடைவெளிக்குப்பின் பெரியதொரு இராணுவத் தளம் மீதான தாக்குதல், பகை சூழ்ந்த யாழ் குடாநாடு, கொக்குத்தொடுவாயில் பகைவீடு எரிக்கச்சென்று வித்தாகிப்போன எமது தோழிகள், தோழர்கள்....... அனைத்தையும் எண்ண அலைகளில் நெருப்பாகச் சுமந்த உறுதி.

எமது படையணிகள் நீண்டதாக நிற்கின்றன. வகைவகையான ஆயுதங்களுடன்......... தொகைதொகையான ஆட்களுடன்.........

**"கடின பயிற்சி சண்டையை இலகுவாக்கும்"** என்று எமது தலைவர் கற்றுத்தந்த பாடம் பயிற்சிக்களத்தில் போராளிகள் மனதில் உறுதி சேர்த்தது. இரவு பகல் ஓயாத பயிற்சி உணவு உண்பதற்கு, அவசியத்தேவைகளுக்கு மட்டுமே வழங்கப்பட்ட ஓய்வுநேரம். வெயில் கொழுத்தும் மணற்தரைகளும் சதுப்பு நிலங்களும் பயிற்சிக் களங்களாக உருக்கொண்டன.

பயிற்சித் தளத்திற்கு அண்மையிலிருந்த இராணுவத்தளத்தில் இருந்து ஓயாமல் ஏவப்படும் எறிகணைகள், இடையிடையே பயிற்சித் தளத்தையும் குறிபார்க்கும். குளிப்பதற்கும், குடிப்பதற்கும் தண்ணீர் பற்றாக்குறை. எனினும் போராளிகள் உற்சாகமாகவே இருந்தனர். கடின பயிற்சியால் போராளிகள் புடம் போடப்பட்டனர்.

'ஓயாத அலைகள்' சண்டைக்களமானது, மாலதி படையணியின் அண்மைக்கால கள வரலாற்றில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த கள அனுபவமாகும். இராணுவத்தளத்தின் குறிப்பிடத்தக்க பகுதியை இப்படையணி தாக்கியழித்தது.

மாலதி படையணியின் **சிறப்புத் தளபதி விதுஷா** அவர்களின் தலைமையில் உள்நுழைந்த அணியில், பெரும் எண்ணிக்கையானோர் பங்குபற்றினர்.

தாக்குதல் திட்டத்தின்படி முல்லைத்தீவின் பிரதான பாதைக்கு அண்மையாக ஒரு பாதை எடுத்து நகரும் பொறுப்பு **மேஜர் சுமங்களா** (இவர் பின்னர் 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்) அவர்களின் அணிக்கும், கடற்கரைப் பக்கத்தின் ஒரு பகுதியூடாக நகரும் பொறுப்பு **அசோகா** அவர்களின் அணிக்கும் கொடுக்கப்பட்டது.

மணலாறு மாவட்டத் தாக்குதல் அணி பாதை எடுத்துக் கொடுக்க, அதனூடாக உள்நுழைந்து தாக்குகின்ற அணியாக **சூரியகலா** அவர்களின் தலைமையிலான அணி நகரும் என திட்டமிடப்பட்டிருந்தது.

**1996-07-17** எமது அணிகள் நகரத்தொடங்கின. இரவின் கரிய இருள்– நீண்டதூர நடை. பற்றைகளும், முட்களும் நிறைந்த பாதைகள் கடந்து, தாக்குதல் நடக்கவிருக்கும் இடத்திற்கு வந்தனர்.

இரவின் கனத்த அமைதியும் காரிருளும் சூழ, முல்லைத்தீவு இராணுவத் தளத்தைச் சுற்றிய பகுதிகள் உறங்கிக் கிடந்தன. தளத்தைச் சூழ அமைக்கப்பட்டிருந்த மின்குமிழ்களின் ஒளியும், 'தேடொளி' வெளிச்சமுமாக வழமைபோல் முன்னணிக் காவலரண்களில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. கம்பிச் சுருள்கள் சுற்றிவரப் பாதுகாவலாக அமைய, உயர்ந்த மண்அணைகளுடன் அந்தத் தளம் எதற்கும் அஞ்சாத தீரத்துடன் இருந்தது.

**18ம் திகதி அதிகாலை,** மூச்சுக் காற்றுக்கள் மெல்லியதாகத்தேய, எமது போராளிகள் ஊர்ந்து சென்றனர். மேஜர் சுமங்களா அவர்களின் அணி, முன்னணிக் காவலரண்களை நோக்கி நகர, அவதானிப்புஅரணில் உருமறைந்திருந்த இராணுவம் இதை அவதானித்தே விட்டது.

அனைத்து அணிகளும் தாக்குதலுக்கான இறுதி நகர்வில் இறங்கிவிட்டன. எனவே இப்பாதையால் எதிரி தன்னைப் பலப்படுத்தி எம்மைத் தாக்க முயன்று, அதனால் சண்டை குழம்பும் நிலையைத் தவிர்ப்பதற்காகப் புத்திசாலித்தனமாக முடிவெடுத்த அவ்வணி அவதானிப்பு நிலையைச்சுற்றி நிலையெடுத்தது.

மற்றய அணிகள் அவற்றின் இலக்குகளுக்காக நகர்ந்தன. அது சூரியகலா அவர்களின் தலைமையிலான அணி. அப்பாதை கடினமானது. ஏராளமான உட்தடைகள் நிரம்பியது. எதுவித ஆதாரப் பாதுகாப்புமற்ற நகர்வுப்பாதை. முதலாவதாக **மேஜர் ரமணி** (முன்னாள் வன்னி மாவட்ட விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர்) அவர்களின் அணி உள்நுழைந்தது. கும்மிருட்டு. எதிரியிடம் இருந்து வருகின்ற டொங்கான் எறிகணைகள், கலிபர் ரவைகள், கனரக ஆயுதங்களிலிருந்து வரும் எறிகணைகளின் நெருப்பு ஒளிகளைத்தவிர, இருள் சூழ்ந்த பாதை. பாதை விலகி சிறிது நகர்ந்தாலும் ஆளையே விழுங்கும் கண்ணிவெடிப் பொறிகள். எமதணிகள் முன்னேறி மண் அணையைக் கடக்கும் சமயம் எம்மில் பலர் காயமடைந்தும், வீரச்சாவடைந்தும் போனார்கள்.

**மேஜர் ஜெயா, மேஜர் சுலக்சி, மேஜர் கண்ணகி, கப்டன் மதி, கப்டன் ஜீவினி, கப்டன் கிருபா** உட்பட பல தீரமிக்க போராளிகளை நாம் இழந்த இடம். முன்னேறிய அணியோடு **மேஜர் சுமங்களா** அவர்களின் அணியும் இணைந்து கொண்டது.

இவர்களைத்தொடர்ந்து அப்பாதையால் **தூயவள்** அவர்கள் தன் அணியுடன் முன்னேறினார். குறித்த இலக்கு கைப்பற்றப்பட்டு விட்டது.

**அசோகா** அவர்களின் அணிக்கு, கடலோரமாக ஒருபகுதி கொடுக்கப்பட்டிருந்தது. தளத்தின் பிரதான விநியோக வழிப்பாதையாக கடலே இருந்தது. எனவே அந்தஅணி வேகமாக முன்னேறித் தாக்கி, பாதையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக முன்னணிக்காவலரண் தொடரைத் தகர்க்கும் நடவடிக்கையில் இறங்கியது. இறங்கிய வேகத்திலேயே அப்பகுதியைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

இச்சண்டையின் போது தளத்தின் பிரதான பகுதியில் ஒரு பகுதியைத் தாக்கி அழிக்கும் முழுப்பொறுப்பும் சிறப்புத்தளபதி விதுஷா அவர்களிடம் கொடுக்கப்பட்டிருந்தது. சூழவுள்ள சிறு தளங்கள் குறிப்பிட்ட சில நிமிடங்களில் எம்மால் கைப்பற்றப்பட்ட பின்னர் அங்கிருந்த இராணுவம் சிதறி ஓடி, மையப் பகுதியுள் ஒன்று சேர்ந்தது.

இராணுவம் தன்னைத் தயார் நிலையில் வைத்திருந்தபோதும் புலிகள் தம்மை முற்றாக ஒழித்து விடுவர் என்று எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால், புலிகளிடம் போதிய படைபலம் இல்லை என்றே தாம் எண்ணியதாகத் தப்பி ஓடிய இராணுவம் கூறியது. எனவே அந்த மனநிலையில் இருந்த இராணுவம் பிரதான தளத்தில் ஒன்றுதிரண்டு எதிர்க்கத்தொடங்கியது. அவர்கள் தமது உயிரின் தற்காப்புக்காகக் கடைசி நிமிடப் போராட்டத்தில் இருந்தனர். இந்நிலையில் கண்மூடித்தனமான தாக்குதலில் இறங்கினர். ஒளிக்கக்கூடிய இடங்களிலெல்லாம் ஒளித்து, தமது பாதுகாப்பை உறுதிசெய்ய விரும்பினர்.

பனை மரங்களில் ஏறிநின்று கைக்குண்டுகளைக் கழற்றி வீசினர். பற்றை மறைவுகளிலும் வீட்டுக்கூரைகளிலும் மறைந்திருந்து தாக்குதல்களை நடத்தினர்.

இவர்களைத் தேடி அழிக்கும் முயற்சியில் எமது படையணிகள் கட்டிடங்களில் ஊடுருவித் தாக்குதல்களை நடத்தினர். தளத்தின் பிரதான அமைவிடங்கள், நிர்வாக அலகுகள் என்பவற்றுள் தேடி அழிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தன.

பனைமேல் ஏறி உயிருக்காய் ஒளித்த இராணுவத்தினரைக் குறிபார்த்து விழுத்தினர். பற்றைகள் வீடுகளுக்குள் மறைந்திருந்தவர்களைக் கொன்று ஒழித்தனர்.

**இரண்டாவது நாள்,** ஆனையிறவை அண்டிய பகுதியில் நின்றிருந்த **அஜந்தி** அவர்களின் தலைமையிலான அணி, தளத்தின் பிரதான இலக்குமீதான சண்டையில் பங்கேற்றது. இரண்டாம் நாள் சண்டையில் **லெப். தாமரைச்செல்வி, லெப். பூவாணி** உட்பட பலர் வீரச்சாவடைந்தனர்.

இச்சண்டையின்போது முல்லைத்தீவு இராணுவத்திற்கு உதவியாக, அளம்பில்



ஒவ்வொரு களத்தின் கதைக்கும் வேவுப்புலி வீரர்களே முகவுரை எழுதுகின்றனர்.

பகுதியில் இராணுவத்தினரும், போர்த்தளபாடங்களும் தரையிறக்கப்பட்டன. இதன்போதான சண்டையில் கடற்புலி அணியினரும், மாலதி படையணியும், மகளிர் படையணியின் சிறப்புப்பிரிவினரின் கனரக ஆயுதப்பிரிவும் களத்தில் நின்றன.

கடலில் நடைபெற்ற சண்டைகளில் கடற்புலிகள் மகளிர் படையணி,

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

'ஓயாத அலைகள்' சண்டைக்களமானது, மாலதி படையணியின் அண்மைக்கால கள வரலாற்றில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த கள அனுபவமாகும். இராணுவத்தளத்தின் குறிப்பிடத்தக்க பகுதியை இப்படையணி தாக்கியழித்தது.

# நெஞ்சம் மறப்பதில்லை

**இரவின் இருளில் அலைகடல் ஏறிச் சென்று, அந்தக் கடலோடு கரைந்த இனியவர்களே!**

**கடலில் பகை எதிர்த்து உமை அழித்தீர். இது ஒரு பதிவு. வரலாறு நீள்கின்ற காலக் கரையில் மீண்டும் மீண்டும் நினைத்து எமக்குள் உறுதி சேர்த்த புயல்களாக எமக்குள் வாழ்வீர்.**



மேஜர் சுடரொளி
இரத்தினமலர் செபமாலை
(மாதகல்)
பிறப்பு - 1972 . 11 . 20
வீரச்சாவு - 1996 . 07 . 19

லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை உட்பட 30 பெண் போராளிகள்– கடற்புலிகள் மகளிர் படையணியின் ஆரம்பகர்த்தாக்கள் –புதிய மீன் குஞ்சுகளைத் திரட்டிய காலத்தில் இணைந்தவள் சுடரொளி.

**"நாங்கள் எல்லாத்துக்கும் முன்னு தாரணமாய்ச் செயற்ப ட்டால்தான், நாளைக்கு எங்கட பெண்கள் சமூகத் தடைகளை உடைச்சு வெளியே வருவார்கள்"**

என்று தன்னிடம் பயிற்சி பெறும் புதிய போராளிகளுக்குக் கூறுவாள். அவள் ஒரு சிறந்த ஓட்டி. நீச்சற்பயிற்சி ஆசிரியர். திறமையான பொறிகள் திருத்துனர். மிகத்திறமையான இலக்குத்தவறாத சூட்டாளர். இவளது திறமை காரணமாக R.P.G. பயிற்சியையும் பெற்றுக்கொண்டாள். சிலகாலம் Mag இயக்குனராகவும் செயற்பட்டாள்.

மண்டைதீவு முகாம் தாக்குதல், பருத்தித்துறைக் கடற்சண்டை, தரையிறங்கு கலம் மீதான தாக்குதல், தவளைத் தாக்குதல், யாழ்தேவி இராணுவ நடவடிக்கை என்பவற்றில் குறிப்பிடத்தக்க வகையில் முத்திரை பதித்தாள் சுடரொழி.

ஒரு கரும்புலியாகப் பயிற்சி முடித்துக்கொண்டபின் ஏறத்தாழ ஒருவருடம் வெடிமருந்துப் படகுடன் அலைந்து திரிந்தாள். இலக்குக் கிட்டவில்லை.

சுண்டிக்குளக் கடற்பரப்பில் நின்ற டோராவைத் தாக்க இவளுக்கு வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், இலக்கை நெருங்க முன்னரே எதிரிகளின் தாக்குதலால் சுடரொழியின் இரண்டு கைகளிலும் காயம் ஏற்பட்டது. கூடவே அதேபடகில் இருந்த கரும்புலி பார்த்திபனுக்கு ஏற்கெனவே ஒருகால் முழங்கால்வரை இல்லை. அந்தக் காலிலேயே மீண்டும் காயம் ஏற்பட்டது. அதனால் இருவரும் கரைதிரும்ப வேண்டி நேரிட்டது.

சுடரொழிக்கு இரண்டு கைகளும் இயலாமல் போய்விட்டது. கொஞ்சநாள் ஓய்வெடுக்குமாறு கூறிய பொறுப்பாளருடன் சண்டை பிடித்து, தனக்கு வாய்ப்புத் தருமாறு கேட்டாள்.

அவளுக்கு அந்த வாய்ப்பு 'ஓயாத அலைகள்' தாக்குதலின்போது கிடைத்தது. இந்தச் சண்டையில் சுடரொழியுடன் கூட படகில் கூடவந்தது செல்லப்பிள்ளை.

கரும்புலி பார்த்திபனும் சுடரொழியும் நல்ல நண்பர்கள். இருவரும் ஒன்றாகத்தான் இடிப்போம் என்று சொல்லிக்கொள்வார்கள். தன் நண்பனை விட்டுப் பிரிந்தது சுடரொழிக்குக் கவலைதான்.

**'ஓயாத அலைகள'** தாக்குதலின்போது **'ரணவிரு'** கரும்புலிகளின் இலக்கானது. முதலில் அதனுடன் மோதிய கரும்புலிப் படகு வெடிக்கவில்லை. தவறிவிட்டது. அதிலிருந்த **இன்னிசைக்குக்** காயம். கூடவே இருந்த **மிதுபாலன்** படகைக் கரைக்குத் திருப்பினார். அடுத்து பார்த்திபனின் படகு இலக்கில் மோதிச் சிதறியது. 'ரணவிரு' ஆட்டம் கண்டது. தன் நண்பனின் அடியைத் தொடர்ந்து சுடரொழியும் தன் படகுடன் இலக்கில் மோதினாள்.

1996-07-19 அன்று மாலை அந்தக் கரும்புலிகளின் மூச்சடங்கியது. அவர்களின் இறுதிக்கணங்களைச் சுமந்த முல்லைக்கடல் வீச்சுடன் மூசியது.

**என்னினிய தமிழீழ மக்களுக்கு,**

நான் இறுதியாக எழுதும் உறுதிமொழி. தமிழீழ மக்களாகிய நீங்கள் எமது தலைவனின் காலத்தில் தமிழீழம் கிடைப்பது உறுதி என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். தமிழீழத்தில் எமது தலைவன் ஒரு கொடை. மக்களாகிய நீங்கள் கிளர்ந்தெழுந்து எமது தலைவனுடன் தோளோடு தோள் நின்று போராடுங்கள். நிச்சயம் தமிழீழம் கிடைக்கும். எமக்கென்று ஒரு நாட்டை உருவாக்க வெகு விரைவாக உங்கள் பணிகளைச் செய்யுங்கள்.

இப்படிக்கு
போராளி இன்னிசை
1996-05-16



கப்டன் இன்னிசை
புஸ்பலதா / சுமதி இராசதுரை
(வெற்றிலைக்கேணி)
பிறப்பு - 1977 . 10 . 19
வீரச்சாவு - 1996 . 11 . 11

**ஆ**னையிறவு இராணுவத்தினரின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்புக்களால் இன்னிசையின் குடும்பம் வெற்றிலைக்கேணியில் இருந்து பருத்தித்துறைக்கு இடம் பெயர்ந்தது. இந்த இடப்பெயர்வுதான் இவளுள் போராட்ட உணர்வை விதைத்தது. வீட்டிலே மூத்தவள் இவள். பின்னால் ஆறுபேர். குடும்பப்பொறுப்பு அவளை இழுத்துப் பிடித்தாலும், வீட்டார்மேல் அவளுக்கிருந்த பாசமே நாளடைவில் அவளைப் போராடத் தூண்டியது.

1992 இல் கடற்புலிகள் மகளிர் படையணியின் இரண்டாவது பயிற்சி முகாமில் இன்னிசைக்கும் **பாரதிக்கும்** இடையில்தான் பயிற்சியில் போட்டி. இருவரும் நல்ல நண்பிகள். ஆனால் எதிலும் போட்டிதான்.

பயிற்சி முடிந்ததும் மருத்துவப் போராளியாகக் கடமையாற்றிய போதே நீச்சற் பயிற்சியையும் எடுத்தாள். எந்த நேரமும் சண்டைக்குப் போகக்கூடிய தயார் நிலையில் தன்னை வைத்திருந்தாள். மருத்துவ முகாமிலே மருந்துகளைவிட இன்னிசையின் கதைதான் காயங்களை, நோயை விரைவில் ஆற்றுவதில் பெரும் பங்கு வகிக்கும்.

கரும்புலியாகப் போகும் தன்விருப்பத்தைத் தெரிவித்து, நளாயினி படையணிக்கு வந்ததும் பாரதியை மீண்டும் சந்தித்தாள். இடையிலே பிரிந்த தோழிகள் தமது இலக்கினால் மீண்டும் ஒன்றாகினார்கள்.

தனது படகைத் தானே கழுவுவாள். தன் வேலைகள் எல்லாவற்றையும் தானே செய்து கொள்வாள். தன்னுடன் நிற்கும் போராளிகளுக்கு எது தெரியாதோ, அதைச் சொல்லிக் கொடுப்பாள். தன்னைப் போலவே எல்லோருக்கும் எல்லாம் தெரியவேண்டும் என்று விரும்புவாள்.

இரவு நேரங்களில் தென்னை மரங்களில் ஏறி, தேங்காய் திருடி இளநீர் குடிப்பதைப்போல் அவளுக்கு சுவாரசியமான விடயம் வேறொன்றுமில்லை.

கரும்புலியாகப் போகும்போது, ஒரு பெண் போராளியுடன் போவதுதான் தனது விருப்பம் என்று பொறுப்பாளரிடம் அடிக்கடி சொல்வாள். வெடிமருந்தேற்றிய படகுடன் கடலில் அலைந்து விட்டு, இலக்குக் கிடைக்காமல் திரும்பும்போது தோழிகளின் அபாரமான அறுவைக்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

"இந்தமாதிரி இழுபடுகிறாய். இனி உனக்குத் தொண்ணூற்றி ஏழில்தான் சான்ஸ்."

1996-07-19 ஓயாத அலைகள் தாக்குதலின் இரண்டாம் நாள். **மிதுபாலனையும் இன்னிசையையும்** சுமந்த கரும்புலிப்படகு 'ரணவிரு' வுடன் மோதியது. ஏதோ பிசகி விட்டது. படகு வெடிக்கவில்லை. 'ரணவிரு' வின் எதிர்தாக்குதலால் இன்னிசை காயமுற்றாள். தவிர்க்கமுடியாமல் இருவரும் கரை திரும்ப நேரிட்டது. இன்னிசை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது, 1996–07–24 அன்று மிதுபாலன், சயந்தனுடன் போய் மற்றொரு தரையிறங்கு கப்பலைத் தாக்கி காவியம் படைக்க, தனக்கு அந்த வாய்ப்புக் கிட்டவில்லையே என்ற கவலை அவளை வாட்டியது.

இன்னிசைக்கும் பாரதிக்கும் இலக்குக் கொடுக்கப்பட்டபின்னர், அவள் தன் வீட்டுக்கு விடுமுறைக்குப் போனாள். நோயால் வாடியிருந்த தாய் மகளை வீட்டுக்கு வந்து குடும்பப் பொறுப்பை ஏற்குமாறு கேட்டாள். இன்னிசை மெல்லச் சிரித்தாள்.

"கொஞ்ச நாளில வருவன் அம்மா"

நீண்டகால அலைச்சலின் பலன் 1996-11-11 அன்று அதிகாலை இன்னிசைக்குக் கிட்டியது. காரைநகர் கடற்படைத் தளமருகே அதிவேக டோரா பீரங்கிப் படகுமீது இன்னிசையையும் பாரதியையும் சுமந்த படகு பாய்ந்தது.

தன்மகள் கடைசியாகத் தனக்குச் சொன்ன வரிகளின் பொருள் அப்போதுதான் அந்தத் தாய்க்குப் புரிந்தது.

இன்னிசை தன் குடும்பத்தினருக்கு எழுதிய கடைசிக் கடிதத்திலிருந்து ஒரு கவிதை:

நீலக்கடல் வற்றினாலும்
என் மழலைச் சகோதரர்களின் முகங்கள்
என் மனதில் அலை மோதுகின்றது
நிலவு வந்து ஒளிபரப்புகின்ற நேரத்தில்
என் பெற்றோர் அரவணைத்த
பாசப் பிணைப்பு
நெஞ்சத்தில் ததும்புகின்றது.

பெண்களதும் ஆண்களதும் கலகலவென்ற கதம்ப ஒலியால் அந்தச் சிறிய ஒன்றுகூடல் மண்டபம் அதிர்ந்து கொண்டிருந்தது. அங்கிருந்த அனைவரும் கரிய உடைகள் அணிந்தவர்களாக இருந்தாலும், முகங்களெல்லாம் ஆயிரம் வோல்ற் மின்விளக்குகளைப் போல் ஒளிர்ந்து கொண்டிருந்தன.



மேஜர் பாரதி
கமலராணி வீரகத்தி
(நாகர் கோயில்)
பிறப்பு - 1972 . 09 . 30
வீரச்சாவு - 1996 . 11 . 11

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

முதலாம் பாகம்

# தாயகம் நோக்கிய பயணம்

## அத்தியாயம் பதினொன்று (தொடர்ச்சி)

இந்த அறைகளில் தான் இருக்கின்றன. எனது ஒரேவிருப்பம் எனக்குப் பிறகு ஹான்ஸ் வளர்ந்ததும் இவைகளை விரும்ப வேண்டும் என்பது தான். சில வேளைகளில் உனக்கும் பிள்ளைகட்கும், நீதியாக நான் நடக்கிறேனோ என்று நினைப்பதுண்டு. ஆயினும் எனக்குள்ளே ஏதோ இருந்து கொண்டு என்னை




ஓடிப்போக விடுவதாயில்லை. இன்னும் கொஞ்சம் பொறுத்துக் கொள்.... இத்துன்பங்கள் விலகிவிடும் விலகி விடும்...."

கார்த்திகை 19, 1938

200 யூத வழிபாட்டிடங்கள் எரிக்கப்பட்டன.

200 யூத வசிப்பிடங்கள் நொருக்கப்பட்டன.

8000 யூத வர்த்தக நிலையங்கள் கொள்ளையிடப்பட்டு சிதைவுண்டன.

50 யூதர்கள் கொலை செய்யப்பட்டனர்.

3000 யூதர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டனர்.

20,000 யூதர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த நாளில் இருந்து ஒரு யூதனும் எந்தத் தொழிலும் செய்ய முடியாது. இந்த நாளிலிருந்து எந்த யூத பிள்ளையும் பொதுப் பாடசாலைகளுக்குச் செல்ல முடியாது. இந்த நாளிலிருந்து எந்த யூதப் பிள்ளைகளும் பொதுப் பூங்காக்களுக்குள்ளோ, பொழுது போக்கும் மைதானங்களுக்குள்ளோ செல்ல முடியாது.

ஜெர்மனியின் யூதர்கள் எல்லோரிடமிருந்தும் விசேட தண்டப்பணமாக 15 கோடி டொலர் அறவிடப்படும்! இந்த நாளிலிருந்து எல்லா யூதர்களும் ஒரு டேவிட்டின் நட்சத்திரத்தோடு கூடிய (Star of David) ஒரு மஞ்சள் நிறக் கைப்பட்டியை எப்போதுமே அணிந்திருக்க வேண்டும்.

நிலைமைகள் இப்படி மோசமடைவதை நம்பத்தான் முடியவில்லை. ஆயினும் வன்முறை அலைகள் உயர்ந்து உயர்ந்து சென்று ஒருநாள் ஜோஹான் கிளமென்றுடைய "பாதுகாப்பான தீவு" எனக்கருதிய வீட்டிலும் மோதியது.

ஒரு மனிதன் பலமாக தாய்நாட்டு மண்ணோடு ஒன்றிப் போய், அதன் மீது வைத்திருந்த விசுவாசம் பொடியாகியது ஒரு வகையில் பயங்கரமான நாசமே. ஜோஹான் கிளமென்ற் முட்டாள்த்தனத்தோடு இருந்துவிட்டதுமல்லாமல் தனது குடும்பத்தவர்களின் உயிர்களையும் ஆபத்துக்குள்ளாக்கி விட்டார். அவர். இங்கிருந்து வெளியேறுவதற்குச் செய்த முயற்சிகள் அவரை பெர்லினில் கெஸ்டாப்போவிடம் கொண்டுபோய்ச் சேர்த்தன. அவர் பெர்லினில் இருந்து திரும்பியதும் இரண்டு பகல்களும் இரண்டு இரவுகளும் தன்னைத்தானே தன்னுடைய அறையில் பூட்டிக்கொண்டு தனக்கு முன்னால் கிடந்த ஆவணத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தார். அது கெஸ்டாப்போவினால் அவருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு மந்திரக்கோல் போன்ற ஆவணம். அதில் அவர் போடும் ஒரு கையொப்பம் அவரையும், குடும்பத்தினரையும் மேலும் ஏற்படக்கூடிய துன்பங்களில் இருந்து காப்பாற்றும். அது ஒரு உயிரளிக்கும் ஆவணம். அதிலிருந்த வார்த்தைகள் அவருக்கு மனப்பாடமாகும் வரை திரும்பத்திரும்ப அதை வாசித்தார்.

..........ஜோஹான் கிளமென்ற் ஆகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள நுணுக்கமான ஆராய்வுகளுக்கும், மறுக்கமுடியாத உண்மைகளுக்கும் பிறகு..... எனது பிறப்புப் பற்றிய உண்மைகள் திரிக்கப்பட்டிருப்பதாக பலமாக உணர்கிறேன். நான் இப்போதும், எப்போதும் யூத மதத்தவனாக இருந்ததில்லை. நான் ஒரு ஆரியன் என்பதோடு.....

.......அதிலே கையெழுத்திடு, அதிலே கையெழுத்திடு எனக்கூறிய உணர்வுகளினால் உந்தப்பட்டு ஆயிரம் முறைக்குமேல் அதில் கையெழுத்திடுவதற்காகப் பேனாவைக் கையிலெடுத்தார். உன்னதமான கொள்கைப் பிடிப்புகளுக்கு இது நேரமில்லை கையெழுத்திட்டால் என்ன? நான் யூதனாக இருக்கவில்லை கையெழுத்திட்டால் என்ன..... அது ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லையே..... போராட்டம் நிகழ்ந்தது.

கெஸ்டாபோ ஒன்றை, மாற்று வழியை மட்டும் தெளிவாக்கியிருந்தது. ஜோஹான்

**லியோன் யூரிஸ்**

கிளமென்ற், அந்தஆவணத்தில் கையெழுத்துப் போடாவிட்டாலும் தனது ஆராட்சியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டு ஒரு அரசியல் பயணக் கைதியாக இருக்கச் சம்மதித்தால், அவரது குடும்பத்தினர் ஜெர்மனியை விட்டுச் செல்லலாம் என்பதே அது.

மூன்றாவது அதிகாலையில் அவர் தனது அறையிலிருந்து தளர்ந்த நடையுடன் வந்து, மரியத்தின் கவலையோடியிருந்த கண்களை உற்று நோக்கினார். அவர் கணப்பருகே சென்று அந்த ஆவணத்தை தீச்சுவாலைகளுக்குள் வீசினார். என்னால் அதைச் செய்ய முடியாது. முணுமுணுத்த அவர் தொடர்ந்து, "நீ பிள்ளைகளோடு ஜெர்மனியை விட்டுப் போவதற்கு திட்டங்களைத் தீட்ட வேண்டும்." என்றார்.

இப்போது அவரைப் புதியவகைத் திகில் பீடித்திருந்தது. அவரது குடும்பம் இங்கிருக்கும் ஒவ்வொரு வினாடியும், கதவில் கேட்கும் ஒவ்வொரு தட்டலும், தொலைபேசி மணி அடிக்கும் ஒவ்வொரு அடியும், ஒவ்வொரு காலடி ஓசையும், இதுவரை அவர் உணர்ந்திராத புதுவகைப் பயங்கரத்தை விளைவித்தன.

அவர் தனது திட்டங்களைத் தீட்டினார். முதலில் குடும்பத்தவர் பிரான்சுக்குப் போய் அறிமுகமான ஒருவருடன் சில காலத்தைக் கழிக்க வேண்டும். பிரசவ காலம் நெருங்கியிருப்பதால் மரியம் அதிக தூரம் பயணம் செய்ய முடியாது. பிரசவித்த பின்பு அவளது உடல் நிலை சீரானதும், அமெரிக்காவுக்கோ, அல்லது இங்கிலாந்துக்கோ போகலாம்.

பயணப் பெட்டிகள் எல்லாம் நிறைக்கப்பட்டு வீடு பூட்டப்பட்டது. அந்தக் கடைசி இரவில் அவரும், மனைவியும் தங்களுக்கு ஏதாவது புதுமை நிகழ்ந்து, தங்களை இந்தத் துன்பத்தில் இருந்து விடுவிக்காதா? என எதிர்பார்த்தபடி இரவு முழுவதும் மௌனமாக அமர்ந்திருந்தனர்.

ஆனால் செல்லவேண்டிய தினத்துக்கு முதல் நாளிரவு அவளுக்குப் பிரசவ வேதனை உண்டாகி, (ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட மாட்டாளாதலால்) தனது சொந்தப் படுக்கை அறையிலேயே ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

> தேனும் பாலும் வழிந்தோடும் தேசம் என்ற கற்பனையோடு தாயக மண்ணிற்குத் திரும்பும் அம்மக்களுக்குத் தெரிவதெல்லாம் வெறுமையான பாலைவனங்களும், அணுக முடியாத சதுப்பு நிலங்களுமே!

இன்னொரு மகன் பிறந்தான். அது ஒரு பிரச்சனையானதுமான, கஸ்டமான பிரசவமாகும். அவள் உடல் நிலை சீராவதற்குச் சில வாரங்கள் பிடித்தன.

அவர், தனது குடும்பம் எதிர்வரப்போகும் பேரழிவிலிருந்து தப்பிச்செல்ல முடியாமல் அகப்பட்டுக் கொண்டு விட்டதைப் போன்ற எண்ணங்கள் தோன்றத் தொடங்கின. அவரை அளவற்ற திகில் ஆட்கொண்டது.

அவர் அவசர அவசரமாக மெயின்கே வீதியின் 10ம் இலக்கக் கட்டிடத்துக்கு விரைந்தார். அங்கேதான் மொசாட் அலியா பெற்றின் காரியாலயம் இருந்தது. அந்த இடம் ஜெர்மனியை விட்டுச் செல்ல விரும்பும் ஆட்களால் பிரளயப்பட்டுக் கொண்டிருந்தது.

அதிகாலை இரண்டு மணியளவில் மிகவும் களைத்துப் போயிருந்த ஒரு மிக இளைஞனான ஒருவன் உட்கார்ந்திருந்த அறையினுள் அவர் கூட்டிச் செல்லப்பட்டார். அந்த மனிதனின் பெயர் அரிபென் கானான். அவன்தான் ஜெர்மனிய யூதர்கள் தப்பிச் செல்வதற்குப் பொறுப்பாக இருந்த பலஸ்தீனியன்.

இரத்தம் போல் சிவந்திருந்த கண்களால் அவரை ஏறிட்டு நோக்கினான். மூச்சை வெளியில் விட்டுவிட்டுச் சொன்னான். "நாங்கள் நீங்கள் தப்பிச்செல்ல ஒழுங்கு பண்ணுகிறோம் டொக்டர் கிளமென்ற். நீங்கள் வீட்டுக்குப் போங்கள், உங்களோடு தொடர்பு கொள்கிறோம். நான் உங்களுக்கு ஒரு கடவுச் சீட்டும், பிரயாண அனுமதியும் பெற வேண்டும். சரியான ஆட்களுக்கு லஞ்சம் கொடுக்க வேண்டும். இவை சில நாட்கள் எடுக்கும்."

"நான் எனக்காக இங்கு வரவில்லை. நான் போக முடியாது. என் மனைவியும் போக முடியாது. எனக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களை நீ வெளியேற்றி விடவேண்டும்."

"அவர்களை நான் வெளியேற்றி விடவேண்டும்." கேலிக் குரலில் திரும்பவும் உச்சரித்தான் பென் கானான்.

"டாக்டர் நீங்கள் ஒரு முக்கியமான மனிதர், நான் உங்களுக்கு உதவ முடியும். நான் உங்கள் பிள்ளைகளுக்கு ஒன்றும் உதவ முடியாது."

"நீ செய்யத்தான் வேண்டும்.... செய்யத்தான் வேண்டும்.... அலறினார் அவர்.

அரி பென் கானான் தன் முஷ்டியை ஓங்கி மேசையில் குத்தியபடி எழுந்தான். "வெளியே நிற்கும் கும்பலைப் பார்த்தாயா? அவர்கள் எல்லாருமே ஜெர்மனியை விட்டுப் போக விரும்புகிறார்கள்." ஜோஹான் கிளமென்றின் முகத்தருகே குனிந்து "ஐந்து வருடங்களாக ஜெர்மனியை விட்டு வெளியேறும்படி உங்களை வேண்டிக் கொண்டோம், கெஞ்சினோம். இப்போ நீங்கள் வெளியேற முடியுமென்றாலும் பிரிட்டிஷார் உங்களை பலஸ்தீனத்திற்குள் விடத் தயாரில்லை. நாங்கள் ஜெர்மனியர்கள். நாங்கள் ஜெர்மனியர்கள் எங்களை அவர்கள் ஒன்றும் செய்ய மாட்டார்கள் என்று சொன்னீர்கள். கடவுளின் பெயரால் கேட்கின்றேன், இப்போ என்ன செய்ய முடியும் என்னால்?"

அரி உமிழ்நீரை விழுங்கிவிட்டு கதிரையில் சரிந்தான். அவனுடைய கண்கள் சிறிது நேரம் மூடிக் கொண்டன. அவனது முகம் களைப்படைந்திருந்தது. அவன் ஒரு கட்டு ஆவணங்களை மேசையில் இருந்து எடுத்து அவைகளைப் பரிசீலித்தான். "நான் நானூறு குழந்தைகள் ஜெர்மனியை விட்டு போகப் பிரயாண அனுமதிப் பத்திரங்களை எடுத்து வைத்திருக்கிறேன். டென்மார்க்கில் இருக்கும் சில குடும்பங்கள் இவர்களைப் பராமரிக்கத் தயாராய் இருக்கிறார்கள். நாங்கள் ஒரு புகையிரதத்தை ஒழுங்கு பண்ணியிருக்கிறோம். உங்களுடைய ஒரு பிள்ளையை நான் அதில் அனுப்பி விடுகிறேன்."

"எனக்கு.... எனக்கு.... மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்."

"எனக்கோ பத்தாயிரம் பிள்ளைகளிருக்கிறார்கள். எனக்குப் பிரயாண அனுமதிப் பத்திரங்கள் இல்லை.

தொடரும்...

## சிறுகதை

# இன்னும் உள்ளே இருட்டு

- சாம்பவி -

படிக்கிறதுக்கெண்டு புத்தகத்தை விரிச்சு ஒரு மணித்தியாலத்திற்கு மேலாயிட்டுது. விரல்கள் பக்கங்களைப் புரட்ட, கண்கள்தான் வரிகளை தடவிச்சுதே தவிர, பாடம் என்ர மனதில பதியவே இல்லை. அந்த இரவின்ர அமைதி எனக்குள்ள என்னவோ செய்திச்சுது. தூரத்தில ஏதோ இரையிற சத்தம். முன்னறையில அப்பாவோடு கதைச்சுக் கொண்டிருந்த அம்மா கத்தினா.

"பிள்ளை லயிற்றை நூர்"

அம்மான்ர குரல் ஓயிறதுக்கு முதலே பாய்ஞ்சோடி லயிற்ற நூர்த்தன். அது ஒரு வாகனமாயிருக்க வேணும். சத்தம் நல்லாக் கிட்ட வந்திட்டுது. எனக்குள்ள இடிஇடிச்சமாதிரி இருந்திச்சுது. கால் கடகடவென்று நடுங்கத் தொடங்கிற்றுது. தொண்டையில இருந்து நெஞ்சுமட்டும் பயம் இறுகி, மூச்சே நிண்டுபோகும் போல இருந்திச்சுது. வாகனம் எங்கட கேற்றிலதான் நிக்குதோ? நினைக்கவே உள்மனம், 'ஐயோ' என்று அலறிச்சுது. என்னால நிக்கேலாமல் போச்சுது. கால் சோர அப்படியே சுவரில சாய்ஞ்சபடி குந்திற்றன்.

"முருகா! அம்மாளாச்சி பிள்ளையாரே"

வாய்விட்டுப் புலம்பியபடி நெஞ்சைப் பிடித்துக்கொண்டு அப்படியே இருந்தன். சத்தம் எங்கடை வீட்டைக் கடந்து அப்படியே கரைச்சு போச்சு. நான் இன்னும் அப்படியே இருந்தன். லயிற் போடப் பயமாய் இருந்தது. போன சத்தம் திரும்பி வந்தா? சில வேளை அது எங்கட வீட்டுக்கு முன்னால நிண்டால்.......? கடவுளே! அம்மா மெதுவாகக் கூப்பிட்டா.

"பிள்ள இனி லயிற்றப் போட்டுட்டுப் படி"

எழும்பி லயிற்றைப் போட்டன். ஆனா அந்த வெளிச்சத்துக்க இருக்கவே விசராய் இருந்துச்சு. ஒண்டுக்குப் பின்னால ஒண்டாய் நடந்ததுகளை நினைக்க, நெஞ்சு அடைச்சு அழுகைதான் முட்டியது. அதை அப்படியே முண்டி விழுங்கினன். இதயம் புண்ணாய் வலிச்சுது. நாளைய பொழுதை நினைக்கவே தேகம் புல்லரிக்குது. ஒவ்வொரு நாளும் அவங்கட பொயின்ரைக் கடக்கேக்க, அந்த ஓட்டைகளுக்கால தெரியிற துவக்கை நீட்டின முகங்கள் படிக்கேக்க, படுக்கேக்க, நினைக்கேக்க எல்லாம் சுத்திச் சுத்திவந்து வெருட்டிக்கொண்டே இருந்திச்சு.

சீ! எப்படி இருந்தனாங்கள்? மேலால பொம்மர் அடிக்கஅடிக்க பங்கருக்க விளக்கைக் கொழுத்தி வைச்சுக்கூட, ரெஸ்ற்றுக்குப் படிச்சனாங்கள். ஜாம் போத்தல் விளக்கில கூட கண்ணைக்கூசிக்கூசி படிச்சு ரெஸ்ற் எழுதினனாங்கள். அப்பஎல்லாம் கஸ்ரமாய் இருந்திச்சே தவிர, ஏதோ நிம்மதியாயிருந்திச்சு. இப்ப லயிற், சினிமாப்படம் இதுவரையும் கிடைக்காமல் இருந்த எவ்வளவோ சாமான்கள், வசதிகள் எல்லாம் இருக்கு. எண்டாலும் ஒண்டுமே இல்லாதமாதிரி வெறுமை........ விரக்தி! ச்சீ.......! இது என்ன வாழ்க்கை எண்டமாதிரி. ஏனிப்பிடி? எப்ப நிம்மதிவரும்? அல்லாட்டி வராமலே விட்டிடுமோ? சீச்சீ எப்பிடியாவது வரத்தானே வேணும். வரும். அது வருமட்டும் இருப்பமோ, சாவமோ எண்டுதான் தெரியேல்ல.

படிக்காமல் சும்மா புத்தகத்தை விரிச்சு வைச்சுக்கொண்டு, எத்தின மணித்தியாலம் இருக்கிறது? எல்லாத்தையும் அப்படியே மூடி வைச்சுட்டு மேசையில முகத்தை வச்சுப் படுத்தன். நாளைக்கென்ன செய்யிறது? பள்ளிக்குப் போறதா? போகாம நிக்கிறதா? நிண்டா அம்மா ஏனெண்டு கேப்பாவே? கேட்டா என்ன சொல்லுறது? அம்மா, அம்மாவே? பயந்த மனிசி. அவாட்டை இந்தக்கதையைச் சொன்னா, வீட்டு முத்தத்துக்கே இறங்கவிட மாட்டா. அப்பாட்டைச் சொன்னா என்ன சொல்லுவார்? அவரும் இந்த விசயமெண்டாப் பயந்துதான் போவார். இரண்டு பேருமே சேர்ந்து அகிலாவ அவவின்ர வீட்டுக்காரர் பள்ளிக்கூடத்தால மறிச்சமாதிரி என்னையும் மறிச்சிட்டா? என்ர மனம் 'திக்' கெண்டது. 'ஐயோ' கடவுளே! இவ்வளவு நாளும் கஸ்ரப்பட்டுப் படிச்சு இனி விடுகிறதெண்டா, என்ர உயிர் போனாலும் மாட்டன். உந்த நாயளுக்குப் பயந்து, நான் வீட்டுக்க இருக்கிறதா? எப்பிடித்தான் நான் என்னைத் தேற்றினாலும் நினைக்கப் பயம் பயமாதான் கிடக்குது. அவன்......... அந்த மீசை இல்லாத ரௌடி எந்நேரமும் வெறிகாரன்ர கண்மாதிரி அரை மயக்கத்திலதான் நிப்பான். எந்த நாளும் நாங்கள் போய்வர, பாத்துப்பாத்து பல்லைக் காட்டுறாங்கள். நாக்கை நீட்டுறவங்கள். தனியப்போற பயத்தில, அஞ்சாறுபேர் சேர்ந்துதான் போறனாங்கள். எங்கட ஐடென்ரிக்காட்டில பேர்களைப் பார்த்திட்டு அதைப் பாடமாக்கிக் கூப்பிடுவாங்கள். அண்டைக்கு அவன்,



"கவுரி...... கவுரி...... ஏ...... கவுரி"

எண்டு என்ர பேரைச்சொல்லிக் கூப்பிட்ட ஆத்திரத்தில, எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்ல. சட்டெண்டு திரும்பி ஒருக்கா முழுசிப் பார்த்தன். அந்த மூதேவி நிண்டு சிரிக்குது. அவனைச் சுத்தி இன்னும் ரண்டு, மூண்டு சனியனுகள்.

"சவங்களைப் பாத்தாலே பத்து நாளைக்குச் சாப்பிடேலாது. அங்கயிருந்து இங்க வந்திருக்குதுகள் பல்லுக்காட்ட"

மனதுக்குள்ள கறுவிக்கொண்டே வேகமாக சைக்கிள மிதிச்சன். வீட்டில வந்துதான் மூச்சு விட்டன். அம்மா வாசலில நிண்டா. என்னக் கண்டவுடன அவான்ர முகத்தில ஒரு நிம்மதி, சின்னச்சிரிப்போட...

"வா பிள்ள, நீ வர அரைநிமிசம் சுணங்கினாலே உயிர் போகுது. எந்தநேரமும் மடிக்குள்ள நெருப்பைக் கட்டினபடி"

எனத் தனக்குள்ள கூறியவாறு உள்ளுக்குப் போனா. நான் பேசாம அறைக்குள்ள போனன். அம்மாட்ட இந்த விசயங்களைச் சொல்லயில்ல.

எனக்குச் சாப்பாடு தந்தபடி அம்மா சொன்ன விசயம், தொண்டைக்குள்ளால சாப்பாட்டை இறங்கவிடாமப் பண்ணிப்போட்டுது. அடுத்த ஒழுங்கையில ஒரு வீட்டில நாலு பொம்பிளைப்பிள்ளயள், ஒரு பொடியன், மூத்ததுகள் இரண்டும் கொழும்பில. மூண்டாவது பிள்ள உங்கரவுணுக்கதான், ஒரு பள்ளிக்கூடத்துல படிக்குது. பிள்ள பள்ளிக்குப் போய்வரேக்க ஊர்ப்பொடியள் இரண்டு பேர் பின்னாலும், முன்னாலும் சுத்துறவங்கள். ஒருநாள் அந்தப் பிள்ளயை ஆக்களில்லாத நேரம் ஒழுங்கேக்க வைச்சு, கத்தக்கத்த கடத்திக்கொண்டு போட்டாங்கள். பிள்ளயின்ர தம்பிக்காரன் அழுதுகொண்டு பக்கத்தில இருக்கிற காம்பில சொல்லப் போனவன், திரும்பி வரவேயில்ல. வயது போன தாயும் தேப்பனும் சாப்பாடு தண்ணி இல்லாமல், அழுதழுதே சாகப் போகுதுகள். சொல்லிக் கொண்டே போன அம்மான்ர கண் கலங்கிப் போனது. நான் சாப்பிடாமலே எழும்ப, அம்மா என்னப்பாத்து ஒண்டுமே கதைக்காம நிண்டா. அவவைப் பாக்க எனக்கு பாவமாக் கிடந்தது.

**என்னோட படிச்ச வானதி குடும்பத்தோட வன்னியில இருக்கிறாள். அங்க வாழ்க்கை கஸ்ரமெண்டாலும் பிரச்சனையில்லையாம். கடிதம் போட்டிருந்தாள்.** எனக்கு எங்கட குடும்பம் இடம் பெயர்ந்து பட்டபாடுதான் நினைவுக்கு வந்திச்சுது. ஒக்டோபர் 30 வலிகாமமே இடம் பெயர்ந்த போது கையில எடுத்த சாமான்களோடு, அடிமேலடி வைச்சு செம்மணி கடக்கப்பட்டபாடு. றோட்டுக்கரையில ஈர நிலத்தில குடும்பமே குறண்டிக் கொண்டு படுத்தெழும்பிய நாட்கள். ஒரு இறாத்தல் பாணுக்குப் பல மணித்தியாலம் கியூவில நிண்டு காஞ்சது. எல்லாமே இப்ப ஒரு கனவுபோல இருக்கு. பிறகு வன்னிக்குச் சனமெல்லாம் போகவெளிக்கிட, கிளாலிக்கரை மட்டும் வந்திட்டும், வன்னிக்குப் போகமுடியாமல் திரும்பி வலிகாமத்துக்கே நடந்தபோது பயமிருந்ததுதான். ஆனால் அப்பா,

"அவங்கள் முந்திமாதிரி இல்ல. சனத்த நல்லா அனுசரிச்சுப் போகப் பழகிட்டினம். ஒரு பிரச்சனையும் இல்ல"

என்று சொன்னபோது, எனக்குள்ளேயும் எங்கட ஊர், வீடு, பள்ளிக்கூடம் என்பன ஒரு ஏக்கத்தையே ஏற்படுத்தியது.

இப்ப அந்த ஏக்கமெல்லாம் திசை மாறீட்டுது. எல்லாம் இருந்தும், ஒண்டுமே இல்லாத மாதிரி உணர்வுதான் வருகுது. நேற்று அந்த மூதேவியன் என்னக்கேட்ட கேள்வி........ ஐயோ! அதை நினைக்கவே உயிர் நிண்டுபோகும் போல இருக்குது. என்ன ஒரு துணிச்சல்?

> அம்மாவோட ஒண்டிக்கொண்டு படுக்க ஏதோ நிம்மதியா இருந்த மாதிரி ஒரு உணர்வு. எல்லாத்தையும் அம்மாட்டச் சொல்லி அழவேணும்போல இருந்திச்சுது. வேண்டாம். அவவும் நிம்மதியில்லாம என்னப்போல துடிக்க வேண்டாம்.

சுற்றுமுற்றும் பார்த்தபடி, மெதுவா எனக்குக் கிட்ட வந்தான் அவன். வழக்கமாய் நான் போய் வாற நேரங்களில நிக்கிறவன்தான். அண்டைக்குப் பேர் சொல்லிக் கூப்பிட்டானே........ அவன்தான்........ அவனேதான்.

"ஏ கவுரி........ நான் உன்ன விரும்புறன். நீ என்னக் கலியாணம் கட்டுவியா? நாளைக்கு வந்து முடிவு சொல்லு என்ன........?"

வழிய வழியச் சிரிச்சபடி, காதுக்குள் வந்து அவன் மெதுவாகக் கேட்டவிதம், அடிச்சுக் கொல்ல வேணும்போல ஆத்திரம் வந்தது. என்ன செய்ய? ஒண்டும் செய்ய ஏலாது. கைகால் பதற, தலையைக் குனிஞ்சுகொண்டு நிண்டன்.

என்ர இதயம் துடிக்கேல்ல. துள்ளிச்சுது. தொண்டைக்குள்ள ஏதோ இறுக்கமா அடைச்சுக்கொண்டு உள்ளேயும் போகாமல், வெளியேயும் வராமல் மூச்சே நிண்டு போகும்போல இருந்திச்சுது. சைக்கிள் கான்ரில பிடிச்ச கை கடகடவென்டு நடுங்க, இன்னும் இறுக்கிப் பிடிச்சன். ஆத்திரமும் அழுகையும் பொங்கிக் கொண்டு வந்தாலும், எதுவுமே செய்ய முடியாத என்ர ஆற்றாமையை நினைக்க, 'ஐயோ!' எண்டு கத்தவேணும் போல் இருந்திச்சுது. அவன் என்னையே பாத்துக்கொண்டு நிண்டான். நிமிந்து ஒருக்காப் பாத்தன். என்ர நெஞ்சில எரியிற நெருப்பெல்லாம் கண்ணில தெரிய, ஒரேஒரு கணம்தான் சைக்கிள உருட்டிக்கொண்டு நடந்தன்.

இனி நாளைக்கு என்ன செய்யிறது? பள்ளிக்கூடம் போறதா? விடுறதா? பாதைமாறிப் போறதா? எப்படியும் இன்னொரு பொயின்ற் கடக்கத்தானே வேணும்.

எனக்குள்ள யோசிச்சு ஒரு முடிவோட அப்பாட்டைப் போனன்.

"அப்பா இனி ஒவ்வொரு நாளும் என்னப் பள்ளிக்கூடம் கொண்டுபோய் விட்டு, கூட்டிக் கொண்டு வரவேணும்."

தொடர்ச்சி 14 ம் பக்கம்...

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ...

பொதுவுடமைக் கட்சித் தலைவர் ஆனைமுத்து, சுவிட்சலாந்தில் தமிழீழ ஒற்றுமைத் தொடர்பு மைய இணைச் செயலாளராகவுள்ள மதலின் மைக்கேல், பஞ்சாப் மனித உரிமைக் குழுத் தலைவர் நீதிபதி அஜித்சிங் பெய்ன்ஸ் உட்பட பல தலைவர்கள் பேரணியைப் பார்வையிட்டனர்.

## உணர்வுக் கோசங்கள்

உளுந்தூர்பேட்டை ஒன்றியம் சார்பாக "தனித் தமிழீழத்தை ஆதரி, இல்லாவிட்டால் தனித் தமிழ்நாடு உருவாகும் - எச்சரிக்கை" என்று எழுதப்பட்ட பதாகை ஒன்று ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்டது.

"வெல்லட்டும் வெல்லட்டும் - கரும்புலிகள் வெல்லட்டும்"

"தோற்காது தோற்காது - தம்பியின் படை தோற்காது"

"எச்சரிக்கை எச்சரிக்கை - சந்திரிகாவுக்கு எச்சரிக்கை"

"ஈழத் தமிழர்களுக்குக் குரல் கொடுப்போம்"

"தனி ஈழம் அமைக்கப் பாடுபடுவோம்" போன்ற பல உணர்வுக் கோசங்கள் காற்றில் இடிபோல் சத்தத்துடன் எழுந்து ஊர்வலத்தினை அதிர வைத்தது.

அலங்கார வண்டிகளில் வந்தவர்களில் தர்மபுரி தெற்கு மாவட்டம் சார்பாக வந்தவர்கள், இராவணன் – அனுமார் போல் வேடம் போட்டு ஊர்வலத்தில் புதுமை சேர்த்தனர். மக்கள் உணர்வு எழுச்சியினால் உந்தப்படுவதை உணர்ந்து ஒருகட்டத்தில் "காப்பாற்று, காப்பாற்று - ஈழத் தமிழர்களைக் காப்பாற்று" என்ற கோசத்தைத் தவிர, வேறு எதையும் சொல்ல வேண்டாமென ஒலிபெருக்கி மூலம் கலாநிதி ராமதாஸ் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார். பேரணி அண்ணாசாலை, அண்ணா மேம்பாலம், இராயப்பேட்டை, பீட்டர் சாலை, வெசன்ட் சாலை, காமராஜர் சாலை வழியாக இரவு 9.35 மணிக்கு கடற்கரைச் சீரணி அரங்கை வந்தடைந்தது. இங்கு நடைபெற்ற ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டிற்குப் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் தீரன் தலைமை தாங்கினார்.

கலாநிதி ராமதாஸ் அவர்கள் தனது உரையில், "தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள், சமீபத்தில் சிறிலங்காத் தமிழர்களின் விடயத்தில் மத்திய அரசினதும் தன்னுடையதும் கொள்கை ஒன்றே என்று கூறியதன் அர்த்தம் என்ன" எனக் கேட்டார்.

"உலகில் கோடான கோடித் தமிழ் மக்கள், தமிழர்களின் தேசிய இன முரண்பாட்டிற்குத் தீர்வு காண்பதில் கருணாநிதி உதவவேண்டுமென எதிர்பார்க்கின்ற நேரத்தில் "தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்படுவதை" கண்டும் காணாமல் இருக்கும் மத்திய அரசினை கருணாநிதி ஏற்றுக் கொள்வாரா?" எனவும் ராமதாஸ் அவர்கள் வினவினார்.

முன்னாள் மத்திய அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் தனது உரையில், தமிழீழ விடுதலைப் புலிகள் மேலுள்ள தடையினை மத்திய அரசு நீக்க வேண்டுமென வலியுறுத்தினார். அவர் மேலும் பேசுகையில்,

"இரு உண்மைக்கு மாறான செய்திகள், தமிழர்களின் விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக உலகில் பரப்பப்படுகின்றன.

அவற்றில் ஒன்று – இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எல்லா சாத்தியமான வழிகளும் சிறிலங்காவினால் நிராகரிக்கப்பட்டதினாலேயே 'தமிழீழ விடுதலைப் புலிகள்' அமைப்பு என்ற ஒன்று தோன்ற வேண்டிய தேவை ஏற்பட்டது என்ற உண்மையை மறந்து, சிறிலங்காவின் இன்றைய நிலை விடுதலைப் புலிகளினால் ஏற்பட்டது என்ற உண்மைக்கு மாறான கதையும்,

இரண்டாவது – ராஜீவ் காந்தியின் கொலையினால் எல்லா நிலைகளும் மாறிவிட்டது என்பது, 'ஒரு தனி மனிதனின் மரணம்' அவர் எவ்வளவுதான் உயர்வான ஆளாக இருந்தாலும் கூட, கொள்கை மாற்றங்களுக்குக் காரணமாக முடியுமா? அவ்வாறாயின் தேசிய பாதுகாப்பினதும், தேசிய அக்கறையினதும் நிலை என்ன?

சிறிலங்காவில் அதனுடைய இராணுவத்தை அமெரிக்காவும், இஸ்ரேலும், பாகிஸ்தானும் பயிற்றுவிப்பது, பாதுகாப்புக் குறித்த புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்துள்ளது. இதனால் எங்கள் நாட்டுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் தோன்றவில்லையா?" எனக் கேட்ட பெர்ணான்டஸ், தொடர்ந்து "சிறிலங்கா இராணுவத்தின் பிடிக்குள் தமிழர்கள் சிக்குண்ட நிலையில் இருக்கையில், அமைதியான தீர்வைக் கொண்டு வருவதற்கு இந்தியத் தலையீட்டைக் கோருவதோ அல்லது சிறிலங்காவைத் தமிழர்களைப் பாதுகாக்கும்படி கோருவதோ, தமிழர்களுக்கு துரோகத்தையும் ஏமாற்றத்தையும் அளிக்கக்கூடிய விளைவுகளையே கொடுக்கும்" எனவும் எச்சரித்தார்.

பல தலைவர்களும் பிரமுகர்களும் உரையாற்றிய பின்னர் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில்,

1:– சிங்கள அரசு உடனடியாக போர் நிறுத்தம் செய்வதுடன், தமிழர் பிரதேசத்தில் நிலை கொண்டுள்ள படைகள் அனைத்தையும் மீளப் பெறுதல் வேண்டும். எனவே, போர் நிறுத்தத்தையும் பாரம்பரிய தமிழ் மாகாணங்களிலிருந்து சிங்களப் படைகளை நீக்கிக் கொள்வதையும் மேற்கொள்ளச் செய்யுமாறு சிறிலங்கா அரசை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும்.

2:– தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தேசிய இனப் போராட்டமாக இந்திய அரசு அங்கீகரித்து உலகின் ஏனைய தேசிய இனப் போராட்டங்களை ஆதரித்தது போலவே தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஆதரித்துப் பாதுகாப்பும் உதவியும் வழங்கிட வேண்டும்.

3:– அகதிகளாக இந்தியாவுக்கு வந்துள்ள தமிழீழ மக்களை சிறப்பு முகாம்களில் அடைத்துச் சிறை வைத்துள்ள செயலானது, எத்தகைய நீதியிலும் அடங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள அகதிகளை விடுவிப்பதுடன், தமிழீழ அகதிகள் அனைவருக்கும் 'சர்வதேச அகதிகள் பராமரிப்பு நியதிகளின்படி' எல்லா உதவிகளையும் தமிழக அரசும் – இந்திய மத்திய அரசும் செய்து கொடுக்க வேண்டும் எனக் கோருகிறோம். ✷

# பிரெஞ்சு, பிரெஞ்சியர் ....

ஜோடிசேர்ந்து சுதந்திர நட்புறவு முறையில் வாழ்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஜோடியாக வாழும் வாழ்க்கை, நாகரீகம் கடந்த ஒன்றாக மாறிவருகிறது. குறிப்பாக, பெண்கள் திருமணமாவதை விரும்புவது குறைவு. திருமணம் செய்தவர்களிலும் மணமுறிவு கேட்பவர்களில், பெண்களே முந்துகிறார்கள். "நாம் நேசிக்காது விட்டால், திருமணம் செய்து கொள்வதில்லை. நாம் நேசிக்கிறோம் என்றால், திருமணம் செய்துகொள்ள வேண்டும்" என்ற கட்டாயம் இல்லை எனும் அடிப்படைக் கருத்து, இக்காலத்தவரின் மனப்பழக்கமாக ஆகிவிட்டது. பிரெஞ்சியர் குழந்தை பெறுவது குறைவு.

பிரெஞ்சுப் பண்பாட்டியலில் பூ கொடுத்து மனதைக்காட்டுவது மரபு. ரோஜாவில் வெள்ளை, ஆழமான அன்பைக் குறிக்க கொடுக்கப்படுகிறது. பிரெஞ்சு ஐந்து வீடுகளில்: ஒருவீட்டில் நாயும், பத்து வீடுகளில் ஒன்றில் பூனையும் வீட்டு மிருகங்களாக வளர்க்கப்படுகின்றன. அன்றாட வாழ்வியல் பொருட்களில் கணிப்பான், கமரா, குளிர்சாதனப்பெட்டி, மாஜரின், ஒலிநுண்பெருக்கி, தையல்மெசின், திரைப்படம் (அம்மைப்பால்) தடுப்புஊசி, எய்ட்ஸ் வைரசு போன்றவற்றின் கண்டு பிடிப்பாளர்கள் பிரெஞ்சுக்காரர்களே. இத்தகைய பெருமைகள், சிறப்புக்கள், மேன்மைகொண்டு தொழில் வளம், பொருளாதார வளம், அறிவியல் வளம், முதலானவற்றின் செழிப்பால் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும், மூன்றாவது நாடுகளுக்கும் ஓர் இலட்சியச் சந்தியாக இலங்குகிறது பிரான்ஸ்.

"பிரான்ஸ் சம்பந்தப்பட்ட அனைத்தும் பெருமையானவை. அருமையானவை. இதற்கு ஒப்பாக எந்த நாடும் இல்லை."

**ஒலிவர் கோல்ட் சிமித்–**

# இன்னும் உள்ளே ....

சொல்லிவிட்டு அம்மாவைப் பார்த்தேன். அப்பா திகைப்போட என்னைப் பார்த்தார். கையில எடுத்த சோத்தை அப்படியே கோப்பையில போட்டார். அப்பாவுக்குக் கறிவிட்டுக் கொண்டிருந்த அம்மா திடுக்கிட்டவராய்.........

"ஏன் பிள்ள? ஏதேனும் பிரச்சனையே?"

பதட்டமாய்க் கேட்டா. நான் தலையை ஆட்டினன்.

"சீச்சீ அப்பிடி ஒண்டும் இல்ல. தனியப்போக ஒருமாதிரிக் கிடக்கு. மற்றப் பிள்ளயள் யாரையும் கூட்டிக்கொண்டுதான் வருகினம்."

அப்பா என்னத் திருப்திப் படுத்தியவராய்ச் சொன்னார்,

"ஓம் பிள்ள நானும் ஒவ்வீசுக்கு அதாலதானே போய்வாறனான். இனி உன்னோட வாறன். ஏதேனும் பிரச்சனையெண்டால் சொல்லு. பயப்படாதை."

என்னை ஆழமாப் பார்த்தபடி சாப்பிடத் தொடங்கினார்.

அப்பாவுக்குச் சந்தேகமாக்கும். வலு துணிச்சல்காரி எனப் பெயர் எடுத்த நான் இப்பிடிக் கேட்டதுதான் காரணம்.

"சீச்சீ அப்பிடியொண்டும் இல்லையப்பா. நாளைக்கு ஏன் வீண்சோலியை எண்டுதான் பார்க்கிறன்."

மிகச் சாதாரணமாச் சொல்லிக் கொண்டு நான் அறைக்குப் போட்டன். எண்டாலும், அவைக்கு விளங்கியிருக்கும் எண்டு எனக்குத் தெரியும்.

எப்பிடியோ? அம்மா அப்பாவுக்கு பயம் ஏற்படுத்தாம பிரச்சனைக்குத் தீர்வு கண்டுவிட்ட பெருமை கொஞ்சம்கூட இல்ல.

தம்பி இப்ப எங்க இருப்பான்? நாளைக்கு அவன் என்ன செய்வான்? அப்பாவைக் கண்டு அவன் என்ன பயப்பிடவா போறான்? ஏதோ எனக்கொரு மனஆறுதல். அவ்வளவுதான். அப்பாவோட போகேக்க தனியக் கதைக்கச் சந்தர்ப்பம் இல்ல. ஆனா அவன் கோபத்தில அப்பாவுக்கு ஏதும் செய்தா........? ஐயோ! என்னால அப்பாவுக்கு.......... கடவுளே! அப்பிடி ஒண்டும் நடக்கக்கூடாது. மனசுக்குள்ள வேண்டியபடி பின் கதவைத் திறந்து வெளியிலே இறங்கினன்.

வானத்தில் நிலவு தேய்ஞ்சு போய் இருந்தது. யாரோ அள்ளிக் கொட்டின மாதிரி நட்சத்திரங்கள். கிணத்தடி மல்லிகைப்பூ விரியற வாசத்தோட பனிக்குளிர் காத்து, 'சில்' எண்டிச்சுது. கையைக் கட்டிக்கொண்டு கிணத்துக் கட்டில குந்தினன். எவ்வளவு இனிமையான சூழல். இதுக்கும் மனதுக்கும் கொஞ்சம்கூட சம்பந்தமே இல்லாமல் இருக்கிறத நினைச்சால், வேதனைதான் மிச்சம். கிணத்துக்குப் பக்கத்தில உள்ள கொய்யாக்குக் கீழே கிடந்த ஏதோ, என்ர காலில தட்டுப்பட்டிச்சுது. மெதுவா நிமிர்த்திப் பார்த்தன். ஒரு சைக்கிள் பார் பகுதியும் றிம்மும்......... அட இதைச்சுத்தித்தான் முந்தி ரேடியோ கேட்டனாங்கள். வெரித்தாஸ், பி.பி.சி., புலிகளின் குரல்......... தம்பிதான் இதைச் செய்தவன். பொழுதுபட்டாக் காணும். சுத்தத் தொடங்குவான். கை உளைய உளையச் சுத்துவான். இடைக்கிடை விட்டா ரேடியோ விக்கி விக்கிப் பாடும்.

தம்பி இப்ப எங்க இருப்பான்? என்ன செய்வான்? எங்கள நினைப்பானோ? கட்டாயம் நினைப்பான். அவனுக்குத்தான் எங்களில எவ்வளவு பாசம். ஒருநாள் ரியூசனுக்குப் போனவன், பிறகு வரவேயில்ல. ஒரு கடிதம்தான் வந்திச்சுது. எப்பிடி அவனால எங்களப் பிரிய முடிஞ்சுதோ தெரியேல்ல. அப்ப எனக்குக்கூட அவனில் கோபம்தான் வந்தது. இப்ப நினைக்க எனக்கே வெட்கமா இருக்கு.

எழும்பிவந்து கதவைச் சாத்தினன். லயிற்றை நூத்திட்டு, பழைய யாம்போத்தல் விளக்கை அம்மா கொழுத்திக் கொண்டிருந்தா. இப்ப அதுதான் விடிவிளக்கு.

"படன் பிள்ள. விடிய பள்ளிக்கூடம் போக வேணுமல்லோ"

"ஓமம்மா"

என்றபடி அம்மாவுக்குப் பக்கத்தில படுத்தன். அம்மாவோட ஒண்டிக்கொண்டு படுக்க ஏதோ நிம்மதியா இருந்த மாதிரி ஒரு உணர்வு. எல்லாத்தையும் அம்மாட்டச் சொல்லி அழவேணும்போல இருந்திச்சுது. வேண்டாம். அவவும் நிம்மதியில்லாம என்னப்போல துடிக்க வேண்டாம்.

அம்மா என்ன நினைச்சாவோ தெரியேல்ல. மெதுவா என்ர தலையைக் கோதிவிட்டா. நாங்க எதுவுமே கதைக்கேல்ல. அந்த மௌனம் ஒருத்தருக்கொருத்தர் ஆதரவா இருக்கிற உணர்வைத் தந்தது. அதுதான் இப்ப இருக்கிற ஒரேயொரு திருப்தி. நாளைக்கு எண்டது எங்களுக்கு இருட்டாத்தான் இருக்குது. ✷

# போரும் பொருண்மியமும்

## உலக அரங்கில் தமிழீழ "வேளாண்மை மன்னனும்" தமிழீழப் பொருண்மியத்தில் நமது பங்கும்

அகில உலக உணவு நிறுவனத்தின் (குயுழு) 50 ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்களின் போது தமிழீழத்தின் விவசாயி திரு.கந்தையா முத்துக்குமாரு அவர்கள் உலகிலேயே சிறந்த நெற்செய்கையாளர் என்ற விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். அவரைத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வாழ்த்துவதில் மிகவும் பெருமை கொள்கிறது. இதில் சிறப்பான அம்சம் என்னவெனில் இவர் 1994 ம் ஆண்டு வைகாசி மாதம் தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களால் "வேளாண் மன்னன்" என்ற விருதும் தங்கப் பதக்கமும் வழங்கப்பட்டு ஏற்கனவே கௌரவிக்கப்பட்டுள்ளார். திரு. கந்தையா முத்துக்குமாரு அவர்கள் வவுனியா மாவட்டத்திலுள்ள நெடுங்கேணிக் கிராமத்தில் ஒரு நெற்செய்கையாளர் ஆவார். இவர் 3 ஏக்கர் வயலில் புதிய விளைச்சலைத் தரும் நெல்லினைப் பயிரிட்டு 4 தொன் விளைவினைப் பெற்றிருக்கிறார்.

இவரைப் பாராட்டும் அதே வேளையில் தமிழீழத்தின் அரிசித் தேவையையும் சிறிது இங்கே பார்ப்போம். தமிழீழத்தவரின் முக்கிய அல்லது பிரதான உணவு நெல்லரிசிச்சோறு ஆகும். இதனை நாம் எமது சுயதேவையைப் பூர்த்தி செய்கிற மாதிரி உற்பத்தி செய்கிறோமா என்ற கேள்வி எழுகிறது. இல்லை.

தமிழீழத்தில் நெல் உற்பத்தித்துறை முற்றாகவே பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழீழத்தின் மொத்த சனத் தொகை கிட்டத்தட்ட 30,00,000 (முப்பது இலட்சம்) எனக் கணக்கிடப் படுகின்றது. இந்த மக்களுக்கு ஆண்டிற்கான மொத்த அரிசித் தேவை 2,50,750 மெற்றிக் தொன்னாகக் கணக்கிட ப்படுகிறது. இந்த அரிசியை 3,74,300 மெற்றிக் தொன் நெல்லிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். தமிழீழத்திலிருந்து கடைசியாகக் கிடைத்த தகவல்களின் படி அதாவது வட, தென் தமிழீழப் பிரதேசங்களிலிருந்து 6,09,000 மெற்றிக் தொன் நெல் விளைச்சல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்னவெனில் எமது தேவையை விட 1,57,000 மெற்றிக் தொன் அரிசியைச் சிறிலங்காவிற்கு ஏற்றுமதி செய்து வந்திருக்கின்றோம். ஆனால் இன்றைய கால கட்டத்தில் தொடர்ந்து வரும் இராணுவ நடவடிக்கைகளால் மக்கள் இடம்பெயர்ந்த காரணத்தால், விளைநிலங்கள் தரிசாக கைவிடப்பட்ட நிலை, விளைவிக்கப்பட்ட நெல் அறுவடைக்குக் காத்திருக்கும் போது எரிக்கப்படும் நிலை,



பொருண்மிய எரிபொருட் தடையால் உள்ளீடுகள் பெற முடியாது நீர் இறைப்புப் பாதிப்பு, உரங்கள் - கிருமிநாசினித் தட்டுப்பாடு, போக்குவரத்துப் பாதைகள் தடுக்கப்பட்டமை, சந்தைப்படுத்தல் இயலாமை இவற்றால் நெற்செய்கை பாதிக்கப்பட்டு அரிசிக் கப்பலையே எதிர்பார்க்கும் நிலமையே தொடர்ந்து வருகிறது.

அத்துடன் கடந்த காலங்களில் மூன்று வகையான நெற்செய்கையாளர்களையும் காணக் கூடியதாக இருந்திருக்கிறது. முதலாவதாக கொழும்புத் தேவை கருதி சம்பா நெல் வர்க்கங்களைப் பயிரிட்டு கொழும்புச் சந்தையின் நிலமையைப் பார்த்து விற்று பணம் சம்பாதிப்பவர்கள். இரண்டாவதாக யாழ்ப்பாண அரிசியாலை உரிமையாளர்களின் ஊக்குவிப்புடன் அவர்களுக்கு ஏற்ற நெல்லை உற்பத்தி செய்து விற்று வந்தவர்கள். மூன்றாவதாக விலை வீழ்ச்சி ஏற்படும் போது நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு நெல்லை விற்பவர்கள். ஆனால் இன்றோ அந்த நிலமை முற்றாக இல்லாமல் போய் விட்டது. இதனாலும் நெல் உற்பத்தி பெரும் வீழ்ச்சி அடைந்தது.

ஆகவே நெற்செய்கை மற்றும் சிறுதானியச் செய்கைகளில் தன்னிறைவு அடைய வேண்டும் என்ற நோக்கில் காலத்திற்குக் காலம் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் பயிற்செய்கைக் கருத்தரங்குகளும், விவசாயப் போட்டி நிகழ்ச்சிகளும் கிரமமாக நடத்தப் படுகின்றன. அத்துடன் இவற்றிற்கான ஆலோசனை, கடனுதவி என்பனவும் வழங்கப்படுகின்றன. இதனால் பொருத்தமான உள்ளீடுகள் மற்றும் விவசாயத் தேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு மக்கள் கூடுதலாகத் தூண்டப்பட்டு விளைச்சலில் அதிகரிப்பு அவதானிக்கப்படுகிறது. இது தங்கு நிலைப் பொருண்மியத்திலிருந்து விலகிச் சென்று சுயசார்புப் பொருண்மியத்தை தேடும் மனமாற்றத்தைக் காட்டுகிறது.

திரு. கந்தையா முத்துக்குமாரு பெற்ற பெருமை தமிழீழத்தவர் எல்லோருமே பெற்ற பெருமை!. குறிப்பாக தமிழீழப் பொருண்மிய நிறுவனத்திலுள்ள எல்லோருமே பெற்ற பெருமை!. இந்த நேரத்தில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழ "வேளாண் மன்னர்" களை கௌரவிக்கும் போது உழைக்கும் மக்களை ஊக்கப்படுத்தி அவர்களின் ஒத்துழைப்போடு உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளை தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது என்றும் அதன் ஒரு முக்கிய அம்சமாகவே வேளாண்மைத் துறையில் போட்டிகளை நிகழ்த்தி வேளாண் மன்னர்களைத் தெரிவு செய்திருக்கின்றது என்றும், எமது தாயக மண்ணில் பொன் விளைவித்து அபாரமான சாதனை ஈட்டிய உழவர்கட்கு "வேளாண் மன்னர்" விருதுகளை வழங்கிக் கௌரவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன் என்று கூறியிருக்கிறார்.

தொடரும் இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயரும் மக்கள் மாவீரர்களால் மீட்கப்பட்ட மண்ணில் குடியேறும் பொழுது, அவர்கட்கு உணவு அளித்து பராமரிக்கும் ஒரு பாரிய பொறுப்பு தமிழீழப் பொருண்மியத்தின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதற்கு வெளிநாட்டில் வாழும் ஒவ்வொரு ஈழத் தமிழ் மக்களும் உதவி புரிய மிக மிக கடமைப் பட்டவர்களாகிறார்கள். ஆகவே ஈழத்தமிழர்களே உடனடியாகவே உங்களுக்கு அண்மையிலுள்ள தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உங்களால் இயன்ற பங்களிப்பை (பணம், அறிவு) செலுத்தி ஆயிரமாயிரம் முத்துக்குமாரு போன்ற விவசாயிகளை உருவாக்கி ஈழத்தமிழரின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து சிறிலங்கா அரசாங்கத்தின் மிலேட்சத்தனமான பொருளாதாரத் தடைகளை உடைத்தெறிந்து தமிழீழம் மலர்ந்து செழித்து வளர உரமிடுவோமாக .

நெல், சிறுதானியப் பயிர்ச் செய்கையுடன், நெல்லுக்குப் பிரதியீடாக கோதுமை உற்பத்தியை தமிழீழத்தில் பயிரிட்டுப் பார்ப்பதற்கு உங்கள் அறிவும், உதவியும், ஊக்கமும் தேவை ப்படுகிறது. இத்துறையில் உதவ விரும்புவோர் தயவு செய்து பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். ✷

**Eelam House**
**Teedor (U.K)**
**202 Long Lane, London, SE1 4QB.**

**Tel: +44 181 365 0249.**
**E-mail: eelamhouse.teedor@ukonline.co.uk**

### பொருண்மிய மேம்பாட்டு நிதிக்காக சுவிசில் நடைபெற்ற ஏற்றமிகு எழுச்சி மாலைப்பொழுது.

18.01.97 இல் சுவிசில் உள்ள லவுசான் மாநிலத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிதிக்காக நடைபெற்ற "ஏற்றமிகு எழுச்சி மாலைப்பொழுது" நிகழ்வில் லவுசான் மாநில ஆசிரியை செல்வி. அபிராமி புவனேந்திரன் அவர்களின் மாணவிகளினது நடன நிகழ்வின் போது...



# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அறிமுகம் செய்யும் துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவை

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பத்தாண்டு சேவையின் அனுபவமும், குறிப்பாக 5இலட்சம் மக்களின் இடப்பெயர்வும், அவர்கள் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையில் அம்மக்கள் கழகத்தில் தங்கு நிலையில் இருந்து மாறித்தாமாகச் செயற்பட தமிழர் புனர்வாழ்வுக்கழகம் புலம் பெயர்ந்து வாழும் மக்களின் பங்களிப்புடன் மேற்குறிப்பிட்ட திட்டத்தை இவ்வருடத்தில் செயற்படுத்த முன்வந்துள்ளது

நோக்கம்: திரந்தர இடம் பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், அவர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், சமூக நிலையில் அபிவிருத்திக்கு ஊக்குவிப்பளித்தல்.
காலம்: குறைந்தது 03 மாதங்களும், ஆகக்கூடுதல் 06 மாதங்களும்.

செயற்பாடு: இத்திட்டமானது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்ட மக்களுக்காக செயற்படுத்தப்படும் திட்டமாகும். அந்தந்த மாவட்டங்களின் தேவைகளுக்கேற்ப நிதிப்பங்கீடு நடைமுறைப் படுத்தப்படும். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்காளி நிறுவனங்களாக இணைந்துகொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்களால் "துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத் திட்டம்" செயற்படுத்தப்படும்.

நடைமுறை: உரிய படிவத்தில் விண்ணப்பங்கள் பூரணப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அவ்விண்ணப்பங்கள் மாவட்ட அரச அதிபர், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் பங்குகொள்ளும் மாவட்ட மீளாய்வு சபையினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் அந்தந்தப் பங்காளி நிறுவனங்களால் செயற்படுத்தப்படும்.

துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத் திட்டத்திற்கான பொதுவான தேர்வுப் பிரமாணங்கள்

பயனாளிகள்:

* உதவி புரியும் சமூகத்தில் இடம் பெயர்ந்தோர் பிரசன்னம். இடம் பெயர்ந்தோர் கூடுதலாகவுள்ள சமூகங்களுக்கு முன்னுரிமை.
* இடம் பெயர்ந்தோரின் புனர்வாழ்வு துரிதப்படுத்தலும், பயன் செறிவு படுத்தலும், நிலைத்து நிற்கக்கூடிய விளைவுகள் ஏற்படுத்தலும்.
* நிரந்தரமானோரின் வாழ்வுத்தரத்தை உயர்த்தலும், உதவுதலும், அவர்களின் அபிவிருத்தியில் துரித முன்னேற்றத்தினை காணு தலும்.
* தேர்வுப் பகுப்பாய்வு திட்டமிடல், பராமரிப்பு உள்ளிட்ட சகல திட்டச் செயற்பாட்டின் போதும் பெண் பயனாளிகளின் ஆர்வமான பங்குபற்றல் அவசியம்.
* குழந்தைகள், விதவைகள், ஊனமுற்றோர், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் போன்ற வகுப்பினருக்கு திட்டவாக்கம் பயன்விளைவுகளை ஏற்படுத்தல். மேற்குறிப்பிட்ட இலக்கினருக்குக் கூடுதல் பயன் ஏற்படுத்தும் திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்தல்.

ஒதுக்கீடு:

ரூபா பத்துக் கோடி (ரூ 100,000,000)க்கு மேற்படாத ஆறு மாதகாலத்திற்கு உட்பட்ட திட்டம். ஆகக்கூடுதலாக ஐந்து இலட்சம் ரூபா (ரூ500,000), ஆகக்குறைந்ததாக ஐம்பதினாயிரம் ரூபா (50,000).
உள்ளீடுகள்: ஸ்ரீலங்கா அரசினால் தடைசெய்யப்படாத உள்ளூரில் கிடைக்ககூடிய பொருட்களைக் கொண்டு து. பு. அ. சே திட்டம் அமுலாக்கப்படுவதுடன், பயனாளிகளினதும் அமுலாக்கும் நிறுவனங்களினதும் செயற்திறனையும் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

விளக்கம்: து.பு.அ.சே திட்டம் தொழில்நுட்ப ரீதியாக நிலைக்கக்கூடியதாகவும், சமூகத்திற்கு ஏற்கனவே பரிச்சயமானதாகவும், பொருத்தப்பாடு உடையதாகவும் இருத்தல் அவசியமானதாகும்.

இடம் பெயர்ந்தோருக்கான அரச, சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் நிகழ்ச்சித் திட்டங்களை குறை நிரப்புச் செய்ததாக இத்திட்டம் அமைய வேண்டும்.

ஒரு சமூகத்தில் ஏற்கனவே அமுலாக்கப்பட்ட திட்டங்களுக்கு மேலதிக உதவியளிப்பதாகவும், உறுதுணையானதாகவும் து.பு.அ.சே திட்டங்கள் இருப்பதில் கவனம் செலுத்தல் வேண்டும். இருப்பினும் தேவைகள் உள்ள சமூகங்களுக்கு இத்திட்டத்தை அமுலாக்குவதற்கு முன்னுரிமையளித்தல் வேண்டும்.

து.பு.அ.சே திட்டமானது தனி மனிதர் மட்டுமல்லாது, அச்சமூகத்தின் சுபீட்சத்திற்கும், உயர்வுக்கும் பங்களிப்புச் செய்யக்கூடியதாக திறமையுடன் திட்டமிட்டு செயற்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

இத்திட்டங்கள் மாவட்ட முன்னேற்றத் திட்டங்களுக்கு இசைவானதாக இருப்பதுடன், நிதி வழங்கல், அமுலாக்கம் போன்ற விடயங்களில் இரட்டிப்புச் செயற்பாட்டைத் தவிர்ப்பதாகவும் இருத்தல் வேண்டும்.

அரசுடனும், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் இணைந்து செயற்படும் திட்டமாகவும் இருக்கலாம்.

பயிற்சி: திட்டம் நிலைத்து நிற்பதற்கு ஏதுவாக பொருத்தமான பயிற்சிகள் அளிக்கப் படுதல் அவசியமாகும்.

சகல பயிற்சிகளும் பிரதேசத்திலுள்ள சம்பந்தப்பட்ட அரச திணைக்களங்கள் நிறுவனங்களால் அங்கீகரிக்கப்படுவதுடன், ஒருங்கிணைக்கப்பட்டிருத்தலும் அவசியம். பயிற்சியின் நோக்கம் தெளிவுபடுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பயிற்சியாளர்களின் பெயர், பின்னணி பாட விதானம் யாவும் திட்ட யோசனையின் ஒரு பகுதியாகக் கொடுக்கப்படல் வேண்டும்.

பங்காளி நிறுவனங்களின் தேர்வுப் பிரமாணம்:

பங்காளி நிறுவனங்கள்: பங்காளி நிறுவனங்களாவன அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் ஒறுப்புரிமை பெற்றவையாக இருத்தல் வேண்டும்.
அரச கட்டமைப்புடன் இணைந்து செயற்படுபவராகவும் இருத்தல் வேண்டும்.
தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொதுவான ஒப்பந்த அடிப்படையில் உப ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு குறித்த நிதிவழிகாட்டலுக்கு அமைய செயலாற்றுவர்.

நிதி நடைமுறைகளைப் பொறுத்தவரையில், ஆரம்பத்தில் உப ஒப்பந்தத்தில் பொருந்திக் கொண்டவாறு ஒதுக்கப்பட்ட தொகையின் 40%ற்கு மேற்படாது முற்பணம் வழங்கப்படும். இதற்கு மேற்பட்ட தொகை வழங்குவதாயின் செலவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பங்காளி நிறுவனங்கள் தெரிவு: தேவைகளைப் பகுப்பாயும் ஆற்றலும் து பு.அ.சே திட்டங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழக நடைமுறைகளுக்கு அமைவாகத் திட்டமிடவும், அமுலாக்கவும் ஆற்றலும், ஆர்வமும் கொண்டிருத்தல்.
*சம்பந்தப்பட்ட துறையில் அடங்கும் சகல தேவைகளையும் நிறைவேற்ற நல்ல அனுபவமும், போதிய தேர்ச்சியும் கொண்டிருத்தல்.
*சரியான பொறுப்பும், அதிகாரமும் அடங்கிய பொருத்தமான நிறுவன உள்ளக நிதிக்கட்டுப்பாடுடைய கட்டமைப்பு.
*கொடுக்கப்படும் திட்டத்தை கச்சிதமாகவும், திருப்திகரமாக வும், திறமையுடனும் முழுமையாக நிறைவேற்றக்கூடிய ஆளணியைக் கொண்டுள்ளமை.
*வேண்டிய வடிவில் சுருக்கமுடன் கூடிய நிதியறிக்கை தயாரிக்கும் விருப்பும், ஆற்றலும் கொண்டிருத்தல்.

துறைகள்:

கல்வி – கல்விச்சேவை, தொழில்சார் பயிற்சி, முனபள்ளி, மனித வள மேம்பாடு. 1000 குழந்தைகள் தத்தெடுத்தல், அறிவுவளர்ச்சி, வளர்ந்தோர் கல்வி.
**வீடமைப்பு** – துரித வீடமைப்பு தற்காலிக வதிவிடங்கள், விசேட குடியிருப்பு.
விவசாயம்: விவசாய சேவை நிலையம், பண்ணை, நாற்று மேடை.
தொழில்: – சுயசார்பு தொழில் முயற்சிக் கடன்
**புனர்வாழ்வு:** – வலுவிழந்தோர், உழைப்பாளரையிழந்தோர், முதியோர், ஆதரவற்ற சிறுவர், நோயாளிகள், பெண்கள், அபிவிருத்தி, உடனடி நிவாரணம், சமைத்த உணவு, உலர் உணவு, மரணக் கொடுப்பனவு, குழந்தைகளுக்கான கொடுப்பனவு.
சுகாதாரம்: – குடிநீர், மலகூடம், போஷாக்கு, தாய் சேய், நலன், ஆரம்ப சுகாதாரம்.
பொதுவிடயம்: – நிறுவனப் பலப்படுத்தல், சமூகநலத் திட்டங்கள், மரநடுகை, சூழல் பாதுகாப்பு, வருமான அதிகரிப்புத்திட்டம், உட்கட்டுமானம், கலை கலாச்சாரம்.

துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத்திட்டம் – துறை சார்ந்த சுட்டிகள்

துரித வீடமைப்பு (துறை)

இடம் பெயர்ந்தோரைக் குடியமர்த்தல், வாழ்விட வசதிகள், சமூக இசைவாக்கம், அடிப்படைத் தேவைகள் பூர்த்தி, நிம்மதியான வாழ்க்கை முறை, உயர்வான சகஜ வாழ்வு.

குடிநீர்: (துறை)

குடிநீர் பெறுவதற்கான கூடுதல் வாய்ப்பு, சுத்தம், சுகாதாரம் பேணல், சூட்டு நோய்களிலிருந்து ஓரளவு பாதுகாப்பு, நீரினால் பரவும் நோய்களின் பரம்பலில் வீழ்ச்சி

விவசாயம்: (துறை)

சுய தேவையைப் பூர்த்தி செய்தல், வருமான அதிகரிப்பு, தொழில் வாய்ப்பில் மேம்பாடு, கூடுதலான விளைச்சல், மேம்பட்ட விளைச்சல், மேம்பட்ட காணிப் பெறுமதி.

கல்விச் சேவை: (துறை)

கல்விச் சூழலில் புதிய உத்வேகம், மாணவரின் அறிவு வளர்ச்சி, ஆசிரியருக்கான வேலை வாய்ப்பு, வளர்ந்தோர் கல்வியினால் எழுத்தறிவற்றவர் பரம்பலில் வீழ்ச்சி, பெற்றோரின் புறக்கல்விச் செலவீனத்தில் வீழ்ச்சி, அறிவுசார் சமூகத்தை உருவாக்கல்.

சுயசார்பு நிதியம்: (துறை)

தங்கு நிலையில் உள்ளோரை சுயசார்பு நிலைக்கு மாற்றுதல் கூடுதலான வருவாய்தரும் முயற்சிகளுக்கான வாய்ப்புக்கள், கூடுதலான வருவாய், அதிகரித்த கடன் பெறும் வழிமுறைகள், மேம்பட்ட உள்ளூர் வளங்களின் பாவனை, மேம்பட்ட சிறுதொழிற் திறன் முயற்சிகள், சேமிப்பை ஊக்குவித்தல்.

முன்பள்ளி (துறை)

4 அல்லது 5 வயதுக் குழந்தைகளை பள்ளிக்கான இசைவாக்கத்திற்குத் தயார் செய்தல்



எழுத்து, கணித எண்ணக் கருத்துக்களை குழந்தைகளுக்கு உருவாக்கல் குழந்தைகளின் வளமான எதிர்காலத்திற்கு வித்திடல். ஆசிரியர் சேவைமூலம் தொழில் வாய்ப்பை அதிகரித்தல், ஆசிரியர்களை பல்துறைசார் திறனபிவிருத்தியால் கிராமிய இணைப்பாளராக்கிய சேவை மேம்பாடு.

சுகாதாரம் (துறை)

அடிப்படை சுகாதார தேவைகளைப் பூர்த்தி செய்தல், ஆரம்ப சுகாதாரக் கணிப்பிலூ் கூடுதல் அறிவு, சுகாதார சேவைகள் பெறுவதற்கான கூடுதல் வாய்ப்பு, தடை செய்யக் கூடிய நோய்களில் வீழ்ச்சி, மேம்பட்ட சுகாதார நடைமுறைகள், சுகாதாரக் கல்வியில் மேம்பாடு, நோயாளிகள் பராமரிப்பு, சுகாதார ஊழியர் பராமரிப்பு.

தொழில்சார் பயிற்சி (துறை)

சுய தொழிலுக்கான ஊக்குவிப்பு:
பாடசாலைக் கல்வியை முடித்தவர்களுக்கு தொழில் பயிலும் வாய்ப்பு, அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சி, தங்கி வாழும் இளைஞர், யுவதிகளை சுய தொழிலுக்கோ, தொழில் வாய்ப்புக்கோ வழிகாட்டல்.

வலுவிழந்தோர் திட்டம்: (துறை)

போரினால் கால், கை இழந்தோருக்கு செயற்கைக் கை, கால் பொருத்தி அவர்களை சகஜ வாழ்வுக்குத் திருப்புதல். அங்கவீனர் என்ற மன வடுவை நீக்குதல், தொழில் வாய்ப்பில் மேம்பாடு.

தொடரும்...............

மேலதிக தொடர்புகளுக்கு
TROBotswana:Ph/Fax: (267) 309 139
TRO Canada: Ph: (1416) 661 6933
TRO Denmark: Ph: (4597) 223 647
TRO France: Ph((331 46) 489 850
TRO Germany: Ph/Fax: (4921) 665 8508
TRO U.K. Ph: 44181 520 5876
TRO Italy: PH: (39 91) 636 1454
TRO Holland Ph: (3172) 644 442
TRO New Zealand ;Ph: (649) 537 0258
TRO Norway Ph: (47 22) 646 592
TRO South Africa Ph: (27 471) 310 213
TRO Sweden Ph: (4686) 870 649
TRO Switzerland Ph: (41 41) 260 8398
TRO U.S.A. Ph: (0 1 301) 937 3097
TRO Australia:Ph:/Fax: (613) 9800 3899

# உலக அரங்கு

## பிரெஞ்சு, பிரெஞ்சியர் - ஓர் எறிநோக்கு

உலக வரலாற்றில் ஐரோப்பிய வரலாறு எழுச்சியானதாக அமைகிறது. இதேபோல், பிரான்ஸ் வரலாறு ஐரோப்பிய வரலாற்றில் தனித்துவமானதாகத் திகழ்கிறது. சுதந்திரம் (Liberty), சமத்துவம் (Eqality), சகோதரத்துவம் (Fraternity) என்பன பிரெஞ்சுப் புரட்சியின் சாசனங்கள். உலகில் பிரசித்தி பெற்ற இப்புரட்சி ஏற்படுத்திய தாக்கம், மனிதஉரிமைகள் நன்கு மதிக்கும் முதல் நாடு எனும் நிரந்திரப் பெயரைப் பிரான்சுக்குப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. பண்பாட்டுப் பாரம்பரியம், செல்வந்த அனுபவம், நல்ல வாழ்க்கை, உயர்தர மனப்பான்மை, முதலானவற்றில் ஊறியவர்களாக பிரெஞ்சுக்காரர்கள் விளங்குகிறார்கள்.

மனிதர்கள் உடலின் வெளித்தோற்றச் சிறப்புத் தன்மைகளில் தோல், தலைமயிர், கண்கள், மூக்கு, உதடுகளின் அடிப்படையில் நீக்ரோவினர் (கறுப்பு) காக்கேசியர் (வெள்ளை) மங்கோலியர் (மஞ்சள்) என மூன்று தலைமை இனங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். மானிடயலியலின் படி (Anthropology) தமிழர் (திராவிடர்) நீக்ரோ இனத்திற்கும், பிரெஞ்சுக்காரர் (ஆரியர்) காக்கேசிய இனத்துக்கும் உரியவர்கள். உடலியல் அடிப்படையில் பாகுபட்டு நிற்கும் வெவ்வேறு இனங்கள்– சமுதாயங்கள் நீண்டகாலமாகக் குறிப்பிட்ட இடங்களில் வாழும்போது, மொழியை அமைத்துக் கொண்டன. தற்காலத்தில் மொழி அடிப்படையிலேயே மக்கள் சமுதாயங்கள் பேரிட்டு அழைக்கப்படுகின்றன. 'தமிழ்' எனும் சொல் தமிழ் என்ற மொழிப்பெயர் அடிப்படையிலும், பிரெஞ்சுக்காரர் (பிரெஞ்சியர்) என்பது, பிரெஞ்சுமொழி அடிப்படையிலும் தோன்றியவை.

பிரான்ஸ், பிரான்சின் இனம் என்று அழைக்கப்படும் இந்நாட்டின் மூதாதைகளாக கோலுவா (Gaulois) இனத்தவர் கருதப்படுகின்றனர். கோலுவா இனத்தவர் வாழ்ந்த இம்மண்ணுக்கு கோல் (Gaule) என ரோமானியர் பெயர் கொடுத்தனர். நாலாம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் (450), இந்நாட்டுக்குப் படையெடுத்து வெற்றிகொண்ட ப்ராங்க் (Franc) இனத்தவர், ஜேர்மனிய 'சலீகம் கோல்' என அழைக்கப்பட்ட நாட்டுக்கு, தமது இனப்பெயரை நிலைநிறுத்தும் முகமாக பிரான்ஸ் (France) எனப் புதுப்பெயர் இட்டனர். இப்பெயரே இந்நாட்டின் பெயராக நிலைத்து விட்டது.

**சுதந்திரம் (Liberty), சமத்துவம் (Eqality), சகோதரத்துவம் (Fraternity) என்பன பிரெஞ்சுப் புரட்சியின் சாசனங்கள். உலகில் பிரசித்தி பெற்ற இப்புரட்சி ஏற்படுத்திய தாக்கம், மனிதஉரிமைகள் நன்கு மதிக்கும் முதல் நாடு எனும் நிரந்திரப் பெயரைப் பிரான்சுக்குப் பெற்றுக் கொடுத்திருக்கிறது.**

பிரான்ஸ் என்பது, பிராங் இனப் பெயர் அடிப்படையிலும், பிரெஞ்சுக்காரர் (Francais) என்பது மொழிப்பெயர் அடிப்படையிலும் உருவானவை. பண்பாடுகளால் வேறுபட்ட ஓர் ஐம்பது வகை கலப்பின் விளைவுதான் பிரெஞ்சு மக்கள். இவர்கள் "தான் தனக்கு" (Individualism) எனும் தனிப் போக்கு உடையவர்கள். ஆதலால் இவர்கள் (தமிழர்களைப் போல்) தமக்குள் ஒத்துப்போகும் தன்மை இல்லாதவர்கள். பிரெஞ்சியர் ஆதியில் நாட்டுப்புறத்தவர் ஆதலால், விவசாயமே இவர்கள் வாழ்க்கை. தமது மண்ணில் பற்று வைத்திருப்பதனால், அம்மண்ணுக்குரிய உற்பத்திப் பொருட்கள், உணவுப்பொருட்கள், 'ஒயின்' (வைன்) வகைகள் போன்றவற்றைப் பேணி வருகிறார்கள். பிரான்சில் 400 வகையான பாற்கட்டி வகைகள் இருப்பதற்கு, இப்பேணல் ஒரு காரணமாகும். பிரான்சிற்குப் பெயர் எடுத்துத்தரும் 'ஒயின்களும்' பிரதேச அடிப்படையிலேயே 'பொர்தோ' (Bordeaux) 'ஸம்பயன்' (Champagne) போன்று பெயர் கொண்டுள்ளன. மேற்கு நாடுகளில் இந்த உணவுப் பொருட்களுக்குப் பிரெஞ்சுப் பெயர்களே இடப்பட்டு இருக்கின்றன.

கலை, பண்பாடு, வாழ்வியல் இன்பங்கள், சுற்றுலாத்துறை முதலானவற்றிற்கு உலகின் வரவேற்புத் தலைநகராகவும், ஐரோப்பாவின் தலைவாசலாகவும் பாரிஸ் விளங்குகிறது. இதனால்தான், தொடர்ந்து பதினைந்தாவது தடவையாக சர்வதேச மாநாடுகளில் உலகத் தலைநகராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது. பாரிஸ் என்றதும் நினைவிற்கு வரும் 'ஈவ்எல்கூர்' நுனிக்கோபுரம், 1889ல் நடந்த உலகப்பெரும் கண்காட்சிக்காகக் குஸ்தாவ் ஈவ்ஏல்(Gustave Eiffel) எனும் பொறியியலாளரால் அமைக்கப்பட்டது. இவர் பெயராலேயே இக்கோபுரம் அழைக்கப்படுகிறது. **"வாரீர்! வந்து என் அழகைப் பாரீர்! பார்த்து உம் மனதைத் தாரீர்"** என மிளிர்கிறது பாரீஸ்.

'எக்ஸாக்கோனின்' தேசமொழி பிரெஞ்சு. இது இரண்டாவது சர்வதேச மொழியாகவும், மற்றவர்களின் உலகமொழியாகவும் பெருமை கொண்டது. இம்மொழி கோலுவா இலத்தின், ப்ராங் மொழிகளின் கலப்பால் ஆனது. உலக மொழிகளின் பாகுபாட்டில் – இது இந்தோ ஐரோப்பிய மொழிகளில் ஒன்று. இது மொழிக்குல

## பிரான்ஸ்:

அடிப்படையில் ஐரோப்பியத்தையும் மொழிக்குடும்ப அடிப்படையில் இத்தாலியத்தையும் (இலத்தீன்) சேர்ந்தது.

பிரான்ஸின் வடபகுதியில் "லாங்தோயில்" (Langue D"oil) தென்பகுதியில் 'லாங்தோக்' (Langue D"oc) என இரு பிரதேச மொழிகள் பேசப்பட்டு வந்தன. இவ்விரு பிரதேச மொழிகளிலும் இடத்திற்கு ஏற்ப, வட்டார மொழிகள் (கிளை மொழிகள்) வழங்கப்பட்டன. பாரிசுத்தீவில் (F) ப்ரான்சியன் (Le Francian) பேசப்பட்டு வந்தது. பிரித்து ஆளப்பட்ட பகுதிகளை ஒன்று சேர்த்து ஆண்ட பெருமை, 'கப்பெஸியன்' (Cupetien) லம்ச அவர்களையே சேரும். இவர்கள் வாழ்ந்த காலப் பகுதியில் (கி.பி.987 – கி.பி.1328) கிறிஸ்தவ மதமும் எழுச்சி பெற்றது. இவ்வெழுச்சியின் விளைவாகவும் மக்கள் ஒரேமொழி பேசவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். பாரிசும் அதன்புறம் சார்ந்த நகரப்பகுதிகளில் அரசர்களின் தலைநகர் இருந்தது. இத்தலைநகர்ப் பகுதிகளில் பேசப்பட்ட 'ப்ரான்ஸியன்'




மற்றைய வட்டார வழக்கு மொழிகளை ஆளுமை செய்து தனிமொழியாகி முன்னிலைக்கு உயர்ந்தது. ("அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி") இந்த மொழி ப்ரான்சுவா (Francois) ஆகி, காலப்போக்கில் பிரெஞ்சு (Le Francais) ஆனது.

பிரெஞ்சு மன்னர்களில் குறிப்பாக, பதினான்காம் 'லூயி' மன்னர் காலத்தில்தான் பிரெஞ்சு ஏற்ற நிலை பெற்றது. இன்று வழங்கப்படும் பிரெஞ்சு பல படிநிலை வளர்ச்சிகளின் விளைவாகும். பிரெஞ்சு இலக்கணத்தைப் பல்ஸ்கிறாவ் ஜோன் என்னும் ஆங்கிலேயரே முதல்முதல் பதினாறாம் நூற்றாண்டில் எழுதினார். பிரெஞ்சு இலக்கணம் இங்கிலாந்திலே பிறந்தது. குசினி, ரோந்து, ஓடிக்கலோன் முதலாகத் தமிழில் வழங்கும் சொற்கள் பிரெஞ்சுச் சொற்களே. இதேபோல் பிரெஞ்சில் வழங்கும் Riz, tek, Catamaran முதலான தமிழ்ச் சொற்களே.

வன்மொழிப் பிரெஞ்சின் வழங்கொள் இலக்கியத்திற்கு துபெல்லி, மோலிஎர், வோல்தயர், திதோரா,ரூசோ, விக்தெர் இயூகோ, வின்னி, முஸ்ஸே, லபார்த்தின், லோன்துலா, பொந்தைய்ன், அல்பேர்க்கமுஸ் முதலானோர் தொண்டு புரிந்தனர். பிரெஞ்சு அறிஞர்களில் பி.பெர்ஓ, ஜூலியன் வன்சன், மார்த்தினே, போலே போன்றோர் தமிழ் இலக்கண தமிழ் இலக்கிய நூல்களை பிரெஞ்சில் எழுதியும், மொழி பெயர்த்தும் போதித்தனர். திருக்குறளுக்கு ஒன்பது பிரெஞ்சு மொழிப் பெயர்ப்புக்கள் உண்டு. பிரெஞ்சிலிருந்து இயூகோவின் les miserables லும் எமில் சோலாவின் Theresa. Germinal லும் பல்சாக், எமில்சோலா, மோம்பாசன், வோல்த்தெய், மோலிஎர், துமாஸ், யூல்வேர்ந், ஆகியோரின் படைப்புக்கள், தமிழுக்கு மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டன. தமிழில் வழங்கும் பஞ்சதந்திரக் கதைகள், பிரெஞ்சின் தழுவல் என்பதற்கு ஆதாரங்கள் உண்டு. காகமும் நரியும் கதையில் வரும் காகத்தின் வாயில் பிரெஞ்சுக்கதையில் இருப்பது பாற்கட்டி. தமிழ்க்கதையில் இருப்பது வடை. உலக மொழிகளில் பிரஞ்சு மொழிக்கே இலக்கியத்தின் அதிக நோபல் பரிசுகள் (12) கிடைத்துள்ளன.

**பிரெஞ்சுப் புரட்சி வழி வாயிலாகப் படிப்படியாக மக்களுக்கு உரிமைகள் கிடைத்தன. இம்மண்ணில் நடந்த பெரும் சமுதாய மாற்றங்களின் விளைவாக, "தனி மனிதவுலகே, சமுதாய அலகு" என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. "நான் இருப்பதால், நாம் இருக்கின்றோம்" என்பதே தற்கால சமதாயத்தின் தத்துவம்.**

பெரும்பாலான மேற்கத்திய சமூகங்களைப் போலவே, பிரெஞ்சுச் சமூகமும் ஒரு புதிய இன அடையாளத் தோடலிலும் நாட்டம் காட்டி வந்திருக்கிறது. பிரான்ஸ் குடியரசு நாடாக மலரமுன் வெடித்த பிரெஞ்சுப் புரட்சி வழி வாயிலாகப் படிப்படியாக மக்களுக்கு உரிமைகள் கிடைத்தன. இம்மண்ணில் நடந்த பெரும் சமுதாய மாற்றங்களின் விளைவாக, "தனி மனிதவுலகே, சமுதாய அலகு" என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. "நான் இருப்பதால், நாம் இருக்கின்றோம்" என்பதே தற்கால சமதாயத்தின் தத்துவம். பெண்களை ஒடுக்கி, அடக்கி அநியாயம் இழைத்த நிகழ்வுகள் பிரெஞ்சுப் பெண்களின் வரலாற்றிலும் உண்டு. பாரபட்சம், அநீதி, தரப்படுத்தல் முதலானவை வரலாற்று, பண்பாட்டு, பொருளாதார, அரசியல், சமூக நிலைகளில் இன்றும் காணப்படுகின்றன. ஆண் – பெண் சமூகநிலை நாட்டின் பொருளாதார, அரசியலில் பெண்களின் பங்கு எனும் நோக்குகளில் உலக நாடுகளில் பிரான்ஸ் முறைய 7, 8, 31வது நிலைகளில் இடம் பெறுகிறது. நீதி, பொருளாதாரம், அரசியல், சமுதாய நிலைகளிலும் **"ஆணும், பெண்ணும் சமம்"** எனும் சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்தும் அது நடைமுறைப்படுத்தப் படாத சட்டமாக இருக்கின்றது.

பிரெஞ்சு மொத்த சனத்தொகையில் 80 வீதமானோர் கத்தோலிக்கர், 4 வீதமானவர் பிற மதத்தவர்கள். 16 வீதமானவர்கள் மதமற்றவர்கள். இங்கு மதம் ஒருவரின் தனிப்பட்ட விருப்பமாக வலுவிழந்து வருகிறது. பிரான்சின் தந்தையாகக் கருதப்படும் குளோவிஸ், பிராங்கு இனத்தவரான இப்பெருமன்னருக்கு ஞானஸ்தானம் நடந்த நிகழ்வு,

இந்நாட்டில் ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. பிராங்க் ராட்சியம் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டதால் இந்நாட்டில் மட்டுமின்றி, ஐரோப்பாவிலும் இம்மதம் நிலையூன்ற ஏதுவானது. பிரெஞ்சு மக்களின் வாழ்க்கையில் ஆரோக்கியம், வேலை, பாலியல் இன்பம், குடும்பம், பணம், பிள்ளைகள், நட்பு, சந்தோஷம், பொழுதுபோக்கு, சுதந்திரம் என்பன பிரதான அம்சங்களாகும்.

தற்காலத்தில் திருமணமாகாமல்

- ச. சச்சிதானந்தம் -

தொடர்ச்சி 14 ம் பக்கம் ...

# இறுதி வரை தேடலில் ஆழ்ந்து நின்ற திரவியம்

தீயுக்கும்
தீராப் பெருமை தந்த
பெருந் தீ

சிந்திக்கத்
தெரிந்த
பெரு நெருப்பு

அச்சமே
அச்சப்படும்
ஆழமான வீரம்

புழுதித் தெருவெங்கும்
நம்பிக்கைப் பூக்களை
விதைத்த
புரட்சியாளன்

ஆத்மத்தின்
ஆழத்தை
அறிந்த
அறிவாளன்

சொல்லி
எழுதிப்
புரியவைக்க
முடியாப் புயல்

கரைவந்தடிக்கும்
அலைகடலின் தலைமீது
விடுதலையின் கனம் எழுதிய
வேங்கை

என்றுமே
நிரப்பமுடியா
நிரந்தர இடைவெளி

எந்த மனசுள்ளும்
சிம்மாசனமமைக்கும்
சிற்பி

நம்பிக்கைக்கே
நம்பிக்கையூட்டும்
நல்லுறுதி படைத்த
நாயகன்

இறுதி வரை
தேடலில் ஆழ்ந்துநின்ற
திரவியம்

சரணடையும்
புலியைப் பார்க்க
சுற்றிவர திரண்டு
நின்ற சதிகளின்
நெற்றியில்,
தன்னை எரித்துத்
தணலெடுத்துக்
கரிபூசிய காவியம்

- ச. ச. முத்து

# தியாகசிலன் கிட்டு அண்ணன்

புவியை நெகிழ வைக்கும்
புலியின் தலைவனவன்
புரட்சிப் பாதையில்
புதுயுகம் படைத்தாய்!

தன்னுரிமைப் போருக்கு
முன்னுரிமை கேட்டு
இன்னுயிரை இழக்கத்
துணிந்து நின்றாய்!

கொஞ்சிப் பேசும் வார்த்தைகளால்
நெஞ்சில் இன்பம் தந்திருந்தாய்!
பிஞ்சுக் குழந்தைகள் - தமிழர்
நெஞ்சமெல்லாம் நிறைந்திருந்தாய்!

அஞ்சி நடுங்கிய தேசத்துரோகி
உன்னை அழிப்பதற்கு
விரக்தியில்
வீசினான் எறிகுண்டை!

வீரம் சொரிந்த நீயோ
கால்களால் அதைமிதித்தாய்!
காலனுக்குக் கண்ணில்லை
உன் பொன்னான காலைப்
புண்ணாக்கி விழுங்கினான்!

முறிந்து வீழ்ந்தாலும்
வீரத்தின் வீறுடன்
எழுந்து நின்று
விடி வெள்ளியாய்த்
திகழ்ந்து நின்றாய்!

வங்கக் கடலில்
பொங்கும் கடலலையில்
சங்கே முழங்கு எனப்
பொங்கி வந்த வேங்கைகளைப்
பொறுக்காத இந்திய அரசு
பொறிவைத்த வேளையில்.......

நெறிமுறை தவறாத
எங்கள் தியாக சீலனே!

இறப்பை
இரைப்பைக்குள் சுவாசித்து
எதிரியவனை
நெருங்கவிடாமல்
நெருப்பை அள்ளி
நெஞ்சில் தூவி
சிரித்த முகத்தை
எரித்துக் கொண்ட
நெஞ்சுரம் மிக்க
சங்கத் தமிழனே!

மண்ணில் மறைந்து
விண்ணுலகம் சென்றாலும்
எங்கள் கண்ணில் நிறைந்து
காவியம் படைக்கின்றாய்!

நீ நடந்த பாதையில்
அடிச்சுவடு மாறவில்லை
காலனுக்குக் கண்ணில்லை
உன் பேரழகை விழுங்கி விட்டான்!

நீ சிந்திவிட்ட சொல்லலைகள்
எங்கள் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை
எங்கள் காதுகளில்
எதிரொலியாய்க் கேட்குதண்ணா!

உன்னை நினைவு கூர்ந்தால்
என் சின்ன வயது
சிலிர்க்கின்றது
என் சிந்தனையில்
பெரிதாய் உறைக்கின்றது.

-வல்வை கு. கௌதமன்
(அவுஸ்திரேலியா - சிட்னி)




# நீங்கள் வாழ்வீர்கள்

உங்களுக்கும்
முகங்கள் இருந்தன
முகவரிகள் இருந்தன
ஆனால்
நீங்கள் முகில்களுக்கிடையே
மறைந்து விட்டீர்கள்

நீலக்கடல் மீதினில்
நீண்ட தூரம் நீந்திச் சென்றீர்
பகைவன் ராடர் கருவிகளில்
ஒரு போதும் உங்கள்
உருவங்கள் தெரிந்ததில்லை
அதிர்வின் பின்னரே

நீங்கள்
உருக்குலைந்து போவீர்கள்
பகைவன் பாசறை எரிக்க
எங்கள் பாசறையில்
நீங்கள்
படுத்துறங்கிய நாட்கள்
கொஞ்சமே

மனிதத்தை
மதிக்காதவர்கள் யார்
எங்கள் மக்களை
கொன்றவர்கள் யார்
எங்கள் மண்ணை
பறிப்பவர்கள் யார்
அவர்களை எல்லாம்
நீங்கள் அழித்தீர்கள்

தமிழ்மாறன்

தனித்து வாழ்ந்தால் தமிழ்வாழும்!
தரளம் பொன்னும் நமதாகும்!
இனித்த கலைகள்
கைத்தொழில்கள்
எங்கும் நிறையும்! வாழ்வுயரும்!
குனித்த பார்வை இனிவேண்டாம்!
கொட்டி முழக்குப் போர்முரசம்!
மனித்த பிறப்பின் உயர்மூச்சு!
தாயக மண்ணில் விடுதலையே!

வாணிதாசன்



# உங்கள் கருத்துக்கள்

7400 கேர்ணிங்
டென்மார்க்
23.01.97

அன்புடன் ஆசிரியர் குழுவுக்கு,

பெரு நெருப்பாகி சுடரெழுந்து எரியும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை, காகிதங்களில் சுமந்து வந்து புலம் பெயர் இதயங்களில் சூடெழுப்பும் ஈடிணையற்ற பணிபுரியும் 'களத்தில்' இன்னும் இன்னும் திசைகளில் எல்லாம் கால் பரப்ப என் வாழ்த்துக்கள்!

மேலும் இத்துடன் 'கிட்டு' என்னும் தலைப்பில் சிறு சிறு இருவரிக் கவிதைகள் எழுதி அனுப்பி உள்ளேன். பிரசுரத்துக்குத் தகுந்ததாக இருந்தால் பிரசுரிக்கும் படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

நன்றி

அன்புடன்
ச. ச. முத்து

Torcy
France
05-02-1997

மதிப்புக்குரிய 'களத்தில்' ஆசிரியர் குழுவுக்கு!

தமிழீழ விடுதலைப் போராட்ட நிகழ்வுகளையும், தாயகத்து உண்மைச் செய்திகளையும் தாங்கி வரும் களத்தில் செய்தித் தாளை ஒழுங்காக வாசிக்கும் வாசகர்களில் ஒருவன் என்ற வகையில், நீங்கள் அறிமுகப்படுத்தவுள்ள 'மக்கள் கருத்துக்கள்' என்ற பகுதியைத் தொடங்க இருப்பதை இட்டு, பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். வாசகர்களின் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதற்கு இப் பகுதி களம் அமைக்க இருப்பதையிட்டு எனது ஆதரவையும் நன்றியையும் முதலில் தொரிவித்துக் கொள்கின்றேன். மிக அண்மைக் காலத்தில் வெளியாகியுள்ள களத்தில் செய்தித்தாளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் ஆக்கங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து இருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். இவ்வாக்கங்கள் தொடர்ந்தும் வெளியிடப்பட வேண்டும். பெரும்பாலும் ஆக்கங்கள் தரமாக இருக்கும் அதேவேளை எழுத்துப் பிழைகளும் இடம் பெறுவதை சென்ற களத்திலும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இப் பிழைகளும் தவிர்க்கப்பட்டு முழு நிறைவுடன் களத்தில் செய்தித் தாள் வெளிவர எனது வாழ்த்துக்கள்.

நன்றியுடன்
பா. செல்வன்

அன்பான வாசகர்களுக்கு!

களத்தில் செய்தித்தாள் பற்றிய தங்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களுக்கும் ஆதரவுக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் உங்கள் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம்.

ஆசிரியர் குழு

# தமிழீழ தேசியப்பணியில் அனைத்துலகத் தமிழ் மக்கள்

## கேணல் கிட்டுவினதும், ஒன்பது மாவீரர்களினதும் 4ஆம் ஆண்டு நினைவு நாள்

### நெதர்லாந்தில்

கடந்த 19.01.97 அன்று, இந்திய அரசின் சதியால் விதையாகிப்போன மாவீரன் கேணல் கிட்டுவினதும் சக ஒன்பது மாவீரர்களினதும் 4ம் ஆண்டு நினைவு நிகழ்வு நெதர்லாந்தின் டென்காக் நகரில் மிகவும் உணர்வு பூர்வமாக நடைபெற்றது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளைப் பொறுப்பாளர் அருமைநாயகம் அவர்கள், கேணல் கிட்டுவின் உருவப்படத்திற்கும் ஒன்பது மாவீரர்களுக்கும் தீபம் ஏற்றி இந்நினைவு நிகழ்வை தொடக்கி வைத்தார். இந் நினைவு நிகழ்வில் மாவீரன் கேணல் கிட்டு வெளிநாட்டு மக்களுக்கு ஆற்றிய



உரையின் சில பகுதிகள் வீடியோ தொலைக் காட்சியில் காண்பிக்கப் பட்டது. தமிழீழத்தின் தற்போதைய உணர்வுகள் பற்றிய கருத்தரங்கும் நடைபெற்றது. இக் கருத்தரங்கின் போது நெதர்லாந்தில் உள்ள தமிழ் மக்கள் தற்போது தமிழீழ போராட்டத்துக்கு ஆற்றவேண்டிய பணிகள் உறுதிசெய்யப்பட்டது.

### இத்தாலியில்

கடந்த 16.01.97 வியாழக்கிழமை இரவு 9.00 மணிக்கு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுக் காரியாலயத்தில் கேணல் கிட்டுவினதும் ஏனைய ஒன்பது போராளிகளினதும் 4ம் ஆண்டு நினைவு வீரவணக்கக் கூட்டம் நடைபெற்றது. இதில் 100ற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் வந்து



அஞ்சலி செலுத்தினர். வந்திருந்த மக்களுக்கு இறுதியில் 'ஓயாத அலைகள்' முல்லை முகாம் மீதான தாக்குதல் வீடியோ பிரதி காண்பிக்கப்பட்டது.



19.01.97 இல் சுவிஸ் செங்காளன் மாநிலத்தில் நடைபெற்ற தளபதி கேணல் கிட்டு ஞாபகார்த்த எழுச்சி விழாவில் திருக்கோணேஸ்வர நடனாலய மாணவிகளின் நடனம் (ஆசிரியை திருமதி. மதிவதனி சுதாகரன்.).

## மாவீரர் நாள் ஒளியிழைப்பேழை

*1996ம் ஆண்டிற்கான மாவீரர்நாள் ஒளியிழைப் பேழை வெளிவந்துவிட்டது. ஒன்றின் விலை 15 DM ஆகும். இவ் ஒளியிழைப்பேழையை பெறவிரும்புவோர் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.*

நன்றி

பிரச்சாரப்பிரிவு
தமிழீழ விடுதலைப் புலிகள்
யேர்மனி.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்




மூன்றாம் ஈழப்போர்
தொடங்கியதில்
இருந்து
இன்றுவரை
சிறிலங்கா
விமானப்படை
இழந்த
விமானங்களும்,
உலங்கு
வானூர்திகளும்





# நலிந்த நாரைக்கு கொளுத்தி ஆசையா?

வை - 8



அவ்ரோ



காலன்
அருவமானவன்;
அழிவில்லாதவன்!
யார் சொன்னது?
இயக்கச்சியின்
ஈச்சம் புதர் பரப்பில் - ஒரு
ஆடி மாதத்து
ஐந்தாம் நாள் - இது
பொய்யாய்ப் போனது!

'சகடை'
தலை முறிந்து - எங்கள்
தங்க மண் தொட்டது.
இம்முறை
குண்டு வீழ்தல்ல
விமானமே வீழ்ந்து - பூமி
விரிசல் கண்டது.
இதுவும் முடியும்!
உள்ளப் பாத்தியில்
நம்பிக்கை வித்து





தொடராய்....
'அவ்ரோ' முதல்
'அன்ரனோவ்' வரை
அன்றன்று தொலைந்தது
'புக்காரா' போய்ச் சேர்ந்த
கதை கூட உண்டு.
முந்தாநாள் 'மூட்டைப்
பூச்சி'
எங்கே தொலைந்தது?


தவறு எங்கே?
தலையைப் பிய்த்துக்
கொள்ளும்
தலைமைகள்
எதுவானால் என்ன
நவாலி நரபலியும்
நாகர்கோவில் நாசமும்
நாளும் பழி தீர்க்கும்

விமானப் படைக்கு - இது
வேனிற் காலமல்ல
அடுத்து,
எங்கே? எப்போது?
நெருடும் வினா மட்டும்
நித்தம் கொல்லும்.

- சோதியா (நோர்வே)



தன்னியக்கஉளவு விமானம்



வை - 12








T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 208
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katharine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 108
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 382 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingsbacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224